
# கல்கி

KALKI
28.5.2000
ரூ. 5.00





ராமேஸ்வரத்திலிருந்து நேரடி ரிப்போர்ட்!

# குவியும் அகதிகள்; குமுறும் கடற்படை!

# பவர்ஃபைனான்ஸ்

**தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்**

## பாதுகாப்பான முதலீடு

## நிலையான வருமானம்

### சிறப்பம்சங்கள்

- ★ பாரத ரிசர்வ் வங்கியில் வங்கிசாரா நிதி நிறுவனமாக எண். 07.00389 மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ★ வட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
- ★ மாதாந்திர வட்டி 36, 48, 60 மாதங்களுக்கு பெறப்படும் வைப்புத் தொகைக்கு மட்டும் வழங்கப்படும்.
- ★ வட்டி காசோலைகள் ரூ. 10,000/- வரை இந்தியாவில் உள்ள குறிப்பிட்ட பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகளில் மாற்றத்தக்க வகையில் அளிக்கப்படும்.
- ★ வைப்பீட்டாளர்கள் விருப்பத்தின் பேரில் ஒவ்வொரு நிதி ஆண்டு முன்தேதியிட்ட வட்டி காசோலைகள் ரூ. 10,000/- வரை அளிக்கப்படும்.
- ★ வருமானவரி சட்டப்பிரிவு 1961, பிரிவு 80L-ன் கீழ் வரிச்சலுகை பெறலாம். (ரூ. 12,000/- வரை)
- ★ CRISIL நிறுவனம் நிரந்தர வைப்பு நிதித்திட்டங்களுக்கு முழுமையான பாதுகாப்பை குறிக்கும் வகையிலான FA(+) மதிப்பீடு வழங்கியுள்ளது.
- ★ வெளியூர் வைப்பீட்டாளர்கள் வைப்புத் தொகைகளை வங்கி வரைவோலையாக, சென்னையில் பெறப்படும் வகையில் வங்கித் தரகை கழித்து அனுப்பலாம்.
- ★ எமது நிறுவனத்தில் அறநிலையங்கள் செலுத்தும் வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டிக்கு வருமான வரிச்சட்டம் 1961, பிரிவு 11(5) (vii)-ன்படி வருமான வரிவிலக்கு உண்டு.

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்**
**அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)**
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)
பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4367689, 4365648. ஃபேக்ஸ் : 044-4362894
மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in
Visit us at: www.tnpowerfinance.com / www.tninfrafinance.com

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinal.com

# “விலங்குகளால் கால்ஷீட் பிரச்னை இல்லை!”

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com









— இயக்குநர் ராமநாராயணன் பேட்டி

“சினிமாவில் பெரிய பாடலாசிரியனாகப் புகழ் பெற வேண்டும் என்ற லட்சிய வெறியுடன் சென்னை வந்தேன். கண்ணதாசனிடம் உதவியாளனாகச் சேர்ந்தேன். அவரது திறமைக்கு முன்னால் பஞ்சு அருணாசலம் போன்ற திறமையாளர்கள் கூட மௌனமாக இருந்தனர். இப்படியொரு நிலையில் பாடலாசிரியர் கனவை மறந்துவிட்டு, டைரக்ஷன் துறைக்குத் தாவினேன்” என்று தொடங்கினார் நூறு படங்களை இயக்கி முடித்திருக்கும் இயக்குனர் ராம நாராயணன்.

சமீபத்தில் ஒரே மாத இடைவெளியில் இவரது மூன்று படங்கள் (ராஜகாளி அம்மன், திருப்பதி ஏழுமலை...., சுந்தரா



கடம்பா) வெளியாகி, தமிழ் ரசிகர்களைத் 'திக்குமுக்காட' வைத்திருக்கிறது. மாதப் பத்திரிகை மாதிரி மாத சினிமா தரும் இந்த அதிவேக இயக்குநரைச் சந்தித்தோம்.

**"சாண்டோ சின்னப்பா தேவருக்குப் பின் அவரது இடம் காலியாக இருக்கிறதே என்றுதான், விலங்குகளை வைத்துப் படமெடுக்கத் தொடங்கினீர்களா?"**

"சமுதாய நோக்கமுள்ள பல படங்களை நான் தொடக்கத்தில் எடுத்திருக்கிறேன். நானும் இயக்குனர் காஜாவும் இணைந்து ராம் - ரஹீம் என்ற புனை பெயரில் இயக்குநர் துரை இயக்கிய 'ஆசை அறுபது நாள்' படத்திற்கு முதன்முதலில் கதை வசனம் எழுதினோம். அப்போது அரங்கேற்றம், அவள் ஒரு தொடர் கதை போன்ற படங்களை எடுத்து எங்களைப் பெரிதும் பாதித்தார் கே. பாலசந்தர். அடுத்து ரஜினிகாந்த் நடித்து, சென்சாரில் பெரும் பிரச்னைகளை உண்டாக்கிய 'ரகுபதி ராகவ ராஜாராம்' படத்திற்குக் கதை வசனம் எழுதினோம். இப்படித் தொடங்கிய சினிமா வாழ்க்கையில், காலஞ்சென்ற இயக்குனர் ராஜசேகரும், நானும் இணைந்து பல படங்களைத் தயாரித்தோம். நான் இயக்குனராக நினைத்து, தயாரிப்பாளராக மாறினேன். அடுத்து நானும் காஜாவும் இணைந்து கதை, வசனம் எழுதிய ஒரு விடுகதை, ஒரு தொடர்கதை படத்தை காஜாவே இயக்க, அது மிகப் பெரிய வெற்றி பெற்றது. "உங்கள் நண்பர்கள் எல்லோரும் இயக்குநராகி விட்டனர். நீங்கள் மட்டும் தயாரிப்பாளராக இருந்தால் எப்படி?" என்று நண்பர் கருமாரி கந்தசாமி என்னை இயக்கத்திற்கு இழுத்தார். 1981-ல் 'சுமை' என்ற படத்தை இயக்கினேன். அதை ஒரு கலைப்படமாகவே எடுத்தேன். அந்தப் படம் பரபரப்பாகப் பேசப்பட்டது. பத்திரிகைகள் பாராட்டின. எம்.ஜி.ஆர் அரசு அந்த ஆண்டின் சிறந்த படமாக அதைத் தேர்ந்தெடுத்து இரண்டு லட்ச ரூபாய் பரிசு கூடக் கொடுத்தார்கள். 'சுமை' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, ஏவி.எம். அவர்கள் என்னை காரைக்குடிக்கு அழைத்து 'சிவப்பு மல்லி' படத்தை இயக்குமாறு கூறினார்கள். எழுச்சி மிக்க கம்யூனிஸப் படம் அது. அந்தப் படத்தைத் தொடர்ந்து அதே பாணியில் படம் வேண்டும் என தயாரிப்பாளர்கள் கேட்டதால் 'பட்டம் பறக்கட்டும்', 'சிவந்த கண்கள்' எனப் பல படங்களை இயக்கினேன். இந்தப் படங்கள் மூலம் புகழ் கிடைத்தது. ஆனால் பணம் கிடைக்கவில்லை. பெயரை மட்டும் வைத்துக்கொண்டு, சினிமாவில் வாழ முடியாது என்ற நிலை வந்த பிறகுதான், வணிக ரீதியான படங்களை எடுக்க முடிவு செய்தேன். அதன் தொடக்கமாக 'இளஞ்ஜோடிகள்' என்ற படத்தை எடுத்தேன். மிகப் பெரிய வெற்றி அடைந்தது. இளஞ்சோடிகள் போன்ற பாதுகாப்பான காதல் படங்களை எடுத்துத் தரும்படி தயாரிப்பாளர்கள் கேட்டனர். எனவே 'கண்ணே ராதா' 'தீராத விளையாட்டுப் பிள்ளை' போன்ற படங்களை எடுத்துத் தள்ளினேன். காதல் சீசன் முடிந்ததும் திருட்டு ராஜாக்கள், காவல் கைதிகள், சீறும் சிங்கங்கள் போன்ற காமிக்ஸ் பாணிக் கதைகள். இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் பலவிதமான படங்களை வெரைட்டியாக நான் எடுத்திருக்கிறேன். ஒரே டைப்பில் இது வரை நான் படம் எடுத்ததில்லை."

**"ஆனால் நீங்கள் இயக்கத் துவங்கி சில படங்களே வெளி வந்த நிலையில், அப்போதே 'பௌர்ணமி நிலவில்' என்று பாம்பை வைத்து ஒரு படம் எடுத்தீர்களே?"**

"உண்மைதான். அந்தப்படம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என்று பல மொழிகளில் ஓஹோ என்று ஓடியது. ஆனாலும் அப்போது அதுபோன்ற படங்களை நான் தொடர்ந்து எடுக்க விரும்பவில்லை. ஆனால் தேவருக்குப் பிறகே முழுமையாக இறங் கினேன். அப்படி எடுத்த முதல் படம் வேங் கையின் மைந்தன். மிகப் பெரிய வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து பல படங்கள்."

**"நடிகர்களை விடவும், மிருகங்கள் நன்றாக நடிக்கின்றன என்று முடிவு செய்து மிருகங்களை வைத்துப் படமெடுக்கிறீர்களா?"**

(சிரிக்கிறார்) "அப்படியெல்லாம் இல்லை. விலங்குகளுக்கு நடிக்கத் தெரியாது. அவை நடிப்பது போலக் காட்டுகிறோம். அவ்வளவு தான். ஆனாலும் விலங்குகளால் கால்ஷீட் பிரச்னை இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்."

**"முப்பதே நாட்களில் உங்களால் எப்படிப் படமெடுக்க முடிகிறது?"**

"எடிட்டிங்தான் காரணம். படப்பிடிப்பு செல்வதற்கு முன்பு, ஸ்க்ரிப்டிலேயே, தேவையில்லாத காட்சிகளை வெட்டி விடுவேன். இரண்டரை மணி நேரம் ஓடக்கூடிய படத்திற்கு அறுபது காட்சிகளுக்கு மேல் ஷூட் செய்ய மாட்டேன். இஷ்டத்திற்குக் காட்சிகளை எடுத்து வந்து, பின்பு வெட்டித் தள்ளுதல் எனக்குப் பிடிக்காது. காரணம் ஒவ்வொரு காட்சி எடுக்கிறபோதும், பணம் போடும் புரொடியூசர்கள்தான் என் கண் முன் தோன்றுவார்கள்!"

**"ரசிகர்களைப் பற்றி உங்களுக்குக் கவலையே கிடையாதா?"**

"ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் எந்தப் படமும் ஓடாது. ரசிகர்களால் ஒரு படம் நிராகரிக்கப்பட்டால், ரசிகர்களைப் பற்றிக் கவலைப்படாமல் எடுக்கப்பட்ட படம் அது என்பதை அறிந்து கொள்ளலாம்."

**"தி.மு.க சட்டமன்ற உறுப்பினராக, சிறிது காலம் பதவி வகித்தீர்கள். உங்கள் தொகுதிக்கு நீங்கள் ஆற்றிய பணிகள் என்று ஏதேனும் உண்டா?"**

"முதல்வர் கலைஞர் தலைமையிலான அந்த அரசு இரண்டரை ஆண்டுக் காலமே பதவியில் இருந்தது. அப்போது படமெடுப்பதையே நிறுத்திவிட்டு எனது தொகுதியான காரைக்குடிக்கும் சென்னைக்கும் அலைந்து கொண்டிருந்தேன். கவியரசு கண்ணதாசனுக்கு நாற்பது லட்ச ரூபாய் செலவில் மணி மண்டபம் அமைத்தோம். தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்னை, சுகாதாரப் பிரச்னை எனப் பல பிரச்னைகளைத் தீர்க்க உழைத்தேன். ஆனால் தீவிரமாகச் செயல்படும் முன்பு ஆட்சியைப் பறித்து விட்டார்கள்!"

**"முதல்வர் உங்களது படங்களைப் பார்த்துப் பாராட்டியிருக்கிறாரா?"**

"எனது 'சிவப்பு மல்லி' படத்தைப் பார்த்துப் பாராட்டியதோடு தமது பூம்புகார் பட நிறுவனத்திற்கு ஒரு படத்தை இயக்கித் தரும்படிக் கேட்டார். தெலுங்கில் 'ஈநாடு' என வெற்றிகரமாக ஓடிய அரசியல் படமொன்றின் மூலக்கதையை மட்டும் வாங்கி, 'இது எங்க நாடு' என்ற படமாக எடுத்தேன். முதல்வரோடு நட்பு தொடங்கியது அப்போதுதான். அதன் பிறகு பூம்புகார் பட நிறுவனத்திற்காகப் பல படங்களை இயக்கியிருக்கிறேன்."

**"கடந்த மூன்றரை ஆண்டுகளாகத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவராக செயல்பட்டு வருகிறீர்கள். கடந்த ஆண்டு மட்டும் எழுபத்தைந்து பேருக்குக் கலைமாமணி விருது வழங்கப் பட்டிருக்கிறது. கலைமாமணியை இப்படி சுண்டல் போல் விநியோகிப்பது சரியா?"**

"தகுதியான கலைஞர்களைப் பாராட்டுவதில் எந்தத் தவறும் இல்லை என்று நினைக்கிறேன். கலைமாமணி விருது வழங்கும் முன், தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கக் குழு அமைத்திருக்கிறோம். பல்வேறு தகுதிகளையும் சாதனைகளையும் பொறுத்தே விருது வழங்குகிறோம். கடந்த ஆண்டு முதல்வரின் எழுபத்தைந்தாவது பிறந்தநாள் வந்தது. அதை முன்னிட்டே எழுபத்தைந்து பேருக்கு விருது வழங்க முடிவு செய்தோம். இந்த ஆண்டு ஐம்பது பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது."

**"திரையுலகில் உங்கள் சாதனை என்று எதைச் சொல்வீர்கள்?"**

"எல்லோரும் நூறு படம் இயக்கிவிட்டேன் என்று சொல்கிறார்கள். ஆனால் அதை நான் சாதனையாகக் கருதவில்லை. ஒரியா, பெங்காலி, மராட்டி போன்ற இந்திய மொழிகளில் எனது கதைகளைப் படமெடுத்தேன். அதை அங்குள்ள மக்கள் அமோகமாக வரவேற்றார்கள். எனக்கு ஆத்ம திருப்தியைக் கொடுத்த சாதனை என்று இதைச் சொல்லுவேன். மற்றபடி இருபத்து இரண்டு வருஷமாக நான் தொடர்ந்து இயக்குனராக இருப்பது எனக்கே ஆச்சரியமான ஒன்று."

சந்திப்பு: **விஷுவல்தாசன்**
படங்கள்: **வெங்கடேஷ்**

---

**அண்மையில் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்திருந்த பெண்கள் குழுவின் முக்கியமான விருப்பம், ஹ்ர்திக் ரோஷனைச் சந்தித்து, அளவளாவ வேண்டும் என்பதே! ஆனால், பாகிஸ்தானியக் குழுவுக்கான இந்திய ஒருங்கிணைப்பாளர்களால், ஹ்ர்திக் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை. பாக் குழு பெண்மணிகளுக்கு சோகமான சோகம். கடைசியில், ஹ்ர்திக் நடித்த கஹோனா ப்யார் ஹை படத்தைப் பிரத்யேகமாகத் திரையிட்டுக் காட்டினார்கள்!**

**— எம்**



# ராமேஸ்வரத்திலிருந்து ஸ்பெஷல் ரிப்போர்ட்!

அந்த நான்கு பேரில் ஒருவர் ஒரிஸ்ஸாக்காரர். இன்னொருவர் மகாராஷ்டிரர். மீதி இருவரும் சேர நன்னாட்டினர். அனைவரிடமும் துப்பாக்கி இருக்கிறது. இரண்டு கிலோ மீட்டர்கள் வரை கண்காணிக்கக்கூடிய சக்திமிக்க பைனாகுலர் இருக்கிறது. ஓரிரு பாத்திரங்கள். தேயிலைத் தூள், பாக்கெட் ரொட்டி. மண்பானையில் குடிநீர்.

ராமேஸ்வரத்திலிருந்து சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் கடல் கொண்ட தனுஷ்கோடியின் புதைமணல் திட்டில் எட்டடி பரப்பில் ஒரு சிறு கூடாரம் அடித்து அமர்ந்து, ஒரு நாளின் அத்தனை மணி நேரத்தையும் கடல் பரப்பைக் கண்காணிப்பதிலேயே செலவிடும் இவர்களுக்கு ஒரே தோழன், பாக்கெட் டிரான்சிஸ்டர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் தமிழ்ச்





• இலங்கையில் போர் தீவிரமடைந்துள்ளதால் (மேலே) இங்கு வந்து சேரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (வலது) இந்தியக் கடற்படைக்கு இதில் பாதுகாப்புப் பிரச்னை நிறைய. (இடது)



# குவியும் அகதிகள்; குமுறும் கடற்படை!

சேவையில் போர்க் காலத்தில் கூட டூயட் பாடல்கள் ஒலிபரப்பாவது பற்றி ஜோக்கடித்துக் கொண்டே பைனாகுலரில் கடலை நோட்டமிட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

இந்தியாவுக்கும் இலங்கை, தலைமன் னாருக்குமான பதினெட்டுக் கிலோ மீட்டர் தூரத்துக்கிடையில் ஆறு மணல் திட்டுகள். முதல் மூன்று திட்டுகள் மட்டுமே தனுஷ்கோடி முனையி லிருந்து தெரிகின்றன நமக்கு. "எங்கள் கண்ணுக்கு நான்கு திட்டுகள் தெரியும்" என்றார் திலீப்குமார். கடற் படைச் சேவையில் பத்தாண்டுகளுக் கும் மேலாக இருந்து வரும் கேரளாக் காரர்.

எப்போதாவது மட்டும் வந்து, சில நிமிடங்களில் திரும்பிவிடும் டூரிஸ்ட் டெம்போக்களைத் தவிர, வேறு மனித வாசனை இல்லாத பிரதேசம் அது. இப்போது அடிக்கடி பத்திரிகையாளர்கள் வருகிறார்கள். கேமராவை வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் தவம் கிடக் கிறார்கள், நம்மைப் போல.

தலைமன்னாரிலிருந்து அகதிகளை ஏற்றி வரும் இலங்கை விசைப் படகுகள்,



படம்-நன்றி தினமலர்



• கைப்பற்றப்பட்ட இலங்கைப் படகுகள்.

இந்தியக் கடல் எல்லையை நெருங்கியதும் தனுஷ்கோடிக்கு வருவதில்லை. அந்த நான்காவது, மூன்றாவது மணல் திட்டுகளை நோக்கித் திருட்டுப் பாய்ச்சலில் சென்று இறக்கி விட்டு விட்டு, ஓடியே போய் விடுகின்றன. காரணம், இந்திய ராணுவச் சட்டம் நம்மை விட அவர்களுக்கு அத்தனை அத்துபடி.

அகதிகளை ஏற்றிக் கொண்டு படகு வந்தால், அவர்கள் பத்திரமாகக் கரை இறங்கவும், பாதுகாப்பாக முகாம்களுக்குச் செல்லவும் உதவ வேண்டியது, கடற்படை - கடலோர காவல் படையினரின் தலையாய கடமை.

ஆனால், அகதிகள் பாதுகாப்பாக இறக்கி விடப்பட்ட பின், இந்தியக் கடல் எல்லைக்குள் 'அத்து மீறி' நுழைந்த அந்நியப் படகையும் அதன் டிரைவரையும் கண்டபடி சுட்டு வீழ்த்தி விடுவார்கள்.

ஒரு நபருக்கு நாலாயிரம், ஐந்தாயிரம் என்று பயணக் கட்டணமாகப் பெறும் இலங்கைப் படகு ஓட்டுநர்களின் உயிருக்கு நித்ய கண்டம்தான். அதனால்தான் அவர்கள் சில பிரத்தியேக உத்திகளைக் கையாளுகிறார்கள்.

கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களின் படகுகள் மொத்தமாகத் திரும்பும் நேரத்தைக் கணக்கிட்டே அவர்கள் தம் பயணத்தை வகுத்துக் கொள்கிறார்கள். இந்தியப் படகுகளின் பின்னால் ஒளிந்து கொண்டபடியே தம் படகைச் செலுத்தி வருகிறார்கள். அதுவும் பெரும்பாலும் மாலை நேரங்களில், கடல் அவ்வளவாக அமைதியாக இல்லாத சமயத்தில் மட்டும்.

நமது படகுகள் நம் நிலப்பரப்பை (ராமேஸ்வரம், பாம்பன் பகுதிகள்) நோக்கி வரவும், அவர்கள் பதுங்கிப் பதுங்கி, தனுஷ்கோடிக்கு அப்பால் உள்ள அந்த மணல் திட்டுகளுக்குச் சென்று இறக்கி விட்டு விட்டுக் காற்றோடு போய் விடுகிறார்கள்.

**வே**றொரு உத்தியும் கையாளப்படுவதுண்டு.

இந்திய எல்லைக்குள்தான் மீன் பிடிக்கச் செல்ல வேண்டும் என்கிற சட்டமிருந்தாலும் நம் மீனவர்கள் யாருமே அதைப் பொருட்படுத்துவதில்லை. இதை அவர்களே வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவும் செய்கிறார்கள். (''நம்ம கடல்ல கல்லும் மண்ணும்தான் இருக்கு. மீனெல்லாம் கச்சத் தீவுக்கு அந்தண்டதான்'' என்றார் மீனவரான ரமேஷ்.)

இப்படி இந்தியக் கடல் எல்லை தாண்டி இலங்கைக் கடல் பரப்புக்குச் செல்லும் மீனவர்களை வழியில் மடக்கி, மூவாயிரம் - நாலாயிரம் ரூபாய் வரை கொடுத்து, அவர்களது படகிலேயே அகதிகள் ஏறி வருகிறார்கள்.

'நடுக்கடலில் அல்லாடிக் கொண்டிருந்த' அகதிகளை மீட்டு அழைத்து வந்ததாக இவர்கள் போலீஸில் சொல்லி விடுவது வழக்கம்.

“**இ**ந்திய அமைதிப்



• பிரணவானந்தா

"உடனடியாக வீடு கட்டவோ அல்லது விரைவான முதலீட்டு லாபமோ"
எப்படியானாலும் இது ஒரு புத்திசாலித்தனமான முதலீடு.

# சிறந்த வீட்டு மனைகள் நியாயமான விலையில்

## சிந்து நகர், சென்னை-600 056.

(சவீதா டேண்டல் காலேஜ் அருகில்) **CMDA** அப்ருவ்டு மனைகள் நே. 65/99

- அமைந்துள்ள இடம் ✔
- மாநகருக்கு மிக அருகில் ✔
- பாதுகாப்பு ✔
- முதலீடு செய்யும் பணத்துக்கு தகுந்த மதிப்பு ✔
- வேகமாக உயரும் நில மதிப்பு ✔



### சிறப்பு அம்சங்கள்

● உடனே வீடு கட்டலாம் / அருகில் வீடுகள். ● கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம். ● அண்ணா நகரிலிருந்து 15 நிமிட பயணம். ● சுலபமான மூன்று வழிப் பாதைகள். கிண்டி, செயிண்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை. அரும்பாக்கம், கோயம்பேடு, மதுரவாயில் 100 அடி சாலை / அம்பத்தூர், ஆவடி 60 அடி சாலை. ● சென்னை-பெங்களூர் (NH4) தேசிய நெடுஞ்சாலை. ● கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம். ● தாம்பரம்-வானகரம் புறவழிச் சாலை. ● மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி. ● மெடிக்கல், டெண்டல், இஞ்சினியரிங், கேட்டரிங் ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில். ● சுவையான / மிருதுவான நிலத்தடிநீர். ● சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம். ● உடனடி பத்திரப் பதிவு.

### BLBயின் உறுதி செய்யப்பட்ட சேவை. (விற்பனைக்கு பின்)

● 5 வருடங்களுக்கு மனை பாதுகாப்பு சேவை. ● பத்திரப் பதிவுக்கு பின் தனிப் பட்டா ஏற்பாடு (பட்டா செலவு தனி) ● வீடு கட்டும் பட்சத்தில் BLB மூலமாக கட்டுமானப் பணி ஏற்பு. ● வீடு கட்ட கடன் வசதி ஏற்பாடு.

**தவணை முறை கிடையாது**

**மனையை பார்வையிட இலவச வாகன வசதி தினமும்**
**காலை 7.00 மணி 11 மணி மாலை 3.00 மணி**

**Tel : 435 7721 / 31 / 61 / 81. Telefax : 4353183 Cell : 98400 44018**

BLB
PLEDGED TO ETHICS

## BLB Estates (P) Ltd.

S-3, "Ramana Flats", Rathna Nagar, Off : Anna Salai,
**Teynampet, Chennai - 600 018.**
(Behind Apollo Cancer Hospital)

**வர்த்தகத்தில் நேர்மை; பணியில் பொறுப்பு**

படை இலங்கையிலிருந்து திரும்பிய பிறகு, அங்கிருந்து அகதிகள் வரத் தொடங்கி விட்டார்கள். அவர்களுக்கு வேறு வழி உண்டா, இல்லையா என்கிற கேள்வி ஒருபுற மிருக்க, அகதிகளை வரவேற்று, இங்கு வாழ வைக்க, - அதுவும் தொடர்ந்து, பத்தாண்டுகளுக்கும் மேலாக - நம் மாநில அரசிடமோ, மத்திய அரசிடமோ சக்தி இல்லை. ராமேஸ்வரம் நகருக்கான வளர்ச்சி நிதி என ஒதுக்கப்படும் அத்தனை பணமும் மண்டபம் அகதி முகாமுக்குத்தான் போகிறது!'' என்றார் ராமேஸ்வரம் கடற்படை அலுவல கத்தில் நாம் சந்தித்த கமாண்டர் ஃபிரான்சிஸ்.

''அகதிகள் வருகையை நிறுத்த முடியாவிட்டாலும் குறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டே ஆக வேண்டி யிருக்கிறது'' என்கிறார் பிரான்சிஸ்.

கடற்படைக்கு அகதிகள் வருகை ஒரு பிரச்னை அல்ல. அவர்களது கவலையெல்லாம் அகதிகளுடன் கலந்து நுழைந்து வரும் தீவிரவாதிகளைப் பற்றியதுதான்.

''அவர்களைக் கூட்டத்தில் இனம் கண்டு, பிரித்தெடுப் பது என்பது கஷ்டமான காரியம். மிக நீண்ட விசாரணை யில் பிரத்தியேகமான சில உத்திகளைக் கையாண்டே கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது'' என்கிறார்.

சில எளிய வழிமுறைகளையும் கடற்படை கமாண்டோக்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். உதாரணமாக, 'பாட்டா' நிறுவனம் தயாரிக்கும் கறுப்பு நிற ஹவாய் ரகச் செருப்புகளைத்தான் விடுதலைப் புலிகள் பயன்படுத்துவார் கள். ஆகவே, அகதிகளாக வந்திறங்கு வோரின் கால்களைத்தான் இந்திய





• குகன்

## "இது கஷ்டகாலம்!"

மண்டபம் அகதிகள் முகாமில் நாம் சந்தித்த பல இலங்கைத் தமிழர்களுள் வெளிப்படையாகப் பெயரும் புகைப்படமும் வெளியாக ஒப்புக் கொண்டு பேசியவர்கள், குகன், ஸ்ரீஹரன், ஜெயகுமார் ஆகிய மூன்று இளைஞர்கள் மட்டுமே. மூவரும் சமீபத்திய போரினால் பாதிக்கப்பட்டு, தலைமன்னாரிலிருந்து ராமேஸ்வரத்துக்கு அகதி களாக வந்து சேர்ந்தவர்கள்.

நாற்பது பேர் மொத்தமாகப் படகில் வந்து மூன்றாம் திட்டில் இறங்கியதாகச் சொன்ன குகன், அங்கே பதினொன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தவர். இனி தன் படிப்பு-எதிர்காலம் குறித்த கவலை தன் பெற்றோருக்கு மிகுந்துவிடும் என்று வருத்தப்படும் இவர், வருமானத்துக்காக, மண்டபம் முகாம் வாயிலில் ஒரு எஸ்.டி.டி. பூத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்.

போர் தீவிரமடைந்து, விமானத் தாக்குதலில் வீடிழந்தது பற்றிப் பெரிதாக வருத்தப்படவில்லை இவர். ''எப்படியாவது தமிழர்கள் பிரச்னை தீர்ந்தால் சரி'' என்கிறார்.

ஸ்ரீஹரனும் ஜெயகுமாரும் நண்பர்கள்.

போராட்ட வெறி அங்கே தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரமடைந்திருப்பதாகவும் ஆயிரக் கணக்கில் தாமாகவே விடுதலைப் புலிப் படையில் சென்று இணைந்து கொள்வதாகவும் கூறும் இவர்கள், கட்டாயத்தின் பேரில் சிறுவர்களையும் இளைஞர்களையும் புலிகள் ராணுவத்துக்கு இழுப்பதாகக் கூறுவதைக் கடுமையாக மறுக்கிறார்கள்.

''நாங்கள் அறிந்தவரை அப்படி அவர்கள் செய்வதில்லை'' என்கிறார்கள்.

ஆனால், இருதரப்புப் போருக்கு ஒரு முடிவில்லாமல் நீண்டு கொண்டே போவதில்

• நடுக்கடலில் மீனவப்படகுகளை நிறுத்திப் பரிசோதனை...



பெரும்பான்மை மக்களுக்குச் சலிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாகவே இந்தியாவுக்கு வந்துவிடுவதாகச் சொன்னார் குகன்.

''தம் உடைமை இழப்பு அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல; உயிரே போனாலும் பரவாயில்லை; குண்டுச் சப்தம் நின்றால் போதும் என்று நினைக்கிறார்கள்'' என்கிறார் இவர்.


அகதிகள் முகாமில் பிரச்னை ஏதுமின்றித் தம்மால் வாழ முடிவதாக இவர்கள் கூறினாலும் எதிர்காலம் பற்றிய கவலை சூழ்ந்து நிற்பதாகத் தெரிவித்தார்கள்.

''படிப்பு அரைகுறையாக முடிந்துவிடுவதால் பெரிய உத்தியோகங்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டடக்கூலி வேலைகளுக்குத்தான் செல்கிறார்கள், அகதி இளைஞர்கள். இம்மாவட்டத்தை விட்டு வெளியே போவதென்றால் அதற்கு அதிகாரிகள் அனுமதி வேண்டும்.

''மீண்டும் இலங்கை திரும்புவது பற்றியோ, இங்கேயே வாழ்நாளைக் கழித்துவிடுவது பற்றியோ திட்டவட்டமான யோசனைகள் ஏதும் இல்லை. இது கஷ்டகாலம். பட்டுத்தானே ஆகவேண்டும்?'' என்கிறார்கள் விரக்தியுடன். ○



• ஸ்ரீதரன்



• ஜெயகுமார்



• தனுஷ்கோடி எல்லை: இதற்குமேல் கடற்படை கேம்ப்பைச் சென்றடைய டெம்போவில்தான் போக வேண்டும்.

வீரர்கள் முதலில் பார்க்கிறார்கள்.

"எங்களது இந்த உத்தி தெரிந்து, சிலர் வரும் போதே செருப்பைக் கடலில் எறிந்து விடுவார்கள். வேறு சிலர் வந்த பிறகு செருப்பைக் கழற்றி எறிந்து விட்டு ஓட்டம் பிடிப்பார்கள்'' என்று நடுக் கடலில் நின்று, முடிவற்ற நீர்ப்பரப்பைப் பார்வையால் துளைத்தபடியே நம்மிடம் சொன்னார்கள், கடற்படை கமாண்டோக்கள் ராம் மேர் மற்றும் சேகரன். (அட்டைப் படம்).

சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு அகதிகளின் எண்ணிக்கை குறைவாகத்தான் உள்ளது. எனினும் மீடியா வேண்டுமென்றே மிகைப்படுத்துகிறது'' என்றார் லெப்டினன்ட் கமாண்டர் சதிஷ்.

ஆனால், கடற்படை அதிகாரிகளின் புள்ளி விவரங்களைக் கடுமையாக மறுக்கிறார்கள், ராமேஸ்வரத்து மீனவர்கள்.

"தினம் படகு வருதுங்க. இருவது பேருக்குக் குறையறதில்லை. வந்துட்டே இருக்காங்க. இப்பக் கூட தனுஷ்கோடி சப்-இன்ஸ்பெக்டர் சங்கர், பன்னிரண்டு பேரைக் கூட்டிட்டுப் போயிருக்காரு'' என்றார்கள், புது ரோடு ராமகிருஷ்ணா புரத்தில் நாம் சந்தித்த சில மீனவர்கள்.

மண்டபம் அகதி முகாம் நிரம்பி வழிகிறது என்கிற தகவல் ராமேஸ்வரத்தில் ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒலிபரப்பாகிறது. மிகுந்த இரக்கமுடனும் அனுதாபத்துடனும் ஒவ்வொரு இலங்கைத் தமிழரையும் வரவேற்கிறார்கள், ராமேஸ்வரத்து மக்கள். மண்டபம் முகாமின் வெளிப்புறம் நிறைந்துள்ள கடைகளின் சொந்தக்காரர்கள், பெருந்தன்மையுடன், அகதிகளால் கொண்டு வர முடிந்த சோப்பு, சீப்பு தொடங்கி பேனா, பென்சில் வரை – எந்தப் பொருளானாலும் எடுத்துக் கொண்டு சமமான மதிப்புக்கு சமையலுக்குத் தேவையான பொருட்களை வழங்குகிறார்கள். (அரிசி நீங்கலாக – எக்ஸ்சேஞ்ச் ஆஃபர்!)

அகதிகளாக வந்திறங்குவோருக்கு முகாமில் இடமளிப்பதோடு, மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையும், குடும்ப அங்கத்தினர் எண்ணிக்கைக்கேற்ப அரிசியும் அரசே வழங்கி வருகிறது.

"கஷ்டம்தான். ஆயிரக்கணக்கில் அகதிகள் வந்து குவிந்தால் வைத்துப் பராமரிப்பதில் ஏராள சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால், 'வராதே' என்று சொல்ல முடியாதே! எப்போது விரும்பினாலும் திரும்ப இலங்கைக்குப் போகலாம் என்று தான் சொல்லி வைக்கிறோம். ஆனால், பெரும்பாலானோர் போக விரும்புவதில்லை'' என்றார், பெயர் வெளியிட விரும்பாத ஒரு அகதி முகாம் அரசு ஊழியர்.

"அங்க வாழ முடியாமத்தானே இங்க வாரம்? இதுவும் நம்ம மண்ணுதான்னு எண்ணுவதனால்தானே நம்பிக்கையோட இருக்கம்? பின்ன திரும்பிப் போறது எப்படி?'' என்று கேட்டார் கிருபாகரன் என்கிற யாழ்ப்பாணத்து இளைஞர்.

மண்டபம் முகாமுக்கு அழைத்துவரப்படும் அகதிகளைச் சந்திப்பதிலும் உரையாடுவதிலும் மீடியாவுக்குப் பெரும் பிரச்னைகள் இருக்கின்றன.

இந்த முகாமுக்கென்றே சிறப்புத் துணை கலெக்டர் ஒருவரும் அவருக்கான அலுவலகமும் முகாமின் வாயிலிலேயே இருக்கிறது.

ஆனால் எந்தத் தகவலும் இங்கே யாருக்கும் தரப்படுவதில்லை. ("பி.பி.சி. காரனுங்களையே திருப்பி அனுப்பிச்சிட்டமில்லே?")

## ADMISSION NOTIFICATION

# NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT (NILEM)

**Offers the following six months Diploma Courses by Correspondence.**

- TOTAL QUALITY MGMT. & ISO 9000
- BUSINESS MANAGEMENT
- PERSONNEL MGMT. & INDUSTRIAL RELATIONS
- HUMAN RESOURCES DEVELOPMENT
- ENVIRONMENT & POLLUTION CONTROL
- BUSINESS ADMINISTRATION
- QUALITY CONTROL & ISO 9000
- INDUSTRIAL SAFETY
- PRODUCTION MANAGEMENT
- SALES & MARKETING MANAGEMENT
- FINANCIAL MANAGEMENT
- OFFICE ADMINISTRATION
- LABOUR LAWS
- MATERIALS MANAGEMENT
- EXPORT & IMPORT MANAGEMENT
- QUALITY ASSURANCE & QS 9000
- ENVIRONMENTAL MGMT. & ISO 14000/14001

No formal qualification is required for joining the Courses. Each diploma has 4 written papers. Tuition Fee Rs. 700/- (including Study Materials & Model Question Papers). Examination will be conducted in all major centres in India. For detailed Prospectus & Application Form send Rs. 30/- by D.D./I.P.O. in favour of **NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT** and apply to **NILEM** No. 59, Second Street, Parameswari Nagar, Adyar, Chennai - 600 020. Ph : 044 - 4911443.

# தேவேந்திரா சாரீஸ்

**H.O. :** 7, ஏலா கந்தப்பன் தெரு, சென்னை - 600 003.
போன் : 5350213
**B.O. :** கடை எண் 7, ராம்ஸ் பஜார், பனகல் பார்க்,
சென்னை - 600 017. போன் : 8283367

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

*நாங்கள் ஒன்பது கலர்களில்*
*(கருப்பு கலக்காமல்)*

பல டிசைன்களில் புதிய புடைவைகளை தயாரித்து விற்பனைக்கு வரவழைத்துள்ளோம். வாடிக்கையாளர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வாடிக்கையாளர்கள் KRD என்ற 'Trade Markஐ கவனித்து வாங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



• தனுஷ்கோடி கடற்படை கேம்ப்



• கமாண்டர் பிரான்ஸிஸ்

ராமநாதபுரம் கலெக்டர்தான் எதற்கும் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லி விடுகிறார்கள், இந்த அலுவலகத்தில்.

கலெக்டர் அலுவலகத்தை அணுகுவோருக்குக் கிடைக்கிற பதில்: "சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து அனுமதி பெற்று வாருங்கள்."

ஆகவே, முகாமிலிருந்து கடைகளுக்குச் செல்லவென வெளியே வருபவர்களிடம் மட்டுந்தான்- அதுவும் அவர்கள் விரும்பினால் பத்திரிகையாளர்கள் பேச முடிகிறது. (அப்படி நாம் சந்தித்து, பேச முடிந்த மூன்று இலங்கைத் தமிழ் அகதி இளைஞர்கள் கூறியவற்றின் தொகுப்பு- தனியே, பெட்டிச் செய்தியில்.)

"எப்படிப் பேச விடுவாங்க? மாட்டாங்க! அத்தனை பேரும் அயோக்கிய வேலை இல்லே செஞ்சிட்டிருக்காங்க? எத்தனை ஊழல்! அநியாயம் பண்ணிட்டிருக்காங்க தெரியுமா?" என்று கொதித்தார் ராமேஸ்வரத்தில் நாம் சந்தித்த சுவாமி பிரணவானந்தா என்கிற துறவி.

மிக வெளிப்படையாக எல்.டி.டி.ஈ.யினரின் செயலை நியாயப்படுத்தியும், இந்திய-தமிழக அரசு ஆட்சியாளர்களை விமர்சித்தும் கடுமையாகப் பேசும் இவர், விரைவில் கைது செய்யப்படலாம் என்கிற பேச்சு ராமேஸ்வரத்தில் நிலவுகிறது.

தமிழகத்திலுள்ள புலி ஆதரவு இயக்கத்தினர் பலருடன் நேரடித் தொடர்புள்ளவர் என்று சொல்லப்படும் இவர், அகதிகளாக வந்து சேரும் இலங்கைத் தமிழரை கடற்படை அதிகாரிகள் சரியாக நடத்துவதில்லை என்கிற குற்றச் சாட்டை பகிரங்கமாக முன் வைக்கிறார். தமது ஆதரவாளர்களுடன் தனுஷ்கோடியைத் தாண்டி, அகதிகள் வந்திறங்கும் நான்காவது, மூன்றாவது திட்டுகளுக்குத் தடை மீறிச் சென்று உணவுப் பொருட்கள், மருந்துகள் வழங்கவிருப்பதாகவும் நம்மிடம் சொன்னார் இவர்.

"மனிதாபிமான அடிப்படையில் அகதிகளுக்கு உதவுவதாக அரசு சொல்கிறது. ஆனால் இங்கே எந்த அதிகாரி மனிதாபிமானத்துடன் நடந்து கொள்கிறார்கள்? திட்டுகளில் வந்திறங்கும் தமிழர்கள் சோறு தண்ணீர் இல்லாமல் அல்லாடுகிறார்கள். விசாரணை என்ற பெயரில் நேரம் கடத்தியேதான் அன்று ஒரு குழந்தை இறந்து போனது. அந்தத் திட்டுக்குப் போய்ப்பாருங்கள். ரத்தக் கண்ணீர் வந்து விடும். ஒரு வசதியும் இல்லாத வெறும் மணல் வெளி! அங்கே முப்பது மணி நேரம், நாற்பது மணி நேரம் மக்கள் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். கேட்டால், தீவிரவாதிகள் கலந்து வந்திருக்கிறார்களா என்று பரிசோதிக்கிறார்களாம்! மீனவர்களுக்கு உள்ள மனிதாபிமானம்கூட நம் கடற்படையினருக்கு இல்லை" என்றார் பிரணவானந்தா.

"தமிழன் என்கிற உணர்வுள்ள எவரும் புலிகளை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அங்கு நடப்பது அறப் போர். நம்மாலான வரை அதற்கு உதவித்தான் ஆக வேண்டும்" என்றெல்லாம் மிக வெளிப்படையாகவே புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் 'இந்தச்

சாமியார், உள்ளூர் மீனவர்களில் ஒரு பகுதியினரின் (சுமார் ஆயிரம் பேர் இருப்பார்கள் என்கிறார்கள்) விசுவாசத்தைப் பெற்றிருக்கிறார். அவர் என்ன சொன்னாலும் கேட்கத் தயாராக இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள்!

“பிரச்னையை மிகவும் உணர்ச்சிவசப்பட்டே பார்க்கிறார்கள், பெரும்பாலான மக்கள். ஆனால், ஆயிரம் அகதிகளை வைத்துப் பராமரிப்பதில் உள்ள சிக்கலை விட, ஒரு விடுதலைப்புலி நுழைந்துவிட்டால் உண்டாகும் கஷ்டம் அதிகம் என்பதை யாரும் யோசிப்பதேயில்லை” என்று வருத்தமுடன் குறிப்பிட்டார் ஒரு கடற்படை அதிகாரி.

ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கப் போகும் படகுகளைக்கூட நடுக்கடலில் நிறுத்தி விசாரிக்கிறது கடற்படை. அவர்களின் லைசென்ஸ், ஆர்.சி.புக் உள்ளிட்ட சம்பிரதாயங்களைச் சரி பார்ப்பதோடு, படகிலுள்ள டீசல் அளவு வரை துருவித் துருவி அளக்கிறார்கள்.

“ஏழைகளாக உள்ள மீனவர்களைத்தான் இலங்கைப் படகு ஓட்டுநர்களும் சரி, விடுதலைப்புலிகளும் சரி- தமது காரியங்களுக்குச் சுலபமாக ‘வளைத்து’ப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பணத்தின் மூலம் வசப்படுத்துவது ஒருபுறம் என்றால் தமிழன், தமிழன் என்று உணர்வு ரீதியிலும் மூளைச் சலவை செய்து, தேச விரோதக் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள்” என்றார் கடற்படை கமாண்டோ ஒருவர்.

யாழ்ப்பாணத்தில் போர் எவ்வழி போனாலும் ஜூன் இறுதிக்குள் இந்தியா வந்து சேரப்போகும் அகதிகளின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரமாக உயர்ந்தே தீரும் என்று உறுதியாகச் சொல்கிறார்கள், மண்டபம் முகாமின் வெளியில் நாம் சந்தித்த பல (பெயர் வெளிவரவிரும்பாத) இலங்கைத் தமிழர்கள்.

கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பினும் அது கடத்தல், தீவிரவாதிகள் ஊடுருவலை வேண்டுமானால் கட்டுப்படுத்துமே தவிர அகதிகளை வரவிடாமல் செய்ய முடியாது. காரணம், வோட்டு தொடங்கி நமது அரசியல்வாதிகளுக்கு இவ்விஷயத்தில் பலப்பல பிரச்னைகள் இருக்கின்றன.

ராமேஸ்வரத்திலிருந்து:
**ஔரங்கசீப்**
அட்டை வண்ணப்படம்;
படங்கள்: **வெங்கடேஷ்**


## சட்டை செய்யுமா மின் வாரியம்?

மின் வாரியத்திலிருந்து ஓய்வு பெற்ற ஸீனியர் சிட்டிசன்கள் சமீபத்தில் வாரிய அலுவலகம் முன் சட்டையில்லா போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். இவர்களுடைய 16 அம்ச கோரிக்கைகளில், ‘ஓய்வு பெற்றவர்களுக்கும், பணியிலிருந்தோர் இறந்தால் அவருக்கான ஈமச் சடங்கிற்கும் 5000 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்பதும் ஒன்று. “ஓய்வு பெற்றவர்களை மிகவும் கேவலமாக நடத்துகிறது மின் வாரியம். எங்கள் கோரிக்கைகள் எதையுமே சட்டை செய்வதில்லை” என்று மனம் நொந்து சொன்னார் திண்டிவனத்திலிருந்து வந்த ஸீனியர் சிட்டிசன் ஒருவர்.

– ப்ரியன்
படம்: ராஜன்



# மேம்பாலங்கள்



• ஜெம்னி பில்டிங் அருகே...

**த**கவல் பெறும் உரிமை சட்டத்தைப் பயன்படுத்தி முதன் முதலில் தமிழக அரசிடமிருந்த தகவல்கள் சேகரித்தவர் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் வெற்றிவேல்!

"மினிமேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் நடந்திருக்கிறது; ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயார்!" என்று சவால் விடுகிறார் இவர்.

"மேம்பாலங்கள் கட்டுவதற்குத் தொடக்கத்தில் ஒரே ஆளிடம் ஒப்பந்தம் விட்டார்கள். ஆனால் அவர் ஓடியே போய்விட்டார். அவர் ஏன் ஓடினார் என்று மாநகராட்சி விளக்கம் தரவில்லை. அதன் பிறகு கவுன்சில் என்ற ஒன்று இருப்பதையே மறந்துவிட்டு, அதன் சம்மதம் பெறாமலேயே ஒப்பந்தங்களைப் பலபேருக்குப் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். பாலங்களுக்கான திட்ட மதிப்பீடு அரசு பொறியியல் வல்லுனர்களால் கொடுக்கப்பட வேண்டும். பாலங்கள் துறை என்ற ஒரு தனித் துறையில், மெத்தப் படித்த பல எஞ்ஜினியர்கள் இருக்கும்போது, அவர்களிடம் எஸ்டிமேட் வாங்காமல், எல்.என்.டியின் துணை நிறுவனமான ராம்பால் நிறுவனத்திடமே திட்ட மதிப்பீட்டையும் வாங்கி, அவர்களையே டெண்டரில் கலந்து கொள்ளவும் அனுமதித்தால் என்ன நடக்கும்?

• வெற்றிவேல்



படம்: ராஜா

• ராதாகிருஷ்ணன்



"திட்ட மதிப்பீடு கொடுத்தவர்கள், தங்களது டெண்டரில் குறைவான தொகையைக் குறிப்பிட்டு டெண்டரைத் தட்டிக் கொண்டு போய்விடப் போகிறார்கள். அதுதான் நடந்திருக்கிறது.

"**உ**ள்நாட்டில், பாலங்கள், சாலைகள் அமைக்க, மத்திய அரசு 'இந்தியன் ரோட் காங்கிரஸ்' என்ற விதிகளை வகுத்திருக்கிறது. இந்த விதிகளைப் பின்பற்றித்தான் பாலங்கள் கட்டப்பட வேண்டும். மேம்பாலம் கட்டப் போதுமான இடவசதி இல்லாத பட்சத்தில் அங்குள்ள நிலங்களை, தேவையான அளவு அரசு கையகப்படுத்திக் கொள்ள வேண்டும். அது முடியாத நிலை வரும்போது அந்த இடத்தில் பாலம் கட்டுவதையே தவிர்க்க வேண்டும்.

"ஆனால் இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? பாலத்திற்குக் கீழேயுள்ள சாலைகளில் நடைபாதை மேடைக்கு இடம் விட்டிருக்கிறார்களா? 'ரோட்காங்கிரஸ்' விதிப்படி குறைந்தது நாலரை அடி அகலத்திற்கு பிளாட்ஃபார்ம் விட்டுக் கட்டியிருக்கிறார்களா? பாதசாரிகள் எப்படி நடந்து செல்ல முடியும்?

"ரோட் காங்கிரசின்



• அடையாறு : முன்பிருந்த சாலையோரப் பூங்கா : இப்போது இல்லை!





• ராயப்பேட்டை அருகருகே இரு பாலங்கள்

# கட்டியதில் ஊழலா?

எந்த விதியையும் பின்பற்றாமல், தி.மு.க. ஆட்சியின் நினைவுச் சின்னங்களாக இவற்றைக் கட்டி வைத்து அரசியல் ஆதாயம் தேட நினைக்கிறார்கள்.

“பாலங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள டிஸ்கான் என்ற இரும்பு ராடுகளை டன் ஒன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிப் பயன்படுத்தியிருப்பதாக கான்ட்ராக்டர்கள் சொல்கிறார்கள். இந்த ராடுகளின் மார்க்கெட் விலை டன் ஒன்றுக்கு ரூபாய் பதினாறாயிரம் தான். அதாவது மார்க்கெட் ரேட்டைவிட ஒன்பதாயிரம் ரூபாய் ஒப்பந்தக்காரர்களுக்குக் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். சமீபத்தில் திறக்கப்பட்ட மூன்று பாலங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ராடுகளின் மொத்த அளவு 2115 டன். டன் ஒன்றுக்கு ரூபாய் ஒன்பதாயிரம் கூடுதலாகக் கொடுத்த வகையில் ஒரு கோடியே தொண்ணூறு லட்சம் ஊழல் நடந்திருக்கிறது!

''பாலத்தின் மேல் உள்ள இரும்புத் தடுப்புகளில் பேருந்து மோதினால், கீழே விழாதபடி தாங்கிக் கொள்ள 'ஆண்டிகிராஷ் பேரியர்ஸ்' என்ற நவீன உலோகப்பட்டை பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இவர்கள் ஒருடன் ரூபாய் இருபத்தாறாயிரம் மார்க்கெட் ரேட் உள்ள பட்டைகளை ரூபாய் முப்பத்தாறாயிரம் கொடுத்து வாங்கிக் கட்டியிருக்கிறார்கள். இதன்படி மூன்று பாலங்களிலும் சுமார் மூன்று கோடிக்கு மேல் ஊழல் நடந்துள்ளது. இதைவிடக் கொடுமை இந்த ராடுகளுக்கு எந்தவிதமான கெமிக்கல் ட்ரீட்மெண்டும் கொடுக்கப்படவில்லை.

''தமிழ் தெரியவில்லை என்று வெளிநாட்டு கான்ட்ராக்டர் ஒருவருக்கு ஒப்பந்தம் விட மறுத்திருக்கிறார்கள். இது போன்ற நகைச்சுவைகள் போதாதென்று புதிதாகத் திறக்கப்பட்ட மூன்று மேம்பாலங்களுக்குப் பெயிண்ட் அடிக்க மூன்று கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஒரு சதுர அடி பெயிண்டிற்கு இருபத்து இரண்டு ரூபாய் அறுபது பைசா கான்ட்ராக்டருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஐந்து கோட் அடிக்க ஒப்புக் கொண்டு இரண்டு கோட்டிங் மட்டுமே அடித்துள்ள, பெயிண்டின் மார்க்கெட் மதிப்பு சதுர அடிக்குப் பதினைந்து ரூபாய்தான்.

''சரியான திட்ட மதிப்பீடும், தரமான கட்டுமானமும் இல்லாததால், ராயப்பேட்டை பாலத்தில் இப்போதே விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் அவசர அவசரமாகப் போக்குவரத்தை நிறுத்திவைத்து, செப்பனிடும் வேலை செய்து, தவறை மறைக்கப் பார்க்கிறார்கள்!'' என்று குமுறு

**ல**ண்டனில், கிரீன்விச் நகரத்தின் மேயர் பதவிக்கு வந்திருக்கும் பெண் ஓர் இந்தியர். இதனால் பிரிட்டனில் வாழும் இந்தியர்களுக்கு ஏக சந்தோஷம். அவர் பெயர் ஜகீர் கௌர் சேகன். லூதியானாவுக்குப் பக்கத்தில் உள்ள ஹயச்சல் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் ஒரு நர்ஸ்.



''நான் நர்ஸ் பணியில் இருந்தபோது பரபரப்புக்கிடையில் வேலை செய்திருக்கிறேன். பலதரப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கிறேன். மக்களுக்குப் பணியாற்றத் தயங்கியதில்லை. புன்சிரிப்புதான் என் பலம். இவையனைத்தும், என் புதிய பொறுப்பில் திறம்படப் பணியாற்ற உதவியாக இருக்கும்'' என்று கூறும் ஜகீர், ''இந்திய–பிரிட்டிஷ் உறவு பலப்படப் பாடுபடுவேன்; இந்தியாவில் நிறைய கண் சிகிச்சை முகாம்கள் நடத்த நிதி திரட்டித் தருவேன், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவுவேன்'' என்று தம் திட்டங்களை அடுக்குகிறார்! பார்க்கலாம்.

— எம்.

கிறார் வெற்றிவேல்.

"உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்த முதல் இரண்டு வருடங்களில் நீங்கள் மாநகராட்சி நிர்வாகத்தைப் பற்றி ஒன்றும் விமர்சிக்கவில்லையே... இப்போது ஏன்...?" என்று கேட்டால் "அப்போது தோழமையாய் இருந்தோம் என்பது மட்டும் காரணமல்ல; பல வருடங்கள் கழித்து தேர்தல் நடத்தப்பட்டதால் மாநகராட்சி மன்றம் எல்லோருக்குமே புதிதாயிருந்தது. விதிகள், மரபுகளைத் தெரிந்து கொள்ள சிறிது காலமாயிற்று. இப்போது தெரிந்து கொண்டு விமர்சிக்கிறோம்" என்கிறார்.

இவரது குற்றச்சாட்டுகளுக்கு மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் என்ன சொல்கிறார்?


“**க**வுன்சில் ஒப்புதல் இல்லாமல் டெண்டர் விட்டோம் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. மாநகராட்சி உறுப்பினர் யாராக இருந்தாலும், டெண்டர் தொடர்பான அத்தனை விவரங்களையும் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறோம். ரோட் காங்கிரஸ் விதிகளை மீறியுள்ளோம் என்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொரு பாலமும் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ளது. பாலத்திற்குக் கீழே உள்ள சர்வீஸ் சாலைகளின் ஓரங்களில் பிளாட்ஃபார்ம் வசதி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் பாலத்திற்குக் கீழே உள்ள இடத்தின் சொந்தக்காரர்களே முன் வந்து ஐந்து அடி வரை இடம் தர ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் போதிய அளவில் பிளாட் ஃபார்ம் உருவாக்குவோம்" என்றார் ராதாகிருஷ்ணன்.

நமது மேம்பால யாத்திரையின் போது காதில் விழுந்த புகார்களையும் அவர் முன் வைத்தோம்.

"அடையாறு சாலையோரப் பூங்காவை, போக்குவரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்று உயர்நீதி மன்றம் தனது உத்தரவில் குறிப்பிடவில்லை. சட்ட ஆலோசனை பெற்றே இந்தப் பூங்காவை நாங்கள் எடுத்துக் கொண்டோம்" என்றார்.

"புதுக்கல்லூரி அருகே குறைந்த இடைவெளியில் இரு பாலங்கள் கட்டப்பட்டிருப்பதால் அங்குள்ள நான்கு கல்வி நிறுவனங்களை மனத்தில் கொண்டு, சாலைக்கு மேலே பாதசாரிகளுக்கான நடைபாலம் கட்டப் போகிறோம். மினிமேம்பாலங்களுக்குக் கீழே சிறுசிறு பௌண்டன் பூங்காக்களை ஸ்பான்சர் மூலம் அமைத்து வருகிறோம். பார்க்கிங் வசதியும் உண்டு. ஆனால் கடைகள் திறப்பதாக இல்லை. மேம்பாலம் ஒப்பந்தம் விட்ட வகையில் மாநகராட்சிக்கு மதிப்பீட்டுத் தொகையை விட அதிக லாபமே தவிர இழப்பில்லை என்பது என் கருத்து. மற்றபடி ஊழல் நடந்திருக்கிறதா என்பதைக் குறித்தெல்லாம் நான் கருத்துக் கூற இயலாது."

சந்திப்பு: **ஜெயந்தன், ப்ரியன்**
படங்கள்: **வெங்கடேஷ், ஹரி**







2000 மே 28
விக்ரம வைகாசி 15
மலர் : 58
இதழ் : 44

கல்கி



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



# வைகோவை தூது அனுப்புங்கள்!

**யா**ழ். பகுதியில் மூன்று நாட்களாக ஓய்ந்திருந்த போர் தற்போது மீண்டும் ஆரம்பமாகி இருக்கிறது. புலிகளின் நேரடித் தாக்குதல் ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தில் அதன் ரகசிய ஊடுருவல் நிகழும்; அதுதான் ஸ்ரீலங்கா ராணுவத்துக்குப் பெரிய பின்னடைவை உண்டாக்கும் என்று போர் வல்லுனர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் புலிகளுக்கு உள்ள தடையை நீடித்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இரு தரப்பினரும் வேண்டினால் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவலாம் என்று அழைப்பிதழ் வரக் காத்திருக்கிறது! இது ஒன்றுக்கொன்று முரணானது என்று கருதுகிறார் வைகோ. ராமதாஸ், தமது தமிழ் ஈழ, புலிகள் ஆதரவு நிலையை பகிரங்கமாகவே வெளியிட்டு வருகிறார். ஆயினும் இருவருமே மத்திய அரசுக்குத் தங்களால் தர்ம சங்கடம் விளையாது என்றும், அதன் ஸ்ரீலங்கா கொள்கையுடன் ஒத்துப் போவதாகவும் கூறி வருகின்றனர். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க எப்போதும் தயாராக உள்ள பால்தாக்கரே, புலிகளுக்குத் தடை கூடாது என்று அப்பட்டமாக அறிவித்து விட்டார். போதாக்குறைக்கு தமிழ் ஈழ ஆதரவு மகாநாடு நடத்த அனுமதி கோரி நெடுமாறன் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்! தமிழக முதல்வர் கருணாநிதியோ 'போர் மூலமோ அல்லது வேறு எந்த விதத்திலோ தமிழ் ஈழம் உருவானால் மகிழ்ச்சி' என்று கூறிவிட்டு, அப்படி சொன்னதற்கு இதுதான் அர்த்தம் என்று நீண்ட விளக்கவுரை வழங்கிக் கொண்டிருக்கிறார். இத்தனைக்கும் இடையில் கொழும்பு நகரில் பள்ளிச் சிறுவர்கள், நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக நடத்திய கூட்டுப் பிரார்த்தனை பற்றிய செய்தியையும் படத்தையும் காண




உள்ளம் நெகிழ்கிறது.


ஈழப் பிரச்னையில் பலரும் பலவிதமாகப் பேசி, அறிக்கை விட்டு வருவதிலிருந்து ஒரு விஷயம் நிச்சயமாகப் புரிகிறது. அது, இப்பிரச்னையில் அறிவுபூர்வமான அணுகுமுறை பின்னுக்குத் தள்ளப்பட்டு, உணர்ச்சி பூர்வமான அணுகுமுறை முன் நிற்கிறது என்பதுதான்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு உண்டு; தமிழ் மன்னர்கள் பலர் இலங்கைப் பகுதிகளை ஆண்டிருக்கிறார்கள். சரித்திரத்தை ஒதுக்கிவிட்டு சமீப காலத்துக்கு வந்தால் தேயிலைத் தோட்டங்களில் பல லட்சம் தமிழர்கள் உழைத்து இலங்கைப் பொருளாதாரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா சுதந்தரம் பெற்ற பிறகு ஈழத் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டு தமிழ் மொழியும் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளது. 'தமிழ் ஈழம்' என்ற கோஷம் வலுப் பெறக் காரணமே ஸ்ரீலங்கா அரசு செய்த பல தவறுகள்தான்.

இவையெல்லாம் ஒருபுறமிருந்தாலும் இன்றைய நிலையில் யதார்த்தமான, அறிவுபூர்வமான சிந்தனையும் நமக்குத் தேவை.

சீக்கிரமே புலிகள் தமிழ் ஈழத்தைப் போர்முனையில் அடைந்து விடுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அதோடு பிரச்னை தீர்ந்து விடுமா? ஸ்ரீலங்காவில் இதனால் தமிழர்களுக்கும் சிங்களவருக்கும் இடையே பகைமை தீருமா, வளருமா? கொழும்பில் அடுத்தடுத்து பதவிக்கு வரும் அரசுகள் யாழை மீட்க வேண்டும் என்று கருதி ராணுவத்தையும் தளவாடங்களையும் பலப்படுத்த மாட்டார்களா? இலங்கையின் இதர பாகங்களில் வசிக்கின்ற தமிழர்களை அதற்குப் பிறகு சிங்களவர்கள் எப்படி நடத்துவார்கள்? அகதிகள் பிரச்னை வேறுவிதமாகத் தலையெடுக்காதா? அப்போது இந்தியா என்ன செய்யும்? எப்படி நடந்து கொள்ளும்?

இன்று தமிழ் ஈழத்துக்கு இந்தியா ஆதரவு தந்தால் நாளை காஷ்மீரத் தீவிரவாதிகளின் சுதந்தர கோஷத்தை எப்படி தார்மீக பலத்துடன் அதனால் எதிர்க்க முடியும்? இன்னும் வடகிழக்கு மாகாணங்களில் நிலவும் ஆயுதம் தாங்கிய இயக்கங்களை எப்படி சமாளிக்கும்?




புலிகளுக்கும் தமிழ் ஈழத்துக்கும் இன்று ஆதரவு தருவது கொள்ளிக்கட்டையை எடுத்து இந்தியா தன் தலையைத் தானே சொறிந்து கொள்வதாக ஆகிவிடக் கூடாதல்லவா?

இவற்றையும் இன்னும் பலவற்றையும் சிந்தித்து தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது இந்தியா. ராஜீவ்காந்தி செய்த தவறை இந்த அரசு மீண்டும் செய்துவிடக் கூடாதுதான். அதேசமயம் யாழ் தமிழர் - பொதுமக்கள் - படும் சொல்லில் அடங்காத அவதியைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கவும் கூடாது. இரு தரப்பிலும் பல்லாயிரம் வீரர்கள் செத்து மடிந்தது போதும், போதும்!

புலிகளுக்கு இந்தியாவில் தடை என்றால் ஸ்ரீலங்காவில் போர் நிறுத்தத்துக்கும் அமைதிக்கும் இந்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ளக் கூடாது என்பதல்ல. இரண்டும் இரு வேறு விஷயங்கள்.

இந்திய அரசு ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளபடி ஸ்ரீலங்கா என்ற நாட்டின் எல்லைகளை மாற்றி அமைக்க முடியாது. அதேசமயம் தமிழ் ஈழ மாநிலம் அமைந்து சுயாட்சியும் ஜனநாயகமும் அங்கே தழைக்க வழி காண வேண்டும். இதுதான் இரு தரப்பினரும் கௌரவத்துடன் ஏற்கக் கூடிய ஒரே வழி.

இரு தரப்பினரும் அழைத்தால்தான் மத்தியஸ்தத்துக்குப் போவோம் என்று காத்திராமல், இந்தியா ஒரு தூதர் குழுவை அனுப்பலாம். போர் நிறுத்தத்திலும் அமைதியிலும் ஆர்வம் காட்டியுள்ள நார்வே, அமெரிக்கா போன்ற நாடுகளும் இக் குழுவில் அங்கம் வகிக்கலாம். ஏன், புலிகளின் நாடித்துடிப்பு அறிந்த வைகோவையே இக்குழுவின் தலைவராக்கலாம்! இலங்கையில் உள்ள தமிழர்களுக்குப் புலிகள் மட்டுமே தலைவர்கள் அல்ல என்பதை மறவாமல் இக்குழு செயல்பட்டால் வெற்றி பெறுவது அசாத்தியமல்ல.

ஸ்ரீலங்காவுக்குத் தீவிரவாதிகளைச் சந்திக்க, இஸ்ரேல் போன்று வேறு பல நாடுகளும் உதவ முன்வருவதற்கு முன்னதாக இதைச் செய்வது நலம். ●



**வி**டாதே விவேக், கட்டுவிடு சுசிலா, பறந்துவா பரத், நடுங் காதே நரேன், அமிர்தயோகம், கிருஷ்ண அர்ஜுனன், ஜீவநதி, வீசுகின்ற காற்றில் விளைகின்ற சுகமே-இதெல்லாம் என்ன? சந் தேகமே இல்லை, இன்று வெளியாகிக் கொண்டிருக்கும் மாத நாவல்களின் தலைப்புகள்.

ஒரு காலத்தில் ராணிமுத்து, மாலைமதி போன்ற மாத நாவல் களைத் தவிர, சாலையோர புத்தகக் கடைகளில் வேறு நாவல்களை மருந்துக்கும் பார்க்க முடியாது. அதை உடைத்துக் கொண்டு, கங்காரு வயிற்றிலிருந்து வெளிவந்த குட்டியாக எட்டிப் பாய்ந்து, மாத நாவல் உலகின் கோட்டையில் கொடியேற்றியது பாக்கெட் நாவல். அதைத் தொடர்ந்து கோடை மழை நேரத்துப் புற்றீசல்கள் போல நாவல்கள்... நாவல்கள்... நாவல்கள்...

ஆனால் வந்த வேகத்திலேயே மாத நாவல்கள் மண்ணைக் கவ்விக் கொள்ள, தாக்குப்பிடித்தவை ஒருசில மட்டுமே.

இப்போது மறுபடியும் மாயாஜாலம். புத்தக் கடைகளிலும், ஏஜெண்டுகளிடமும் விசாரித்த வகையில் ஐம்பத்தேழு மாத நாவல்கள் வெளிவருகின்றன. தயவு செய்து ஈ புகுந்துவிடும் முன் வாயை மூடிக் கொண்டு மேலே படியுங்கள்.

ராஜேஷ்குமார், சுபா, பட்டுக்கோட்டை பிரபாகர் போன்ற எழுத்தாளர்கள் வெட்டு, குத்து, கொலை என்று அசைவ க்ரைம் நாவல்களை எழுதித் தள்ள, ரமணிச்சந்திரன், சுமதி, மணி மாலா, உஷா போன்றவர்கள் குடும்பம்+காதல் கலவையில் சைவ நாவல்களை எழுதித் தள்ள, இந்த







• அசோகன்



• எஸ். பி. ராமு

இரண்டு ரகத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பது போல ஆன்மிகம்+வரலாறு+காதல் கலவையில் பாலகுமாரன் ஸோலோ நடத்திக் கொண்டிருக்க, எல்லாவற்றையுமே மாங்கு மாங்கென்று வாசித்துத் தள்ளுகிறார்கள் மாத நாவல் பிரியர்கள்.

கடையில் தொங்க விடுவதற்கே இடமில்லாத நிலையில் இத்தனை நாவல்களும் விற்பனையாகிறதா? பாக்கெட் நாவல் உரிமையாளர் ஜி. அசோகனைக் கேட்டோம்.

"சாட்டிலைட் டி.வியோ, சினிமாவோ நாவல் வாசகர்களை மாத்திட முடியாதுங்கிறது என்னோட கருத்து. சினிமா ஹீரோக்களுக்கு எப்படி ஸ்டார் வேல்யூ இருக்கோ, அதேபோல மாதநாவல் எழுத்தாளர்களுக்கும் உண்டு. குறிப்பா ராஜேஷ் குமாருக்கு வெறித்தனமான ரசிகர்கள் நிறைய உண்டு. க்ரைம் கதைகள் எழுதற எல்லா எழுத்தாளர்களும் ஒருசில 'சூப்பர்மேன்' கேரக்டர்களைத் தொடர்ந்து கதைகள்ல பயன்படுத்துறாங்க. சக்திமான் கேரக்டர் குழந்தைகள்கிட்டே எப்படி பாப்புலர் ஆச்சோ, அதுபோலத்தான் இந்த கேரக்டர்களும். எழுத்தாளர்களுக்கு வயசாகலாம். ஆனா கேரக்டர்களுக்கு வயசாகாது. ஒவ்வொரு தலைமுறையிலேயும் இந்த கேரக்டர்களுக்கு ரசிகர்கள் வந்துகிட்டே இருப்பாங்க. மாத நாவல்கள் உயிரோடு உலா வர்றதுக்கு இதுதான் உளவியல் ரீதியான காரணம்னு நினைக்கிறேன்" என்கிறார் அசோகன்.



• மணிமாலா

"ஒரு முப்பதாயிரம் ரூபா இருந்தா ஒரு நாவல் தொடங்கி, அது விற்பனையாகி வர்ற பணத்துல தொடர்ந்து நடத்தலாம்னு நிறைய பேர் வர்றாங்க. ஆனா ஒண்ணு, ரெண்டு இதழ்களுக்கு மேலே இங்கே தாக்குப் பிடிக்க முடியாது. ஏன்னா ஏஜெண்டுகள்கிட்டே பணம் வசூல் செய்யறதுக்கே எக்கச்சக்க செலவாயிடும்" என்றார் அசோகன்.



• ரேவதி

ஒருமுறை இயக்குனர் சேரன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் 'மதுரையில் பஸ் ஏறுகிற ஒருவன், நாவல் ஒன்றை வாங்கி, வழிநெடுகிலும் படித்துவிட்டு, திருச்சியில் இறங்குகிறபோது தூக்கி வீசிவிட்டுப் போகிற பாக்கெட் நாவல் மாதிரி என்னால் படமெடுக்க முடியாது' என்று காட்டமாகக் கூறியிருந்தார். உண்மையில் மாத நாவல்களின் தரம் அவ்வளவுதானா?



• ஏழுமலை

கேட்டதும் கொதித்து எழுந்தார் ஏழு நாவல்களையும் எட்டு பத்திரிகைகளையும் நடத்தி வரும் விவேக் பப்ளிகேஷன்ஸ் உரிமையாளர் எஸ்.பி. ராமு.

"இப்போது வெளிவரும் நாவல்கள் ஒவ்

# மசாலா-57!



''படத்துக்குப் பேரு ஏன் 'கிரைண்டர்'னு வச்சிருக்காங்க?''
''அரைச்ச மாவுன்னு யாரும் சொல்லக் கூடாது... பாருங்க!''
— அம்பை தேவா

வொன்றும் குறைந்தது பத்தாயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன. அதன்படி பார்த்தால் மாதம் இரண்டு கோடி ரூபாய்க்கு விற்பனை யாகிறது. வருடத்திற்கு இருபத்தைந்து கோடி ரூபாய். இதில் பல ஆயிரம் ஏஜெண்டுகளும், கடைக்காரர்களும், ஊழியர்களும் வாழ்கிறார்கள். சினிமாக்காரர்களைப் போல சதையை நம்பி எந்தக் கதையும் எழுதப்படுவதில்லை. இங்கு எல்லாமே எழுத்தாளர்கள்தான். அவர்களால் தான் இத்தனை பேர் வாழ்க்கை ஓடுகிறது'' என்று மூச்சு விடாமல் படபடத்தவரிடம் குறுக்கிட் டோம்.

"நூற்று இருபது பக்கம் பாக்கெட் சைஸ் நாவலுக்கு பத்து ரூபாய் விலை நிர்ணயிக்கிறீர் கள்.. அதே நூற்று இருபது பக்கம் கொண்ட மற் றொரு நாவலுக்கு இருபது ரூபாய் விலை நிர்ண யிக்கிறீர்கள். இது என்ன வேடிக்கை?"

"இது வேடிக்கை இல்லை; வாடிக்கைதான். எழுத்தாளர்களுக்கு இருக்கும் வாசகர் வட்டத் தைப் பொறுத்து அவர்களுக்கு சன்மானம் கொடுக்கிறோம். தங்களது நாவல் எவ்வளவு விற்கிறது என்று அவர்களுக்கு நன்றாகவே தெரி யும். அதனடிப்படையில் ஆயிரம் ரூபாய் முதல் இருபதாயிரம் ரூபாய் வரை சன்மானம் கொடுக் கிறோம்; அதற்கேற்பவே விலை"என்கிறார் ராமு.

இவர்களைப் போன்ற நடுத்தரமான நாவல் வெளியீட்டாளர்களுக்கு மத்தியில், ராணிமுத்து, தேவியின் கண்மணி, மாலைமதி போன்ற பெரிய வெளியீட்டாளர்களும் களத்தில் போட்டியின்றி வாள் சுழற்றுகிறார்கள். பல இளம் எழுத்தாளர் களை இதுபோன்ற வெளியீட்டாளர்கள் அறி முகப்படுத்தி, அவர்களுக்குத் திரும்பத் திரும்ப வாய்ப்புக் கொடுத்து, வளர்த்தும் விடுகிறார்கள்.

"ஒரு எழுத்தாளரா எனக்கு அடையாளம் கிடைச்சிருக்குன்னா அதுக்கு தேவியின் கண் மணிதான் காரணம். காதல்+குடும்பம் கலந்த சோகமான முடிவுள்ள கதைகளைத்தான் வாசகர் கள் எங்கிட்டே எதிர்பார்க்கறாங்க. மணிமாலா கதையா, கையோடு ஒரு கர்சிப்பையும் இலவச இணைப்பா கொடுத்துடுங்கன்னு சொல்றாங்க.. ரமணிச்சந்திரன் மேடம் சுபமா எழுதினாத்தான் வாசகர்களுக்குப் பிடிக்குது. இதுலேர்ந்து ஒவ்வொரு எழுத்தாளருக்கும் தனித்தனியே வாசகர்கள் இருக்காங்கன்னு தெரியுது. எல்லா எழுத்தாளர்களையும் படிக்கிற வாசகர்கள் ரொம்பக் குறைவு" என்றார் வளர்ந்து வரும் மாத நாவலாசிரியை மணிமாலா.

**வா**சகர்கள் பார்வையில் மாத நாவல்கள் எப்படி?

லெண்டிங் லைப்ரரி மூலம் மாதம் ஒன்றுக் குக் குறைந்தது ஐம்பது நாவல்கள் படிக்கும் ரேவதி சொல்கிறார்:

"தேவிபாலா, அனுராதா ரமணன் ரெண்டு பேரும்தான் எனக்கு பேவரைட். அது தவிர புதிய எழுத்தாளர்கள், க்ரைம் கதைகள் எதையும் விட மாட்டேன். எழுதின கதைகளையே திரும்பத் திரும்ப எழுதினாலும் படிக்கும்போது ஏனோ அலுப்பு தட்டறதில்லே. இன்னொரு பக்கம், அசோகமித்திரன் மாதிரி தரமான கதைகள் எழுதற பெரிய எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு, நாவல் கிடைச்சாலும் படிப்பேன். இதுமாதிரி தொகுப்புகளை ஒரே மூச்சுல வாசிக்க முடியாதே தவிர, ரொம்பத் தரமா இருக்கும்" என்று அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.


"**க**டையில தொங்க விடுறதுக்கே இடம் கிடையாது சார். பாலகுமாரன், ராஜேஷ்குமார், ரமணிச்சந்திரன், சுபா எழுதுற புத்தகங்களை எங்கே ஒளிச்சு வெச்சாலும் கேட்டு வாங்கிடு வாங்க. அஞ்சு ரூபா நாவல்னா எழுபத்தஞ்சு பைசாவும், பத்து ரூபா நாவல்னா ஒரு ரூபாயும் கமிஷன் கிடைக்குது. நாவல் ரொம்பப் பாது காப்பானது. அதான் இவ்வளவு பேர் போட றாங்க. விக்காமல் ரிட்டன் போற நாவல்களை பிளாட்ஃபார்ம் வியாபாரிகள்கிட்டே பாதி விலைக்கு வித்துடறாங்க. நஷ்டம் வர்றதுக்கு வாய்ப்பில்லே" என்கிறார் கோடம்பாக்கத்தில் பதினைந்து வருடமாகப் பத்திரிகை ஸ்டால் வைத் திருக்கும் ஏழுமலை.

மாத நாவல் உலகின் இத்தனை களேபரங் களுக்கு மத்தியில் மூக்கின்மேல் விரல்வைக்கச் செய்த ஒரு புத்தகமும் உண்டு.

'செம்பருத்தி' என்ற பெயரில் வண்ண நிலவன், தி. நாகராஜன் போன்ற தரமான எழுத் தாளர்களின் படைப்புகளைச் சுமந்து கொண்டு ஆறு ரூபாய் விலையில் ஒரு மாத இதழ் தொங்கிக் கொண்டிருந்தது! பதிப்பாளர் நாஞ்சில் கு. காந்தி யன் என்று இருந்தது. அதையும் பல வாசகர்கள் வாங்கிச் சென்றதாகச் சொல்கிறார் கடைக்காரர். மாத நாவல்களைப் போலவே நமக்கும் புரிய வில்லை, நாவல் படிக்கும் வாசகர்களின் மனநிலை.

**— ஆர். சி. ஜெயந்தன்**
படங்கள்: **வெங்கடேஷ்**

# ஆயிரம் ஆட்டோகிராஃப்!



நாடு முழுக்க சக்திமான், ஷாருக்கான், ரஜினிகாந்த், சச்சின், ஹ்ருத்திக் என்று ஹீரோ ஒர்ஷிப் நடந்து கொண்டிருப்பது குறித்து ஆயாசப்படுபவர்களுக்கு, சற்று ஆறுதல் தரும் விஷயம்.

ஒருவர் 'யு ஆர் கிரேட்' என்று சொல்லி, அவருடைய சுயசரிதைப் பிரதியில் ஆட்டோகிராப் பெற்றுக் கொண்டார். அடுத்து வந்த இளைஞர், இன்னும் ஒருபடி மேலே போய், 'யு ஆர் தி கிரேட்டஸ்ட்!' என்று நெகிழ்ந்து கைகுலுக்கினார். க்யூவில் முண்டியடித்துக் கொண்டிருந்த கூட்டத்தை போலீஸ் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தது.

குமரி அனந்தன், அவருக்கு சால்வை அணிவித்து ஆட்டோகிராப் பெற்றுச் சென்றார். டாக்டர் பத்ரிநாத் தன் மனைவியுடன் வந்திருந்தார். அன்றைய வி.ஐ.பி. வேறு யாருமில்லை; பாரத ரத்னா ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தான்!

அவரது சுயசரிதமான விங்ஸ் ஆஃப் ஃபயர், 'அக்னிச் சிறகுகள்' (தமிழாக்கம்) மற்றும் '2020ல் இந்தியா' ஆகிய மூன்று நூல்களிலும் ஆட்டோகிராப் போட்டுத் தருவதற்குத் தான் இப்படி ஒரு நிகழ்ச்சி! அதிர்ஷ்டம் அடித்தது, ஹிக்கின் பாதம்ஸ் புத்தகக் கடைக்கு.

"புத்தகங்கள் மனிதர்களுக்கு மிக முக்கியமானவை. நிறையப் படியுங்கள்; நிறைய கனவு காணுங்கள். கனவுகள் எண்ணங்களை ஏற்படுத்தும். எண்ணங்கள் செயல்களாகும். செயல்கள் சாதனைகளாகும்'' என்றார் கலாம்.

அன்றைய நிகழ்ச்சிக்கு வந்து, அப்துல் கலாமைச் சந்தித்தவர்களுள் பிரபல ஜோதிடர் நம்புங்கள் நாராயணனும் ஒருவர். நாராயணனின் அப்பா, அப்துல் கலாமுக்கு ஆசிரியராம்.

ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்களில் ஆட்டோகிராப் போட்டுக் கொடுத்தார் அப்துல் கலாம். இவற்றில் தமிழ்ப் புத்தகமான 'அக்னிச் சிறகுகள்' மட்டும் நானூறு.

வந்திருந்தவர்களில் ஆண்கள், பெண்கள், கல்லூரி மாணவர்கள், ரிடையராகிவிட்டவர்கள் எனப் பலரும் அடக்கம்.


"இளைய தலைமுறை பெருமையோடு நோக்கும் ரோல் மாடல்'' என்றார் ஒரு கல்லூரி மாணவர்.

ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்திருக்கும் மு. சிவலிங்கம் வந்திருந்தார். அவரிடம், "எனக்குத் தமிழ் தெரியும்! ஆனால் நானே தமிழில் எழுதியிருந்தாலும், இவ்வளவு சிறப்பாக வந்திருக்காது! மிகப் பிரமாதமான மொழி பெயர்ப்பு!'' என்று மனம் திறந்து பாராட்டினார் கலாம்!

— எஸ். சந்திரமௌலி


# ‘க்ளிக்’ பரவசம்!

“கிருஸ்துவம், இஸ்லாம், பௌத்த மதங்களைப் போல இந்து மதமும் உலகப் பெரு மதம் என்பதை உணர்ந்து கொண்டபோது நான் இந்து மதத்தால் ஈர்க்கப்பட்டேன்” என்கிறார், அமெரிக்காவைச் சேர்ந்த கலை வரலாற்றாசிரியரும், புகைப்படக் கலைஞருமான ஸ்டீபன் பி. ஹியூலர்.



• ஒரிசாவிலுள்ள செலுபாய் கிராமத்தின் மரத்தடி ஒன்றில் கோயில் கொண்டிருக்கும் சண்டி மாதாவுக்குப் பரிகார பூஜை.

• கர்நாடக மாநிலம், ஜைனர்களின் குருவான கோமதீஸ்வரர் முக்திபெற்ற சரவணபெலகோலாவில் அவரது தங்கச் சிலைக்கு புனிதநீர் பூஜை. பின்னணியில் விண்ணை முட்டும் கோமதீஸ்வரர் சிலையின் பாதமும் கட்டை விரலும்.




• ராஜஸ்தான் மாநிலம் துண்டாலி கிராமத்தின் ஏழைக் குடும்பத் தலைவி, தனது வீட்டு வெளிச் சுவரில் ‘கல்காமாதா’ பெண் தெய்வத்துக்குக் கட்டியுள்ள சிறு களிமண் கோயிலில் தினசரி பூஜை.





• சிவாலயம் ஒன்றின் ராஜகோபுரத்தில் உள்ள முருகக் கடவுளுக்கு விளக்கேற்றும் பக்தை.



• கல்கத்தாவின் காலைப் பொழுது. தனது தொழிலைத் தொடங்கும்முன் டாக்ஸி டிரைவர் சிறு காளிச் சிலைக்கு ஊதுவத்தி காட்டுகிறார். இங்கு முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் வாகனங்களிலும் காளிமாதா சிலையைப் பார்க்கலாம்!

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக இந்தியாவின் எல்லா பகுதிகளுக்கும் பயணம் செய்து, இந்து, சமண, சீக்கிய மதத்தினரின் அன்றாட வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்றவற்றைப் புகைப்படங்களாக எடுத்துள்ளார். ஹியூலரின் புகைப்படக் கண்காட்சியொன்று சமீபத்தில் சென்னை லலித் கலா அகாடெமியில் நடைபெற்றது. சில சாம்பிள்கள், இந்தப் பக்கங்களில்.



• இந்தியா முழுவதும் பின்பற்றப்படும் வரலட்சுமி நோன்பன்று, ஒரிசா மாநிலம் உகாபூர் கிராமத்துப் பெண் ஒருவர் தன் வீட்டு சுவரில் அரிசிமாவுக் கோலம் போடுகிறார்.

# பழசுக்கு வந்த மவுசு!




ஒரு புதிய கார் விற்பனையாகும் அதே சமயத்தில் இரு பழைய கார்களும் விற்பனையாகின்றன என்கிறார்கள் கார் விற்பனையாளர்கள். பழைய கார்களை நாடும் பெருங்கூட்டத்தைக் கவர்ந்து காலப் போக்கில் தங்களது தயாரிப்பின் பக்கமே அவர்களை இழுக்க என்ன வழி என்று யோசித்தது, ஃபோர்டு (Ford) நிறுவனம். எந்த பிராண்டாக இருந்தாலும், பழைய கார்களை வாங்கி, செப்பனிட்டு, விற்றுத் தருவதன் மூலம் எதிர்காலத்தில் புதியதை நாடும் சந்தர்ப்பத்தில் மக்கள் ஃபோர்டு கார்களை வாங்குவார்கள் என்ற நோக்கில் களத்தில் குதித்திருக்கிறது!

Ford assured என்ற வாரண்டி முத்திரை குத்தப்பட்டு, அம்பாஸிடர் தவிர மற்ற பிராண்ட் பழைய கார்களைப் பழுது பார்த்து விற்கத் துவங்கி விட்டது ஃபோர்டு!



• ரவீந்திரநாதன்

"ஃபோர்டு நிறுவனம் இப்படி அதிரடியாக ஒரு திட்டத்தைக் கையாளும் என்று எங்கள் போட்டியாளர்கள் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள். இப்போது கார் ஆர்வலர்கள் மத்தியில் இத்திட்டம் பெரிய பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது" என்கிறார் எம்.பி.எல். போர்டு நிறுவனத்தின் இயக்குனரான அறிவழகன்.



• அறிவழகன்

போர்டு நிறுவனத்தின் டீலர்களில் எம்.பி.எல். போர்டும் ஒன்று. தங்களது திட்டத்தைச் செயல்படுத்த இவர்களைத்தான் ஃபோர்டு நிறுவனம் தேர்ந்தெடுத்திருக்கிறது.

பழையதை வாங்கி விற்கும் பணி என்றாலும், அதிலும் சில திட்டமிட்ட வரைமுறைகளைக் கையாள்கிறார்கள்.

- 50,000 கி.மீ மேல் ஓடிய வண்டிகளை வாங்குவதில்லை.
- இரண்டு கைகளுக்கு மேல் மாறி இருந்தால் 'நோ' சொல்லி விடுகிறார்கள்.
- 116 அம்சங்களை கவனித்து வாங்குகிறார்கள்.

"பழைய கார்களைத் தரகர்கள் மூலம் விற்பனை செய்வதில் பல ஏமாற்று வேலைகள் நடக்கின்றன. ஆனால் எங்கள் நிறுவனம் கண்டிஷனுக்கு ஏற்பப் பழையதை நியாயமான விலையில் வாங்குகிறது. வேளச்சேரியில் உள்ள எங்கள் நவீன ஒர்க்ஷாப்பில் பழுது பார்த்து விற்பனை செய்கிறோம். பழைய கார்கள் விற்பனையில் பொதுவாக கியாரண்டி என்ற பேச்சே கிடையாது. ஆனால் நாங்கள் விற்கும் கார்களுக்கு ஒரு வருடம் அல்லது 15000 கி.மீ ஓடும்வரை கியாரண்டி கொடுக்கிறோம்" என்கிறார் அறிவழகன்.

"இது போன்ற ஒரு திட்டத்தின் மூலம் உங்கள் கார்கள் விற்பனை எப்படி அதிகமாகும்?"

"அங்கதான் எங்க மார்க்கெட்டிங் சூட்சுமம் இருக்கிறது. பழைய கார்களை விற்க, வாங்க வரும் வாடிக்கையாளர் கூட்டம் எங்களுக்கு அறிமுகமாகி விடும். எங்களது தரத்தை விளக்கி அவர்களை ஈர்ப்போம். புதியதை நாடும் மனநிலை மற்றும் வசதி அவர்களுக்கு வரும்போது 'ஃபோர்டு' அவர்கள் நினைவிலிருந்து தப்பாது" என்கிறார் இதன் நிர்வாக இயக்குனர் ரவீந்திரநாதன்.

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: ஸ்ரீஹரி



# இதென்ன கலாட்டா?

கல்கி 30.4.2000 இதழில் "தந்துவிட்டேன் என்னை திரைப்படம் மூலம் இயக்குனர் ஸ்ரீதர்தான் தமிழ் சினிமாவில் என்னை அறிமுகப்படுத்தினார்." என்று விக்ரம் குறிப்பிட்டிருந்தார் அல்லவா? இதை மறுத்து மதுரை பாலன் என்ற வாசகர் நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

"என் காதல் கண்மணி என்ற படம் மூலமே விக்ரம் அறிமுகமானார். அந்தப் படம் தோல்வி அடைந்தது உண்மை. ஆனால் அந்தப் படத்தின் தயாரிப்பாளர் செல்வராஜ் தவிர வசனம் எழுதிய நான், ஒளிப்பதிவு செய்த எம்.எம். ரெங்கசாமி படத்தொகுப்பாளர் ஆர்.டி.அண்ணாதுரை, இசையமைப்பாளர் எல். வைத்தியநாதன், பாடலாசிரியர் வைரமுத்து, இயக்கிய ஜாய் ஆகியோர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறோம் என்பதை நடிகர் விக்ரமிற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து விசாரிக்க முடிவுசெய்து விக்ரமைச் சந்தித்தோம்.


"என் காதல் கண்மணி படத்தில் நான் அறிமுகமானது உண்மைதான். ஆனால் அந்தப் படத்தில் எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை நான் மற்றவர்களிடம் பகிர்ந்துகொண்டு அவர்களையும் 'துன்பப்படுத்த' விரும்பவில்லை. காரணம், அந்தப் படம் வெளிவரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாமல் போனதுதான். சினிமாவுக்காகப் போராடிக் கொண்டிருந்த தொடக்க காலத்தில், 'நமக்கு ஒரு முகம் கிடைக்கும்' என்று நம்பித்தான் அந்தப் படத்தில் எந்தக் கேள்வியும் கேட்காமல் நடித்தேன்.

ஆனால், 'ஏன் நடித்தோம்?' என்று வருந்துமளவுக்கு அனுபவங்கள் ஏற்பட்டுவிட்டன. நான் அந்தப் படத்தையே மறக்க விரும்புகிறேன். காரணங்களை அடுக்கலாம். ஆனால் அதன்மூலம் அந்தப் படத்தில் பணியாற்றிய எந்தக் கலைஞரையும் நான் புன்படுத்த விரும்பவில்லை.

'என் காதல் கண்மணி' படத்தில் விக்ரம் என்ற ஒருவன் நடித்தான் என்பதைப் பத்திரிகைகள் கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. 'தந்துவிட்டேன் என்னை' படம் வந்த பிறகே ஸ்ரீதர் அறிமுகப்படுத்திய விக்ரம் என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். நானும் அதையே தொடர்ந்து கூறி வருகிறேன். இது யதார்த்தமான சைக்காலஜி என்று நான் கருதுகிறேன்.

ஆனால் என் காதல் கண்மணி படம் தான் நான் அறிமுகமான முதல்படம் என்று நான் ஒப்புக் கொள்வதில் ஒருவருக்காவது மகிழ்ச்சி கிடைக்குமானால் அதை மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன். எனது பேட்டி யாரையேனும் புன்படுத்தியிருக்குமானால் அதற்காக வருந்துகிறேன்" என்றார் விக்ரம்.


- விஷ்வல்தாசன்


"அவர் போலி டாக்டர்னு எப்படி கண்டு பிடிச்சே?"
"போஸ்ட்-மார்ட்டம் பண்ண எவ்வளவு நேரமாகும்னு அவரைக் கேட்டோம். 'அதுக்கு ரொம்ப டைமாகும்; சுபரியர் மார்ட்டம் செஞ்சா சீக்கிரம் முடிஞ்சிடும்னு சொன்னார்!"
—ஆர். ரகோத்தமன்


'நீங்க என்னை ரொம்ப ரொம்ப காதலிக்கிறதை புரிஞ்சுக்கறேன்! ஆனா எதுக்காக எனக்கு ஒரு தாஜ்மஹாலே கட்டுவேன்னு அடிக்கடி சொல்றீங்கன்னுதான் புரியலே!'
—மெலட்டூர் விசுவநாதன்


"எது எதுக்கெல்லாம் சில்வர் ஜூப்ளி கொண்டாடறதுங்கிறதுக்கு விவஸ்தையே இல்லாமப் போயிடுத்து!"
"எதைச் சொல்றே?"
"அந்த நடிகர் நடிகை திருமணம் நடந்து இன்றோடு இருபத்தைந்து நாள் ஆகுதாம்!"
25
— து. பூவராகன்


"வெயிட்டர்... என்ன இது? காபிக்கு அஞ்சு ரூபா வாங்கறீங்க. ஆனா ஜில்லுன்னு ஐஸ் மாதிரி இருக்கே!"
"உஷ் சத்தம் போடாதீங்க. முதலாளி காதுல விழுந்தா ஐஸ் காபிக்கான பத்து ரூபா பில் போட்டுடுவாரு."
—ஆர். ரகோத்தமன்



"தலைவர் அவரைக் கட்சியை விட்டு நீக்கிட்டாராமே ஏன்?"
"உண்டியல் பணத்தை எண்ணுறப்ப தலைவர் முன்னால பெருசா ஏப்பம் விட்டுட்டாராம்!"
— அம்பை தேவா

# இலவச இலவசா!


"அந்த மைதாமாவு கம்பெனி முதலாளி சீக்கிரம் மொத்தமா இழுத்து மூடிடுவாருன்னு எப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றே?"
"முதலீடு பண்ணுறவங்களுக்கு எல்லாம், இலவசமா அப்பள பாக்கெட் குடுக்கறாங்களே!"
— ஜாகிர் உசேன்



"கைதி ரங்கனுக்கு ஆனாலும் ரொம்ப இடம் கொடுத்து கெடுத்திட்டீங்க, ஸார்!"
"ஏன், என்னாச்சு?"
"உடம்பு ரொம்ப டயர்டா இருக்கு; இன்னிக்கு ஒரு நாள் எனக்குப் பதிலா நீ போய் திருடிட்டு வான்னு சொல்றான்!"
— பா. ஜெயகுமார்

# நடக்குமென்பார்




## மேஷம்

வீட்ல விசேஷம் நடக்க சந்தர்ப்பம் வரும். பேச்சுத் திறமை கூடும். பத்திரிகை, விஞ்ஞானம், எழுத்துத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றமான வாரம். கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடைபோடுவாங்க. புது ட்ரெஸ், அணிகலன்கள் வாங்க சான்ஸ் கிடைக்கும். சிற்பம், ஓவியத் துறைகள்ல உள்ளவங்களுக்கு வரவேற்புக் கூடும். பயணத்தால பயன் இருக்கும். இருந்தாலும் எச்சரிக்கை அவசியம்.




## ரிஷபம்

வெளிநாட்டுத் தொடர்பால சாதகமான சூழ்நிலை ஏற்படும். வீண் சண்டை, வம்புகள்ல தலையிடாதீங்க. பக்கத்துல சண்டை ஏதாவது நடந்தா தூர ஓடுவது நல்லது. பேச்சில் இனிமை கலந்து பேசறது நல்லது. நிதானம் அவசியம். பதட்டம் கூடாது. வெயில்ல அதிகமா சுத்தாதீங்க. உஷ்ண சம்பந்தமான நோய்கள் வரலாம். தடைகள், சங்கடங்கள் வரலாம். யாரிடமும் அன்பாய்ப் பேசுவது நல்லது.



## மிதுனம்

எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றிதான். எதிர்ப்புகள் காணாம போயிடும். நண்பர்கள் உறவினர்கள் உங்களுக்கு உதவ வருவாங்க. அரசியல்வாதிகளுக்கு அளவான நன்மை கிடைக்கும். மருத்துவர்கள், ரசாயனம், விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு. கலைத்துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடைபோடுவாங்க. வீட்ல சுப காரியம் நிகழ சந்தர்ப்பம் வரும்.




## கடகம்

உங்க திறமை, சாமர்த்தியம் வெளிப்படும். போட்டி பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு, பாராட்டு கிடைக்கலாம். சட்டம், இராணுவம் காவல் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு சாதகமான வாரம் இது. குடும்ப நலத்துல பிரச்னை இருக்காது. பேச்சுத் திறமை கூடும். கணிதம், எழுத்து, பத்திரிகை விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். திறமை, உழைப்பு வீண் போகாது. புதியவங்களை நம்பி ஏமாற வேண்டாம். எச்சரிக்கையா இருங்க.




## சிம்மம்

உங்கள் அறிவாற்றல் திறமை கூடும். நல்லவங்க உங்களுக்குப் பக்க பலமா இருந்து உதவுவாங்க. புனிதமான காரியங்கள்ல ஈடுபட சந்தர்ப்பம் வரும். அரசியல்வாதிகள் அரசுப் பணியாளர்களுக்கெல்லாம் நல்ல வாரம் இது. எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. பொருளாதார நிலையில நல்ல வளர்ச்சி இருக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இப்போ நல்ல நேரம்.



## கன்னி

எந்த விஷயத்துலயும் நிதானம் தேவை. அவசரம், பதற்றம் கூடாது. வீண் விவகாரங்கள்ல தலையிட வேண்டாம். உங்களுக்கு இது சதாரணமான வாரம்தான். துணிச்சல், தன்னம்பிக்கை கூடும். மக்கள் நலனில் கவனம் வேணும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். கொடுக்கல் வாங்கல் விவகாரத்துல மட்டும் எச்சரிக்கை தேவை. வீட்ல விசேஷம் நடக்க சான்ஸ் இருக்கு.



## துலாம்

உங்க திறமை, அறிவாற்றல் வெளிப்படும். புனிதமான காரி


கும்ப ராசிக்காரரான வீணை காயத்ரிக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரப்போவுது!

**மே 24 முதல் 30 வரை**

யங்களைத் தேடி மனம் அலையும். நண்பர்கள், உறவினர்கள் உதவ வருவாங்க. பத்திரிகை, கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல பலன் இருக்கு. பண விஷயத்துக்குப் பிரச்னை இல்லை. தாராளமா புரளும். கொடுக்கல் வாங்கல்ல அவ்வளவா லாபம் இருக்காது.



### விருச்சிகம்




வெளி நாட்டுல இருந்து நல்ல தகவல் வரலாம். பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில சின்ன சின்னப் பிரச்னைகள் வரலாம்.

## நடக்கும்!

பொறுப்போடு நடந்துகிட்டா இதைத் தவிர்க்கலாம். சமுதாய நலப் பணியாளர்களுக்குப் புகழ், பாராட்டு கிடைக்கும். ஆன்மீகப் பக்கம் ஈடுபாடு கூடும். மருத்துவர்கள் புகழ் பெறுவார்கள். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குக் கொஞ்சம் சோதனைக் காலம். அடக்கி வாசிங்க.


### தனுசு



உங்க திறமை வெளிப்படும். எதிரிகள் விலகிப் போவாங்க. சட்டம், காவல், ராணுவத் துறைகள்ல இருக்கறவங்க எச்சரிக்கையா இருக்கணும். கணவன் மனைவிக்குள்ள சலசலப்பு ஏற்பட்டு விலகும். கலைத் துறையைச் சேர்ந்தவங்க முன்னேற்றம் அடைவாங்க. புதிய ஒப்பந்தங்கள் வந்து கதவைத் தட்டும்.

அரசாங்க விவகாரங்கள் சாதகமா இருக்கும். சின்னச் சின்ன பிரச்னைகள் அவ்வப் போது வந்து டென்ஷனாக்கும். அதனால பெரிய பிரச்னை எதுவும் வராது.

### மகரம்



உடல் ஆரோக்கியத்துல கவனமா இருங்க. வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் வரலாம். எந்தக் காரியத்துலயும் அவசர முடிவு வேண்டாம். நிதானம் அவசியம். பதற்றத்தைக் கைவிட்டுடுங்க. வீண் அலைச்சலைத் தவிர்த்துடுங்க. கல்யாணம் போன்ற சுபகாரியம் நடக்க சந்தப்பம் கூடி வரும். கலைத்துறையைச் சேர்ந்தவங்க நல்ல வளர்ச்சியைக் காண்பாங்க. பயணத்தைத் தவிர்த்துடுங்க. ஒரு முறைக்குப் பல முறை யோசிச்சு செயல்படறது நல்லது.

### கும்பம்




எதிர்ப்புகள் குறையும். போட்டிப் பந்தயங்களில் ஓரளவு வெற்றி காணலாம். கலைத் துறையைச் சேர்ந்த வங்களுக்கு நல்ல வாய்ப்பு தேடி வரும். வியாபாரிகளுக்கு ஆதாயம் உண்டு. பத்திரிகை எழுத்து கணிதம் விஞ்ஞானம் கம்ப்யூட்டர் துறைகள்ல இருக்கறவங்க ஒரு ஸ்டெப் முன்னேறுவாங்க. புதிய பதவிகள் வரலாம். உங்க திறமை வீண் போகாது. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்கள்ல எச்சரிக்கையா இருங்க.

### மீனம்



உங்க சாமர்த்தியம், புத்திசாலித்தனம் 'பளிச்'சிடும். பேச்சாற்றல் கூடும். எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றிதான். எதிரிகள் ஓடி ஒளிவாங்க. எதிர்ப்புகள் குறையும். மதிப்பும் செல்வாக்கும் உயரும். பண விஷயத்துல பிரச்னை இருக்காது. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றமான வாரம். கடன் தொல்லை குறையும். எந்த விஷயத்துலயும் குறுக்கு வழியில ஈடுபடாம நேர் வழியில ஈடுபட்டா நல்லது.


A GIFT FOR DAD
— Fathers' day special
CHARIOT DAY
- Short Story
FREE LABELS
SAVING INDIA'S RHINOS
-In the wild
THE PORCELAIN VASE
MEET : BALU THE BULLY!
GOKULAM
The monthly magazine for children
JUNE 2000 — Rs.6/-
47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97

# இனி சரியா?

சருகாக இருந்த என்னால் எப்படித் துளிர்க்க முடிந்தது? கிடைத்ததைக் கொண்டு வாழ்ந்து வந்த என்னால் விரும்பியதெல்லாம் பெற்று வாழ எப்படி முடிந்தது? பத்தில் ஒருவனாய்ப் பதுங்கிக் கிடந்த என்னால் பேச்சு, எழுத்து, கல்வி, தத்துவம், மொழி பெயர்ப்பு, திரைப்பட நடிப்பு என்று பல துறைகளிலும் எப்படி முன்னணி நிலையை அடைய முடிந்தது?

இந்த அனைத்துக் கேள்விகளுக்கும் முழுமையாய்ப் பதில் தெரிந்தவன் நானா னே இருக்க முடியும்? சிந்தித்து சிந் இந்தப் பதில்களை வரிசைப்படுத்தி, ...கப்படுத்தி, சூத்திரங்களாக (formulas) வடித்தெடுத்தால் என்னைப் போன்ற பலருக்கும் பயன்படுமல்லவா? இப்படி எண்ணியதன் விளைவுதான் என்னுடைய தன்முனைப்புப் பயிற்சி.

டேல் கார்னே, வின்செண்ட் பீல் போன்றோரின் தன்முனைப்புப் புத்தகங்களை இந்தக் கட்டத்தில் வாசித்துப் பல குறிப்புகளைத் திரட்டிப் பரிசீலித்தேன். பொது அறிவுச் செய்திகளாகவே அவை யாவும் எனக்குத் தோன்றின. என் நேரடி அனுபவங்கள் அவற்றைவிட மிகுந்த பயனுடையவை என்பதை உணர்ந்துகொண்டேன்.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்" என்ற திருக்குறள் கருத்தே இந்த விஷயத்தில் பேருண்மை என்பது எனக்குப் புரிந்தது.

தடை பல கடந்து எடுத்துக்கொண்ட ஒவ்வொரு துறையிலும் முன்னேற எனக்குப் பயன்பட்ட வழிமுறைகளைத் தொகுத்தும், வகுத்தும் தன்முனைப்புச் சூத்திரங்களை வகுத்துக்கொண்டேன். ஏனெனில் இயற்கையில் எல்லாமே சூத்திர விதிகளுக்குக் கட்டுப்பட்டுத்தானே இயங்குகின்றன? காந்தத் தகட்டில் வடதுருவமும் தென் துருவமும் எதிர் எதிரானவைதான்.



ஆனால் ஒரு காந்தத் தகட்டை இரண்டாக வெட்டி, வட துருவத்தைப் பிரித்தெடுக்க முடியுமா? பிரிக்கப்பட்ட துண்டிலும் ஒரு தென்துருவம் இருக்கத்தானே செய்யும். அருவருப்பான கம்பளிப்புழு அழகான பட்டாம் பூச்சியாய் மாற 21 நாட்கள் கூட்டுப்புழுவாய் இருப்பது அவசியமாகிறது.

பேராசிரியர் பெரியார்தாசன்

இப்படி எல்லா வளர்ச்சியும் ஒரு கணக்கில் அடங்குவதைக் கணித்து என் தன் முனைப்புச் சூத்திரங்களை உருவாக்கினேன். சுருக்கமாக என் சூத்தரங்களை இப்படி வகைப்படுத்தலாம்:




1. எல்லா மனிதர்க்கும், அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் எல்லோர்க்கும் பொது. 24 மணி நேரத்தை முழுமையாய், சரியாய், வீணாக்காமல் பயன்படுத்தத் தெரிந்து விட்டால், நம் வாழ்வில் நாம் அடைய விரும்பும் எதையும் அடைந்து விடலாம் – அது பொருளாதார வசதியானாலும் சரி, புகழானாலும் சரி.

2. அடைய வேண்டியது எது என்பதைப் பிசிறில்லாமல் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் – அது எதுவானாலும்.

3. நமக்குக் கிடைத்துள்ள நேரத்தை அந்த இலக்கை அடைவதற்கான சிந்தனை – செயல்பாடு – பயனை அநுபவித்தல் எனச் சரியாகப் பிரித்துப் பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

4. தடைகள், சறுக்கல்கள், தோல்விகள் ஆகியவற்றை ஒழிக்கும் பூச்சி மருந்து, இரண்டு இரசாயனங்களின் கலவையால் ஆனது. அவை வேறொன்றுமல்ல – பயிற்சி + முயற்சி என்பவையே. இந்த இரசாயனங்களைப் பயன்படுத்தும்போது ஒரு கிரியா ஊக்கியைத் தவறாமல் இவற்றில் கலக்க வேண்டும். அதுதான் தொடர்ச்சி. ஆம்! நம் இலக்கை அடையத் தக்க பயிற்சியும், அதை அடைவதற்கான முயற்சியும் தொடர்ச்சியாகச் செய்யப்பட வேண்டும். சோறு பொங்கும்போது நுரை வரும். அதைத் தாய்மார்கள் தள்ளி விடுவார்கள். தன்முனைப்பு முயற்சி நமக்குள் பொங்கும்போது, நுரையாக வரும் தளர்ச்சியை அவ்வப்போது அப்புறப் படுத்தி விட வேண்டும்.

5. தன்முனைப்பால் முன்னேற விரும்புகிற எவரும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. சிந்தனை – செயல்பாடு – பயன் அநுபவிப்பு ஆகிய இந்த மூன்று மூன்னேற்ற வழிமுறைகளில், நாம் அடைய விரும்பும் இலக்குக்கு அப்பாற்பட்ட, வீணான எதுவும் கலந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த வழிமுறைகளே என்னை உயர்த்தியவை. இவை எவரையும் உயர்த்தும். இந்த வழிமுறைகளை மையமாகக் கொண்ட தன்முனைப்புப் பயிற்சி முறையே என்னுடையது. என் பயிற்சியில் நினைவாற்றலைப் பெருக்குவது, எதையும் தர்க்கரீதியாக அலசி முடிவெடுப்பது, உளவியல் விதிகளை அறிந்து பயன்படுத்துவது, எதையும் மனித நேயத்தோடு அணுகுவது ஆகியவற்றுக்கு முக்கிய இடமுண்டு.

என்னுடைய மூன்று நாள் தன்முனைப்புப் பயிற்சியில் பங்கேற்றவர்கள் எல்லோருமே தம் வாழ்வில் தாம் எதை அடைய வேண்டும் என்று அறிந்தவர்களாகவும், அதை அடையும் வழிகளை உணர்ந்தவர்களாகவும் திருப்தியுடன் செல்கிறார்கள். சில மாதங்களில் அவர்களில் பெரும்பாலானவர்களின் வாழ்வில் அவர்கள் விரும்பிய முன்னேற்றம் கிடைத்ததை அவர்களின் கடிதங்கள், தொலை பேசி, நேரடி வருகை ஆகியவற்றால் அறிந்து மிக மிக மகிழ்

கிறேன்.

தமிழகம் மட்டுமல்லாமல் ஐரோப்பிய நாடுகள், கனடா, மலேசியா போன்ற நாடுகளில் என் தன்முனைப் பயிற்சிக்குப் பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. மலேசியாவில் ஆயிரக்கணக்கானோர் ஆண்டுதோறும் என்னிடம் பயிற்சி பெற விரும்புகிறார்கள். என் நிகழ்ச்சிகளை அங்கே நண்பர் பாலசுப்ரமணியம் அவர்கள் மலேசியப் பல்கலைக் கழகம், பல்வேறு நிறுவனங்கள் ஆகியவற்றில் பயிற்சி வகுப்புகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்து என்னை அழைத்து நடத்துகிறார். என் கல்லூரி விடுமுறை நாட்களை நான் இதற்குப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

நான் முன்னேறிய வழியிலேயே ஆயிரக்கணக்கானோர் முன்னேற உதவும் என் தன்முனைப்புப் பயிற்சி வகுப்புகள் கடந்த சில ஆண்டுகளில் என் வாழ்வின் ஒரு பகுதியாகி விட்டன.

என் பயிற்சி முறையில் நான்கு குறியீடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. + வகுத்தல் ; × பெருக்கல்; + கூட்டல் - கழித்தல்.


வகுக்க வேண்டியது நேரத்தை: பெருக்க வேண்டியது வாய்ப்பை; கூட்ட வேண்டியது வலிமையான தன்னம்பிக்கை; கழிக்க வேண்டியது மனம், உடல் இரண்டின் பலவீனத்தை. மூன்று நாளும் இதற்கான பயிற்சி அளிக்கிறேன். ஒவ்வொரு மனிதரின் மனம், மூளை, உடல் ஆகியவற்றில் பொதிந்துள்ள அளப்பரிய ஆற்றலை அவர்களுக்கு அடையாளம் காட்டி, அதனை முழுமையாய்ப் பயன்படுத்த அவர்களுக்குச் சொல்லித் தருகிறேன்.

அது சரி. சமுதாய முன்னேற்றக்காரனாக, பெரியார் கொள்கையாளனாகப் பொது வாழ்வில் புகுந்த நான், இப்படித் தனிமனித முன்னேற்றப் பயிற்சியாளனானது சரியா? கடலாய்ப் பெருக முனைந்தவன், பனித் துளியாய்ச் சுருங்கி விட்டேனா? பொதுநலம் பேசியவன் தன்னலவாதியாகி விட்டேனா?

(தொடரும்)


# எந்த டால்கம் பவுடர் வியர்வை நாற்றத்தை தடுத்து நறுமணம் தருகிறது ?

# தாரா மட்டுமே




* மல்லிகை * சந்தனம் * லாவண்டர்
* மேக்னட் * பக்கூர்

விற்பனையாளர்

பட்டேல் எண்டர்பிரைஸஸ்
மெப்ஸ், சென்னை - 600 045.
✆ : 2363157 / 2368083

டீலர்ஷிப் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.



செல்லப்பனுக்கு மிகவும் துக்கமாக இருந்தது. அவனைச் சுற்றியிருந்த மற்ற சிறுவர்கள் எல்லாம் சிரித்துக் கொண்டிருந்தார்கள். செல்லப்பனுக்கு மட்டும் வாய் விட்டு அழத் தோன்றியது.

அவன் இதை எதிர்பார்க்கவேயில்லை. 'குரங்கு' என்பதை அவன் குஷியோடும், சந்தோஷத்தோடும்தான் இணைத்திருந்தான். அவன் குடிசை வீட்டுப் பகுதிக்கு எப்போதாவதுதான் குரங்காட்டி வருவான். அவனுக்கு அந்த இடத்தில் அப்படி ஒன்றும் பெரிசாகக் கிடைத்து விடாது என்பது நன்றாகவே தெரியும். சில பையன்களின் இடைவிடாத நச்சரிப்பே அவனை சில நேரங்களில் அந்தப் பகுதிக்குள் நுழையச் செய்யும்...

ஆனால் பணக்கார வீட்டுத் தெருக்களை விட, அந்தக் குடிசைத் தெருவில் குஷியாகவே விளையாடுவது போல் இருக்கும். குரங்காட்டி சொல்வதற்கு மேலாகவே அது கரணம் அடித்துக் காட்டும். இலங்கைக்கு இடைவிடாது குஷாலாகவே தாண்டிக் காட்டும். சுற்றியிருக்கும் குடிசைப் பையன்களின் ஆழ் மனத்தின் சந்தோஷக் கூக்குரல்கள் அதற்கு அந்த அளவு உற்சாகத்தைத் தந்திருக்க வேண்டும். மற்ற தெரு பையன்களின் கூக்குரல்களில் அது இவ்வளவு இயல்பான சந்தோஷத்தை உணர்ந்திருக்காதோ என்னவோ...?

ஆனாலும், இந்தக் குரங்கைப் பார்க்கும் போது, செல்லப்பனுக்கு நெஞ்சைப் பிசைந்தது. இது ஒரு கூண்டுக்குள் இருந்தது ஒரு முக்கியமான காரணமாக

# மிருகம்

இருக்கக்கூடும். செல்லப்பனின் ரொம்ப நாள் ஆசையான டவுன் சிறுவர் பூங்கா கனவு, இப்படி ஒரு சோகத்தோடு நனவாகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லைதான்.

அவனது நெடுநாளைய 'பார்க்' ஆசைக்கு அவன் அம்மா இசைந்ததற்கு ஒரு காரணம் இருந்தது. அவன் கூலி வேலை செய்யும் இடத்தில், பொங்கல்



பண்டிகையை முன்னிட்டு, வெகு ஆச்சரியமாக அவள் முதலாளி மூனு நாள் லீவும் போனஸும் தந்திருந்தார். அந்த போனஸை வாங்கும் போதே செல்லப்பனை அந்த டவுன் பார்க்குக்குக் கூட்டிப் போக வேண்டும் என்று அவள் முடிவெடுத்தாள். காலையில் பழையதை ரொப்பிக் கொண்டு விட்டால் திரும்பி வரும் வரை கூடத் தாங்கும். ரொம்பப் பசித்தது என்றால் ஏதாவது ஹோட்டலுக்குக் கூடப் போகலாம். செல்லப்பனுக்கு பரோட்டா என்றால் ரொம்பப் பிடிக்கும். பிய்த்துப் போட்ட பரோட்டா துண்டுகளை, 'உஸ்... உஸ்' சத்தத்துடன் அவன் குருமாவில் புரட்டிப் புரட்டிச் சாப்பிடுவதை நாள் பூரா கூடப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அவளுக்கும் கூட சினிமா பார்ப்பது ரொம்ப ஆனந்தம் தான். குறிப்பாக சிவாஜி, சரோஜாதேவி ஜோடி என்றால் படத்தோடு ஒன்றி விடுவாள். தியேட்டரில் சரோஜாதேவி அழுவதை விட இவள் அழுவதைத்தான் பலர் திரும்பிப் பார்த்திருக்கிறார்கள். அது என்னமோ... அழுகின்ற கதாநாயகிகளுடன் இவளால் நன்றாக லயித்துப் போக முடிகிறது.

அவள் கணவன் அவளையும் கைக் குழந்தையையும் விட்டு விட்டு எவளுடனோ ஓடிப் போய் விட்ட துக்கத்தை அப்படித்தான் தீர்த்துக் கொள்ள முடிகிறது. ஆறு வயது செல்லப்பனுக்கு இன்னமும் தந்தையின் இல்லாமை பெரிதாகத் தெரியா விட்டாலும், அவளுக்கு அது ஒரு பேரிழப்பு தான். தான் அழகாய் இல்லை என்ற காரணத்தினாலேயே கணவன் ஓடி விட்டதாக சில இரவுப் பொழுதுகளில் அவள் தன்னைத்தானே தேற்றிக் கொள்வாள். அப்போது அவள் கன்னங்களில் வழியும் சூடான கண்ணீர் பட்டு, அவளை அணைத்தவாறு படுத்திருக்கும் செல்லப்பன் தூக்கம் கலைந்து எழுந்ததும் உண்டு.

ஆனால், அந்தக் கவலையை எல்லாம் விட, செல்லப்பனின் தற்போதைய துக்கம்தான் அவளுக்குப் பெரிதாகப் பட்டது.

"அட, ஏண்டா கெடந்து மருகறே.

ஹேமா இராஜ்

என்னாச்சி இப்ப...''

''கொரங்கு பாவம்மா. கூண்டுக்குள்ள பூட்டி வச்சிருக்காங்க...''

அவன் உள்மன வேதனையை முகம் தெளிவாக வெளிப்படுத்தியது. பூங்காவில் நுழைந்தவுடனேயே அது இருந்ததால், அவனின் 'டவுன் பார்க்' ஆசை அனுபவிக்கப்படும் முன்னரே அடங்கிப் போய்விட்டது புரிந்தது.

தான் சிறைப்பட்டிருக்கும் வேதனையை அந்தக் குரங்கு தன் பெரிய கண்களால் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது. சற்றே கூன் போட்டு அமர்ந்தபடி, தன் மெல்லிய விரல்களால், கூண்டுக் கம்பிகளைப் பற்றியபடி இருந்த அதன் உடல்மொழி, அடர்த்தியான ஒரு சோகத்தை சுற்றிலும் பரப்பியபடியே இருந்தது.

அதன் காரணமாகவே, பார்வையாளர்கள் அதிக நேரம் அந்தக் கூண்டின் அருகே நில்லாமல், விலகிப் போய்க் கொண்டிருந்தனர். அந்தக் கூண்டைச் சுற்றிலும் ஒரு நான்கடி தள்ளி, தடுப்புக் கம்பிகள் கட்டப்பட்டிருந்தன. கீழாக இருந்த கம்பியில் ஏறி, சற்று எக்கிப் பார்த்தவாறு செல்லப்பன் கேட்டான்.

''ஏம்மா... இதுக்கு சோறெல்லாம் போடுவாங்களா...?''

அவளுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் சொன்னாள்... ''அதெல்லாம் போடுவாங்கடா... உசுரோட இருக்குதில்ல...''

ஏதோ இவர்கள் பேசுவதின் பொருள் புரிந்தது போல, அந்தக் குரங்கு தன் ஒரு கையைச் சற்று நீட்டி 'தா' என்பது போல் கேட்டது.

செல்லப்பன் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருக்க, அது சற்று பின்னால் சென்று, இரண்டு குட்டிக் கரணங்களை வேகமாக அடித்துவிட்டு, மீண்டும் முன்னால் வந்து கை நீட்டியது.

செல்லப்பனுக்குப் பொறுக்கவில்லை. தன் அரை நிஜார் பாக்கெட்டில் கைவிட்டு அந்தப் பாதி கடித்திருந்த முறுக்கை எடுத்தான்.

''அம்மா... இதைக் கொடுக்கறேன்...''

அவள் பதில் சொல்லவில்லை. முறுக்கை விட்டுக் கொடுக்க தன் மகன் முன்வந்தது அவளுக்கு ஆச்சரியாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த முறுக்கை சுவைத்து முடிக்க செல்லப்பன் திட்டமிட்டிருந்தது அவளுக்குத் தெரியும்.

தடுப்புக் கம்பிகளின் மீது கால் வைத்து ஏற முற்பட்ட செல்லப்பனை, அந்தக் குரல் தடுத்து நிறுத்தியது.. ''டேய்... யார்ரா அது... கம்பி மேல ஏர்றது...''

காக்கி உடை அணிந்த ஒரு காவலாளி, அவர்களின் பின்புறமாக வந்தான். செல்லப்பன் திணறலாகவே பதில் சொன்னான்.


''அண்ணே... கொரங்குக்கு இந்த முறுக்கு கொடுக்கறேன்.''

அவர் பதில் அதட்டலாகவே வந்தது. ''டேய்.. கிட்ட போகாதேடா... பெறாண்டிடும்... அதுக்கு வெறி புடிச்சிருக்கு. முறுக்கெல்லாம் போடக் கூடாது. ஆபீஸர் பார்த்தா திட்டுவாரு.''

அவர் தடுப்புக் கம்பியைத் தன் குச்சியால் ஒருமுறை தட்டிவிட்டுச் சென்றார். செல்லப்பனுக்கு அழுகையே வந்து விட்டது. ''வாடா... போலாம்...'' என்று சொன்ன தன் அம்மாவை அவன் ஆதங்கத்துடன் பார்த்தான்.

''இதைக் கொடுக்கறேம்மா. ஒண்ணும் ஆவாதும்மா...'' என்ற தன் மகனை அவள் பிரமிப்புடன்

சர்ச்சை ஏற்படுத்திய வங்க தேச எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரீன், அண்மையில் இந்தியா



வந்திருந்தாரல்லவா? அவர் வாழ்க்கையை சினிமாவாக எடுக்கப் போகிறாராம், பிரபல மும்பை தயாரிப்பாளரான மகேஷ்பட். ''அவரது சவால் நிறைந்த வாழ்க்கையும், அவரது துணிச்சலும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. ஒரு திரைப்படக் கதைக்குரிய அனைத்து அம்சங்களும் அவரது வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளன'' என்று காரணம் சொல்லுகிறார்!''

– எம்.

பார்த்தான். அவன் மௌனத்தைப் பயன்படுத்திக் கொண்ட செல்லப்பன், கூண்டை ஏறிட்டுப் பார்த்தான். தடுப்புக் கம்பியைத் தாண்டாமல், எப்படி குரங்குக்கு முறுக்கைத் தருவது என்று யோசித்தான்.

கூண்டின் கம்பிச் சுவருக்கும், கூரைக்கும் இடையே சிறு சிறு இடைவெளிகள் இருந்தது தெரிந்தது. கொஞ்சமும் யோசிக்காமல், ஒரு இடைவெளியை நோக்கித் தன் கையில் இருந்த முறுக்கை எறிந்தான்.



புளியம் பழங்களை அடித்துப் பழகியிருந்தும் கூட, பதற்றத்தில் அவன் குறி தவறியது. குறுக்குக் கம்பிகளில் பட்டு கூண்டுக்கு வெளியே அவன் எறிந்த முறுக்கு விழுந்தது.

தனக்கு முன்பாக விழுகின்ற முறுக்கை, கம்பிகளின் வழியே நீட்டிய விரல்கள் மூலமாகப் பிடிக்க அந்தக் குரங்கு முயன்றது. அதன் விரல்களில் பட்டு ஒரு நிதானமற்ற விநாடி நேரம் அந்த முறுக்கு நின்றது. பின்னர், குரங்கின் விரல்கள் வழியாக மெல்ல நழுவி, தரையில் விழுந்தது.

அதன் கண்களில் வெளிப்பட்ட ஏமாற்றம் செல்லப்பனை இயக்கியிருக்க வேண்டும். அவன் தடுப்புக் கம்பிகளைத் தாண்டினான். கண நேரத்திலே கூண்டருகே சென்று, முறுக்கை எடுத்தான். சற்று எம்பி கூண்டின் மேல் இருந்த இடைவெளி நோக்கி முறுக்கை எறிந்தான்.

''எவண்டா அவன்... சொல்லச் சொல்ல கேக்காம... அட்றா நாயை...'' என்ற குரல் செல்லப்பனை திடுக்கிட வைத்தது. அந்தக் காவலாளி உருட்டுக் கட்டையுடன் ஓடி வருவது தெரிந்ததும், திரும்பி, தன் தாயை நோக்கி விரைந்தான். எதிரே இருந்த தடுப்புக் கம்பிகளில், கீழ்க் கம்பியின் மேல் ஒரு காலை வைத்து, எக்கி, மேல் கம்பி மேல் கைகளையும் மறுகாலையும் வைத்துத் தாண்டினான்.

அவன் கையிலிருந்த முறுக்கு எண்ணெய் தான் அவன் பிடி நழுவக் காரணமாய் இருக்க வேண்டும்.

கைகளும், கால்களும் பின்னிப் பிணைந்து குழப்பமாய் அவன் தடுப்புக் கம்பி தாண்டி விழுந்தான்.

அள்ளி எடுத்த அவன் தாயின் சேலையை அவன் முன் நெற்றியில் இருந்து பீறிட்ட இரத்தம் நனைத்தது. ''ஐயோ ரத்தம்....'' என்ற அவளின் கூக்குரல் அங்கு ஒரு சிறு கும்பலைக் கூட்டியது.

பிரமித்துப் போய் இருந்த செல்லப்பனின் காயத்தின் மேல் ஒரு துணி கட்டப்பட்டது. இவ்வளவு இரத்தம் வழிந்தும் ஏன் வலிக்கவில்லை என்று அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.


''காயம் ஆழமாத்தான் இருக்கு. உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போ... தோ.. இங்க பக்கத்துலதான் இருக்கு...'' என்ற காவலாளியின் குரலில் குற்ற உணர்வு தெரிந்தது. அவள் தன் மகனைத் தூக்கியபடி எழுந்தாள்.

கண் இமைகளின் மேல் வழிந்து, காய்ந்து போக ஆரம்பித்த இரத்தத் தாரைகளின் ஊடே, செல்லப்பன் அந்தக் கூண்டைப் பார்த்தான். அந்தக் குரங்கு முறுக்கை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. ●

## சிஷ்யர்களின் நாடகத்தில் குரு!

பூர்ணம் விஸ்வநாதன் இப்போது நாடகங்கள் போடுவது இல்லை என்றாலும், அவரது குழுவில் இருந்தவர்கள் சேர்ந்து 'குருகுலம்' என்ற பெயரில் நாடகக் குழு ஆரம்பித்து தரமான நாடகங்களை மேடையேற்றி வருகிறார்கள். சென்னையில் நாடக அகாடமி நடத்திய நாடக விழாவில், குருகுலம் குழுவின் சில்வர் ஜூபிலி நாடகமான 'கனவு இல்லம்' நடத்தப்பட்டது. அப்போது நாடகத்தில் ஐந்தே நிமிடம் தோன்றும் ஒரு கேரக்டரில், பூர்ணம் அமர்க்களமாய் நடித்து, சிஷ்யர்களை கௌரவப்படுத்தினார்! இது சிஷ்யர்களை மிகவும் நெகிழவைத்து விட்டது.

– மௌலி



# S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

***முதியோர் சேவை பெரியது!***

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு **(80G, Income Tax Excemption)** உண்டு

**S.V. HOME FOR AGED**
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : http/www.chennaibiz.com/svhome
Email: svhome@chennaibiz.com

## "5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer
ஸ்ரீமதி. லஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்.
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது. இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டிஸ், ஸ்பாண்டிலைட்டிஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.


கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க. தொலைபேசி
**0413-346683**

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

**MARC** ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, கிபார்ச்சுன் பேக்கரி எதிரில்)
**Fax : 91 - 0413 - 346683**

# பொன்னியின் செல்வன்

ஐந்தாம் பாகம்



## தியாக சிகரம்

அமரர் கல்கி

முதல் அத்தியாயம்

# மூன்று குரல்கள்

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் பொன்னியின் செல்வர் பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தார். தஞ்சைக்குச் சென்று தந்தை தாயாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. இலங்கையின் அரசைத் தாம் கவர எண்ணியதாகத் தம் மீது சாட்டப்பட்ட குற்றம் ஆதாரமற்றது என்று நிரூபிக்க அவர் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தையின் வாக்கை மீறி நடந்ததாகத் தம் மீது ஏற்படக்கூடிய அபவாதத்தைக் கூடிய விரைவில் போக்கிக் கொள்ளவும் அவர் விரும்பினார்.

ஆயினும், தமது ஆர்வத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு, தமக்கையாரிடமிருந்து செய்தி வந்த பின்னர் தான் தஞ்சைக்குப் புறப்பட வேண்டுமென்று உறுதியாக இருந்தார்.

பொழுது போவது என்னமோ மிகவும் கஷ்டமாக இருந்தது. புத்த பிக்ஷுக்கள் தினந்தோறும் நடத்திய ஆராதனைகளிலும் பூஜைகளிலும் கலந்து கொண்டு சிறிது நேரத்தைப் போக்கினார்.

சூடாமணி விஹாரத்தின் சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த அருமையான சித்திரக் காட்சிகளைப் பார்ப்பதில் சிறிது நேரம் சென்றது.

பிக்ஷுக்களுடன், முக்கியமாகச் சூடாமணி விஹாரத்தின் ஆசார்ய பிக்ஷுவுடன் சம்பாஷிப்பதிலே கழிந்த பொழுது அவருக்கு உற்சாகத்தை அளித்தது.

ஏனெனில் சூடாமணி விஹாரத்தின் தலைமைப் பிக்ஷு கீழ்த்திசைக் கடலுக்கு அப்பாலுள்ள பற்பல நாடுகளிலே வெகு காலம் யாத்திரை செய்தவர். சீன தேசத்திலிருந்து சாவகத் தீவு வரையில் பல ஊர்களுக்கும் சென்று வந்தவர். அந்தந்த நாடுகளைப் பற்றியும் அவற்றிலுள்ள நகரங்களைப் பற்றியும் ஆங்காங்கு வசித்த மக்களைப் பற்றியும் அவர் நன்கு எடுத்துக் கூற வல்லவராயிருந்தார்.

சீன தேசத்துக்குத் தெற்கே கடல் சூழ்ந்த பல நாடுகள் அந்நாளில் ஸ்ரீ விசயம் என்னும் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன. அருமண நாடு, காம்போஜ தேசம், மானக்கவாரம், தலைத்தக்கோலம், மாபப்பாளம், மாயிருடிங்கம், இலங்காசோகம், தாமரலிங்கம், இலாமுரி தேசம் முதலிய பல நாடுகளும் நகரங்களும் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டோ, நேசப் பான்மையுடனோ இருந்து வந்தன. இவற்றுக்கெல்லாம் நடுநாயகமாகக் கடாரம் என்னும் மாநகரம் இணையற்ற சீர் சிறப்புக்களுடனும் செல்வ வளத்துடனும் விளங்கி வந்தது.

அந்த நாடு நகரங்களைப் பற்றி விவரிக்கும்படி ஆச்சாரிய பிக்ஷுவுக்கு ஒய்வு கிடைத்தபோதெல்லாம் பொன்னியின் செல்வன் அவரைக் கேட்டு வந்தார். அவரும் அலுப்புச் சலிப்பில்லாமல் சொல்லி வந்தார். அந் நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைப் பற்றியும் வர்த்தகப் பெருக்கத்தைப் பற்றியும் கூறினார். பொன்னும் மணியும் கொழித்துச் செந்நெல்லும் கரும்பும் செழித்துச் சோழ வளநாட்டுடன் எல்லா வகையிலும் போட்டியிடக்கூடிய சிறப்புக்களுடனும் அந் நாடுகள் விளங்குவதைப் பற்றிக் கூறினார். பழைய காலத்திலிருந்து தமிழகத்துக்கும் அந்த நாடுகளுக்கும்

உள்ள தொடர்புகளைப் பற்றிக் கூறினார். பல்லவ நாட்டுச் சிற்பிகள் அந்த தேசங்களுக்குச் சென்று எடுப்பித்திருக்கும் அற்புத சிற்பத் திறமை வாய்ந்த ஆலயங்களைப் பற்றிச் சொன்னார். தமிழகத்திலிருந்து சென்ற சித்திர, சங்கீத, நாட்டியக் கலைகள் அந்நாடுகளில் பரவியிருப்பதைப் பற்றியும் கூறினார். இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களும், விநாயகர், சுப்பிரமணியர், சிவன், பார்வதி, திருமால் ஆகிய தெய்வங்களும், புத்த தர்மமும் அந்த தேசத்து மக்களின் உள்ளங்களில் கலந்து குடிகொண்டிருப்பதையும், ஒன்றோடொன்று பிரித்து உணர முடியாதவர்களாக அந்நாட்டு மக்கள் எல்லாத் தெய்வங்களையும் வணங்கி வருவதையும் எடுத்துச் சொன்னார். தமிழ்மொழியின் தந்தையாகிய அகஸ்திய முனிவருக்கு அந்த நாடுகளில் விசேஷ மரியாதை உண்டு என்பதையும், அம்முனிவருக்குப் பல கோயில்கள் கட்டியிருப்பதையும் கூறினார்.

இதையெல்லாம் திரும்பத் திரும்ப அருள்மொழி வர்மர் கேட்டுத் தெரிந்து மனத்திலும் பதிய வைத்துக்கொண்டார். அந்தந்த தேசங்களுக்குத் தரை வழியான மார்க்கங்களையும் கடல் வழியான மார்க்கங்களையும் இளவரசர் நன்கு விசாரித்து அறிந்தார். வழியில் உள்ள அபாயங்கள் என்ன, வசதிகள் என்ன என்பதையும் கேட்டு அறிந்தார்.

''சுவாமி! அந்த நாடுகளில் மறுபடியும் தாங்கள் யாத்திரை செய்யும்படியாக நேரிடுமா?'' என்று வினவினார்.

''புத்த பகவானுடைய சித்தம் போல் நடக்கும். இளவரசே! எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றார் பிக்ஷு.

''நானும் தங்களுடன் வரலாம் என்ற ஆசையினால்தான்.''

''நான் உலகத்தைத் துறந்த சந்நியாசி; தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர். தாங்களும் நானும் சேர்ந்து யாத்திரை செய்வது எப்படி? தங்களைச் சில நாள் இந்த விஹாரத்தில் வைத்துக் காப்பாற்றும் பொறுப்பே எனக்குப் பெரும் பாரமாயிருக்கிறது. எப்போது என்ன நேருமோ என்று நெஞ்சு திக், திக், என்று அடித்துக் கொள்கிறது...''

''சுவாமி! அந்தப் பாரத்தை உடனே நிவர்த்தி செய்ய விரும்புகிறேன். இந்தக் கணமே இங்கிருந்து...''

''இளவரசே! ஒன்று நினைத்து ஒன்றைச் சொல்லி விட்டேன். தங்களை இங்கு வைத்துக் கொண்டிருப்பது பாரமாயிருந்தாலும் அதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். தங்கள் தந்தையாகிய சக்கரவர்த்தியும் தமக்கையார் இளையபிராட்டியும் புத்த தர்மத்துக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக நாங்கள் பட்டிருக்கும் நன்றிக் கடனில் ஆயிரத்தில் ஒரு பங்குக்குக் கூட இப்போது நாங்கள் செய்வது ஈடாகாது. தாங்கள் புத்த தர்மத்துக்குச் செய்திருக்கும் உதவிதான் அற்ப சொற்பமானதா? அனுராதபுரத்தின் சிதிலமான ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் செப்பனிடச் செய்த கைங்கரியத்தை நாங்கள் மறக்க முடியுமா? அதற்கெல்லாம் இணையான பிரதி உபகாரமாக ஈழ நாட்டின் மணி மகுடத்தையே தங்களுக்கு அளிக்கப் பிக்ஷுகள் முன்வந்தார்கள். இளவரசே! அதை ஏன் மறுத்தீர்கள்? இலங்கையின் சுதந்திர சிங்காதனத்தில் தாங்கள் ஏறியிருந்தால், நூறு நூறு கப்பல்களில் ஏராளமான பரிவாரங்களுடனே கீழ்த்திசை நாடுகளுக்குத் தாங்கள் போய் வரலாமே? இந்தப் பிக்ஷுவைப் பின்தொடர்ந்து யாத்திரை செய்ய வேண்டுமென்ற விருப்பமே தங்கள் மனத்தில் தோன்றியிராதே?'' என்றார் ஆச்சாரிய பிக்ஷு.

''குருதேவரே! இலங்கை இராஜ குலத்தின் சரித்திரத்தைக் கூறும் 'மகா

வம்சம்' என்னும் கிரந்தத்தைத் தாங்கள் படித்ததுண்டா?'' என்று இளவரசர் கேட்டார்.

''ஐயா! இது என்ன கேள்வி? 'மகா வம்சம்' படிக்காமல் நான் இந்தச் சூடாமணி விஹாரத்தின் தலைவனாக ஆகியிருக்க முடியுமா?''

''மன்னிக்க வேண்டும். 'மகா வம்சம் படித்ததுண்டா?' என்று தங்களிடம் கேட்டது, தங்களுக்குப் படிக்கத் தெரியுமா என்று கேட்பது போலத்தான். ஆனால், அந்த மகாவம்சம் கூறும் அரச பரம்பரையில் யார் யார் என்னென்ன பயங்கரமான கொடும் பாவங்களைச் செய்திருக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரியும் அல்லவா? மகன் தந்தையைச் சிறையில் அடைத்தான்; தந்தை மகனை வெட்டிக் கொன்றான்; தாய் மகனுக்கு விஷமிட்டுக் கொன்றாள்; தாயை மகன் தீயிலே போட்டு வதைத்தான்!... பெற்றோர்களுக்கும் பெற்ற மக்களுக்கும் உறவு இப்படி என்றால், சித்தப்பன்மார்கள், மாமன்மார்கள், சிற்றன்னை பெரியன்னைமார்கள், அண்ணன் தம்பிகள் – இவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. குருதேவரே! இப்படிப்பட்ட கொடும்பாதகங்களை இலங்கை அரச குலத்தினர் செய்தனர் என்று 'மகா வம்சம்' கூறுகிறதல்லவா?''

''ஆம், ஆம்! அத்தகைய தீச் செயல்களுக்கு அவரவர்கள் அடைந்த தண்டனைகளையும் கூறுகிறது. அந்த உதாரணங்களைக் காட்டி மக்களைத் தர்மமார்க்கத்தில் நடக்கும்படி 'மகா வம்சம்' உபதேசிக்கிறது. அதை மறந்து விட வேண்டாம்! மகா வம்சம் புனிதமான கிரந்தம். உலகிலே ஒப்புயர்வற்ற தர்ம போதனை செய்யும் நூல்!'' என்று ஆச்சாரிய பிக்ஷு பரபரப்புடன் கூறினார்.


''சுவாமி! 'மகா வம்சம்' என்ற நூலை நான் குறைசொல்லவில்லை. இராஜ்யாதிகார ஆசை எப்படி மனிதர்களை அரக்கர்களிலும் கொடியவர்களாக்கி விடுகிறது என்பதைப் பற்றித்தான் சொன்னேன். அத்தகைய கொடும் பாவங்களினால் களங்கமடைந்த இலங்கைச் சிம்மாதனத்தை நான் மறுதளித்தது தவறாகுமா?''

''மகா புத்திமான்களான புத்த சங்கத்தார் அதனாலேதான் இலங்கை அரச வம்சத்தையே மாற்ற விரும்பினார்கள். தங்களை முதல்வராகக் கொண்டு புதிய வம்சம் தொடங்கட்டும் என்று எண்ணினார்கள். தாங்கள் அதை மறுத்தது தவறுதான். இலங்கைச் சிங்காதனத்தில் வீற்றிருந்து அசோக வர்த்தனரைப் போல் உலகமெல்லாம் புத்த தர்மத்தைப் பரப்பிப் பாதுகாக்கும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்தது...''

''குருதேவரே! பரத கண்டத்தை ஒரு குடை நிழலில் ஆண்ட அசோக வர்த்தனர் எங்கே? இன்று இந்தப் புத்த விஹாரத்தில் ஒளிந்து கொண்டு தங்கள் பாதுகாப்பை நாடியிருக்கும் இந்தச் சிறுவன் எங்கே? உண்மையில், தங்கள் சீடனாகக் கூட நான் அருகதையில்லாதவன். புத்த தர்மத்தை எப்படிப் பாதுகாக்கப் போகிறேன்?...''

''இளவரசே! அவ்விதம் சொல்ல வேண்டாம். தங்களிடம் மறைந்து கிடக்கும் மகா சக்தியைத் தாங்கள் அறியவில்லை. தாங்கள் மட்டும் புத்த தர்மத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டால் அசோகரைப் போல் புகழ் பெறுவீர்கள்...''

''என் உள்ளத்தில் இளம்பிராயத்திலிருந்து விநாயகரும் முருகனும் பார்வதியும் பரமேசுவரனும் நந்தியும் பிருங்கியும் சண்டிகேசுவரரும் கோயில் கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அப்புறப்படுத்தி விட்டல்லவா புத்த தர்மத்துக்கு இடங் கொடுக்க வேண்டும்? குருதேவரே! அடியேனை மன்னியுங்கள். தங்களுடனே நான் யாத்திரை வருகிறேன் என்று சொன்ன போது புத்த தர்மத்தில் சேர்ந்து விடுவதாக எண்ணிச் சொல்லவில்லை. கடல்களைக் கடந்து தூர தூர தேசங்களுக்குப் போய்ப் பார்க்கும்



ஆசையினால் தங்களுடன் வருவதாகச் சொன்னேன்! ஆனாலும் மறுபடி யோசிக்கும் போது...''

''இளவரசே! தங்கள் வார்த்தையை நான் தவறாகத்தான் புரிந்து கொண்டேன். ஆனாலும் புத்த தர்மத்துக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லாமற் போகவில்லை. புத்த பகவானுடைய பூர்வ ஜன்மம் ஒன்றில் அவர் சிபிச் சக்கரவர்த்தியாக அவதரித்திருந்தார். புறாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தமது சதையை அவர் அரிந்து கொடுத்தார். அந்தச் சிபியின் வம்சத்திலே வந்தவர்கள் சோழ குலத்தினர். ஆகையினாலேதான் உங்கள் குலத்தில் பிறந்தவர்களுக்குச் 'செம்பியன்' என்ற பட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தாங்கள் மறந்து விட வேண்டாம்.''

''மறக்கவில்லை, குருதேவரே! மறந்தாலும் என் உடம்பில் ஓடும் இரத்தம் என்னை மறக்க விடுவதில்லை. ஒரு பக்கத்தில் சிபிச் சக்கரவர்த்தியும் மனுநீதிச் சோழரும் என்னுடைய இரத்தத்திலேயும் சதையிலேயும் எலும்பிலேயும் கலந்திருந்து, 'பிறருக்கு உபகாரம் செய்; மற்றவர்களுக்காக உன்னுடைய நலங்களைத் தியாகம் செய்!' என்று வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். மற்றொரு பக்கத்தில் கரிகால் வளவரும் விஜயாலய சோழரும் பராந்தக சக்கரவர்த்தியும் என்னுடைய இரத்தத்திலே சேர்ந்திருந்து 'கையில் கத்தியை எடு! நால்வகைச் சைனியத்தைத் திரட்டு! நாலு திசையிலும் படை எடுத்துப் போ! கடல் கடந்து போ! சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரித்து உலகம் காணாத மகோந்நதம் அடையச் செய்!' என்று இடித்துக் கூறுகிறார்கள். இன்னொருபுறத்தில் சிவனடியார் கோச்செங்கணாரும், தொண்டைமண்டலம் பரவிய ஆதித்த சோழரும், மகானாகிய கண்டராதித்தரும் என் உள்ளத்தில் குடிகொண்டு 'ஆலயத் திருப்பணி செய்! பெரிய பெரிய சிவாலயங்களை எழுப்பு! மேரு மலைபோல் வானளாவி நிற்கும் கோபுரங்களையுடைய கோவில்களை நிர்மாணி!' என்று உபதேசித்துக் கொண்டேயிருக்கிறார்கள். என் முன்னோர்கள் இவ்வளவு பேருக்கும் நடுவில் கிடந்து நான் திண்டாடுகிறேன். குருதேவரே! அவர்களுடைய தொந்தரவுகளைப் பொறுக்க முடியாமல் உண்மையாகவே சில சமயம் எனக்குப் புத்த சமயத்தை மேற்கொண்டு பிக்ஷுவாகி விடலாம் என்று கூடத் தோன்றுகிறது. கருணை கூர்ந்து எனக்குப் பௌத்த சமயத்தைப் பற்றிச் சொல்லுங்கள். புத்த பகவானைப் பற்றிச் சொல்லுங்கள்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

இதைக் கேட்ட பிக்ஷுவின் முகம் மிக்க மலர்ச்சியடைந்து விளங்கியது.

''இளவரசே! பௌத்த மதத்தைப் பற்றியும் புத்த பகவானைப் பற்றியும் தாங்கள் அறியாதது என்ன இருக்கக்கூடும்?'' என்றார்.

''அதோ அந்தச் சுவர்களில் காணப்படும் சித்திரக் காட்சிகளை விளக்கிச் சொல்லுங்கள். அங்கே ஓர் இராஜகுமாரர் இரவில் எழுந்து போகப் பிரயத்தனப்படுவது போல் ஒரு சித்திரம் இருக்கிறதே? அது என்ன? அவர் அருகில் படுத்திருக்கும் பெண்மணி யார்? தொட்டிலில் தூங்கும் குழந்தை யார்? அந்த இராஜகுமாரர் முகத்தில் அவ்வளவு கவலை குடிகொண்ட தோற்றம் ஏன்?'' என்று இளவரசர் கேட்டார்.

''ஐயா! புத்த பகவான் இளம் பிராயத்தில் தங்களைப் போல் இராஜ குலத்தில் பிறந்த இளவரசராக இருந்தார். யசோதரை என்னும் நிகரற்ற அழகு வாய்ந்த மங்கையை மணந்திருந்தார். அவர்களுக்கு ஒரு செல்வப் புதல்வன் பிறந்திருந்தான். தகப்பனார் இராஜ்ய பாரத்தை அவரிடம் ஒப்புவிக்கச் சித்தமாயிருந்தார். அந்தச் சமயத்தில் சித்தார்த்தர் உலகில் மக்கட் குலம் அனுபவிக்கும் துன்பங்களைப் போக்குவதற்கு வழி கண்டுபிடிக்க விரும்பினார். இதற்காக அருமை

மனைவியையும் செல்வக் குழந்தையையும் இராஜ்யத்தையும் விட்டுப் போகத் தீர்மானித்தார். அவர் நள்ளிரவில் அரண்மனையை விட்டுப் புறப்படும் காட்சிதான் அது. இளவரசே! இந்த வரலாற்றைத் தாங்கள் முன்னம் அறிந்ததில்லையா?''

''ஆம், ஆம்! பலமுறை கேட்டு அறிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தச் சித்திரத்தில் பார்க்கும் போது மனத்தில் பதிவது போல் வாயினால் கேட்ட வரலாறு பதியவில்லை. தூங்குகின்ற யசோதரையை எழுப்பிச் 'சித்தார்த்தர் உன்னை விட்டுப் போகிறார்; அவரைத் தடுத்து நிறுத்து!' என்று எச்சரிக்கத் தோன்றுகிறது. சரி; அடுத்த சித்திரத்தைப் பற்றிச் சொல்லுங்கள்!''

புத்த பகவானுடைய வரலாற்றைக் குறிப்பிட்ட மற்றச் சித்திரங்களையும் ஒவ்வொன்றாக ஆச்சாரிய பிக்ஷு எடுத்து விளக்கி வந்தார். அருள்மொழி வர்மர் புத்த தர்மத்தைத் தழுவினால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்ற ஆசை பிக்ஷுவின் இதய அந்தரங்கத்தில் இருக்கத்தான் இருந்தது. ஆகையால் மிக்க ஆர்வத்துடனே சித்தார்த்தருடைய சரித்திரத்தைச் சொல்லி வந்தார். கடைசியில், சித்தார்த்தர் போதி விருட்சத்தின் அடியில் அமர்ந்து தவம் செய்து ஞான ஒளி பெறும் சித்திரத்துக்கு வந்தார்.

அந்தச் சித்திரத்தைக் குறித்து அவர் சொன்ன பிறகு பொன்னியின் செல்வர், ''குருதேவா! தங்கள் கருத்துக்கு மாறாக நான் ஏதேனும் சொன்னால் தங்களுக்குக் கோபம் வருமா?'' என்று கேட்டார்.

''இளவரசே! நான் ஐம்புலன்களை வென்று மனத்தை அடக்கவும் பயின்றவன். தங்கள் கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம்'' என்றார் பிக்ஷு.

''போதி விருட்சத்தின் அடியில் வீற்றிருந்தபோது சித்தார்த்தர் ஞான ஒளி பெற்றார் என்பதை நான் நம்பவில்லை.''


ஐம்புலன்களையும் உள்ளத்தையும் அடக்கியவராயிருந்தபோதிலும் பிக்ஷுவின் முகம் சுருங்கியது.

''இளவரசே! மகா போதி விருட்சத்தின் ஒரு கிளை அசோகவர்த்தனரின் காலத்தில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. அந்தக் கிளை வேர் விட்டு வளர்ந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றைக்கும் பட்டுப் போகாமல் அநுராதபுரத்தில் விசாலமாகப் படர்ந்து விளங்கி வருகிறது. அந்தப் புனித விருட்சத்தைத் தாங்களே அநுராதபுரத்தில் பார்த்திருப்பீர்கள். பின்னர், 'நம்பவில்லை' என்று ஏன் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''குருதேவரே! போதி விருட்சமே இல்லையென்று நான் சொல்லவில்லை. அதனடியில் அமர்ந்து சித்தார்த்தர் தவம் செய்ததையும் மறுக்கவில்லை. அங்கேதான் அவர் ஞான ஒளி பெற்றார் என்பதைத்தான் மறுத்துக் கூறுகிறேன். என்றைய தினம் சித்தார்த்தர் மக்களுடைய துன்பத்தைத் துடைக்க வழி காண்பதற்காகக் கட்டிய மனைவியையும் பெற்ற மகனையும் உரிமையுள்ள இராஜ்யத்தையும் தியாகம் செய்து நள்ளிரவில் புறப்பட்டாரோ, அப்போதே அவர் ஞான ஒளி பெற்றுவிட்டார் என்றுதான் சொல்லுகிறேன். அதைக் காட்டிலும் ஓர் அற்புதமான செயலை நான் எந்த வரலாற்றிலும் கேட்டதில்லை. இராமர் தன் தந்தையின் வாக்கைப் பரிபாலனம் செய்வதற்காக இராஜ்யத்தைத் தியாகம் செய்தார். பரதர் தம் தமையனிடம் கொண்ட பக்தியினால் 'இராஜ்யம் வேண்டாம்' என்றார். அரிச்சந்திர மகாராஜா தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக இராஜ்யத்தைத் துறந்தார். சிபிச் சக்கரவர்த்தியும் புறாவுக்கு அடைக்கலம் கொடுத்து விட்ட காரணத்தினால் தன் உடலை அறுத்துக் கொடுத்தார். ஆனால் சித்தார்த்தர்

யாருக்கும் வாக்குக் கொடுக்கவில்லை; யாரையும் திருப்தி செய்ய விரும்பவில்லை. மனிதகுலத்தின் துன்பத்தைப் போக்க வழி கண்டுபிடிக்கும் பொருட்டுத் தாமாகவே எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டுப் புறப்பட்டார். புத்த பகவான் போதி விருட்சத்தின் அடியில் ஞான ஒளி பெற்ற பிறகு இதைக் காட்டிலும் அற்புதமான செயல் ஏதேனும் செய்ததுண்டா? ஆகையால் அரண்மனையை விட்டுப் புறப்பட்ட போதே அவர் ஞான ஒளி பெற்று விட்டார் என்று சொல்வது தவறாகுமா?"

இவ்விதம் பொன்னியின் செல்வர் கூறிய மொழிகள்






ஆச்சாரிய பிக்ஷுவின் செவிகளில் அமுதத் துளிகளைப் போல் விழுந்தன.

"ஐயா! தாங்கள் கூறுவதில் பெரிதும் உண்மையிருக்கிறது. ஆயினும் போதி விருட்சத்தினடியிலேதான் மக்களின் துன்பங்களைப் போக்கும் வழி இன்னதென்பது புத்த பகவானுக்கு உதயமாயிற்று. அதிலிருந்துதான் மக்களுக்குப் பகவான் போதனை செய்யத் தொடங்கினார்."

"சுவாமி! புத்த பகவானுடைய போதனைகளைக் கேட்டிருக்கிறேன். அந்த போதனைகளைக் காட்டிலும் அவருடைய தியாகச் செயலிலேதான் அதிக போதனை நிறைந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. மன்னிக்க வேணும். நானும் அவருடைய செயலைப் பின்பற்ற விரும்புகிறேன். சற்று முன்னால், என் முந்தையரின் மூன்று விதக்





குரல்கள் என் உள்ளத்தில் ஓயாமல் ஒலித்து என்னை வேதனைப்படுத்து வதாகச் சொன்னேன் அல்லவா! அந்தத் தொல்லையிலிருந்து விடுதலை அடைய விரும்புகிறேன். என்னைத் தங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங் கள்!'' என்றார் இளவரசர்.

''இளவரசே! தங்களையொத்த சீட னைப் பெறுவதற்கு நான் எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு வேண்டிய தகுதியும் எனக்கில்லை; தைரியமும் இல்லை. இலங்கையில் புத்த மகா சங்கம் கூடும்போது தாங்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்'' என்றார் பிக்ஷு.

"தங்கள் தகுதியைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் தைரியத் தைப் பற்றிச் சொன்னீர்களே, அது என்ன?''

''ஆமாம்; தைரியமும் இல்லைதான்! இரண்டு தினங்களாக இந்த நாகைப்பட் டினத்தில் ஒரு வதந்தி பரவிக் கொண்டு வருகிறது. அதை யார் கிளப்பி விட் டார்கள் என்று தெரியவில்லை. தாங் கள் இந்த விஹாரத்தில் இருப்பதாகவும், தங்களைப் புத்த பிக்ஷுவாக்க நாங்கள் முயன்று வருவதாகவும் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார் களாம். இதனால் அனேகர் கோபங் கொண்டிருக்கிறார்களாம். இந்த விஹாரத்தின் மீது மக்கள் படை எடுத்து வந்து உண்மையை அறிய வேண்டும் என்றும் பேசிக் கொள் கிறார்களாம்...!''

"ஆகா! இது என்ன பைத்தியக்காரத் தனம்? நான் புத்த மதத்தில் சேர்வது பற்றி ஊரில் உள்ளவர்களுக்கு என்ன கவலை? நான் காவித் துணி அணிந்து சந்நியாச ஆசிரமத்தை மேற்கொண் டால் இவர்கள் ஏன் கோபங்கொள்ள வேண்டும்? இத்தனைக்கும் எனக்குக் கலியாணம் கூட ஆகவில்லையே? மனைவி மக்களை விட்டுப் போகிறேன் என்று கூடக் குற்றம் சுமத்த முடி யாதே?'' என்றார் இளவரசர்.

"ஐயா! ஜனங்களுக்குத் தங்கள் மீது கோபம் எதுவும் இல்லை. தங்களை ஏமாற்றிப் புத்த பிக்ஷுவாக்க முயல் வதாக எங்கள் பேரிலேதான் கோபம். வெறும் வதந்தியே இப்படிப்பட்ட கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. உண்மையாகவே நடந்து விட்டால் என்ன ஆகும்? இந்த விஹாரத்தையே ஜனங்கள் தரைமட்டமாக்கி விடு வார்கள். ஏதோ தங்களுடைய தந் தையின் ஆட்சியில் நாங்கள் நிம்மதி யாக வாழ்ந்து வருகிறோம். தினந்தோ றும்,

''போதியந் திருநிழற் புனிதநிற்
பரவுதும்
மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகிற் சிறந்து
வாழ்கெனவே!''

எனப் பிரார்த்தனை செய்து வரு கிறோம். இந்த நல்ல நிலைமையைக் கெடுத்துக் கொள்ள நான் விரும்ப வில்லை. அதனாலேதான் 'தைரிய மில்லை' என்று சொன்னேன்'' என்றார் பிக்ஷு.

அவர் கூறி வாய் மூடுவதற்குள்ளே அந்தப் புத்த விஹாரத்தின் வாசற் புறத்தில் மக்கள் பலரின் குரல்கள் திரண்டு ஒருமித்து எழும் பேரோசை கேட்கத் தொடங்கியது.

பிக்ஷு அதைச் செவி கொடுத்துச் சிறிது நேரம் கேட்டு விட்டு, ''இள வரசே! நான் கூறியது உண்மையென்று நிரூபிக்க மக்களே வந்து விட்டார்கள் போலிருக்கிறது. இதை எப்படிச் சமா ளிக்கப் போகிறேனோ, தெரியவில்லை! புத்த பகவான்தான் வழிகாட்டியருள வேண்டும்!'' என்றார்.

சூடாமணி விஹாரத்தின் சுற்றுப்புறங்களில் ஆயிரக்கணக்கான மக்களின் கூக்குரல் ஒலி கணத்துக் குக் கணம் அதிகமாகிக் கொண்டு வந் தது.

(தொடரும்)

**வாழ்வில் முடிவெடுத்த அந்தத்**
**தருணம் என்றும் பசுமையானது...**





**அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேட்ட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!**

அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

## YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)
402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar), T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636. Fax: 044-2344333

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesdebuilders.com

BUY & SELL

**All Foreign Currencies & Travellers Cheques**

FOREX DIVISION
CREATORS
NOT JUST BUILDERS

- Authorised by RBI as Full fledged Money Changers
- Authorised Dealers for Travelers Cheques
- Open on all 7 days of the week.

**Forex Division**
**Yesde Associated Builders Ltd.**

105, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),
T. Nagar, Chennai - 600 017
Ph: 4340210, 4342667 Tele Fax: 91-44-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in

# சிகரத்தைத் தொட்ட சோகம்!

இன்னும் இருநூற்று நாற்பது மீட்டர் உயரம் ஏறிவிட்டால், இமயத்தின் உச்சியைத் தொட்டுவிடலாம். அதிகபட்சம் நான்கு அல்லது ஐந்து மணி நேரமாகும். அதை நினைத்துப் பார்க்கிறபோதே, வானில் பறப்பதுபோல இருந்தது காதே ஓ'சௌத் என்ற பெண்மணிக்கு. ஆனால், அந்த சமயம் அவர் எதிர்கொண்ட பிரச்னை மிகவும் சிக்கலானது. "சாதனையா? ஓர் உயிரைக் காக்கும் உதவியா?"

இமயத்தின் உச்சியைச் சென்றடைய அவ்வப்போது பல்வேறு உலக நாடுகளிலிருந்தும் மலையேறும் குழுக்கள் புறப்படுவது வழக்கம்தான். அப்படி ஒரு குழுவில் இடம் பெற்றிருந்தவர்தான் காதே ஓ'சௌத். அவருக்கு மலையேறுவது மிகவும் விருப்பமான பொழுதுபோக்கு. இதில் அவருக்கு நிறைய அனுபவமும் உண்டு.

இப்போது அவருக்கு என்ன பிரச்னை?

இமயத்தின் உச்சிக்கு இவர்களின் குழு முன்னேறிக் கொண்டிருந்தபோது, வழியில் ஒரு மனித உடலைப் பார்த்தார். அவர் யார்? ஏன் விழுந்து கிடக்கிறார்? அவருக்கு என்ன உதவி தேவை? என்று அறிந்து, உதவ அவர் மனம் துடிதது. கிட்டே சென்று பார்த்தார்.

அது ஒரு பெண் என்று தெரியவந்தது. உயிர் இருக்கிறதா? என்று பரிசோதித்த போது... ஆம்! உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்! அவருக்கு அருகில் அவருடைய ஆக்சிஜன் முகமூடியும், காலியான ஆக்ஸிஜன் பாட்டிலும் கிடந்தன. தற்காப்பு உடைகள் அத்தனையையும் மீறித் தாக்கும் கடும் குளிர். மைனஸ் முப்பது டிகிரி என்றால் சும்மாவா?

"அந்தப் பெண்ணின் முகத்துக்கு அருகே சென்று கவனித்த போது அவளது உதடுகள், 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று முணகின. இங்கேயே விட்டுவிட்டுப் போய் விடாதீர்கள் என்று திணறித் திணறிப் பேசினாள்" என்கிறார் காதே.

காதேயின் குழுவைச் சேர்ந்த மற்றவர்கள், 'நம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை; வா.. தொடர்ந்து உச்சியை நோக்கி முன்னேறலாம்" என்று அழைத்தனர். ஒரு பெண்... உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். அவரை அப்படியே விட்டுவிட்டு வர மனம் ஒப்பவில்லை' என்றார் காதே.



• காதே

"அவளுடைய குழுவைச் சேர்ந்தவர்களே, அவளைப் புறக்கணித்து விட்டுப் போய் விட்டார்கள். நம்மால் என்ன செய்துவிட முடியும்?" என்று கேட்டார் ஒருவர்.

"சற்றுப் பொறுமையாக இருங்கள். ஓர் உயிரைக் காப்பாற்ற முடிந்தவரை முயற்சி செய்வோம். முதலில் இவரைத் தூக்கி உட்கார வைக்கலாம்."

காதேவின் குழுவைச் சேர்ந்த ஒரு ஆண், கீழே விழுந்து கிடக்கும் பெண்ணின் இடுப்புப் பகுதியில் இரண்டு கைகளையும் விட்டுத் தூக்கி உட்கார வைக்க முயன்றார். கனம் தாங்க முடியவில்லை. இன்னொரு ஆணும் உதவிக்கு வந்தார். இருவருமாய் அந்தப் பெண்மணியைத் தூக்கி உட்கார வைத்துப் பிடித்துக் கொண்டனர்.

காதே அவளையே உற்று நோக்கினார். கண்கள் அசைவற்று குத்திட்டு நின்றன. உதடுகள், "என்னைக் காப்பாற்றுங்கள்" என்று முணுமுணுத்தபடி இருந்தன. இரண்டு ஆண்களும் பிடித்துக் கொண்டு இருந்தவரை



உட்காருகிற நிலையில் இருந்தவர், கைகளை எடுத்த விநாடி, கீழே சரிந்தார்.

காதேவும் மற்றவர்களும் கேள்விக்குறியுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'இந்தப் பெண்மணியை என்ன செய்வது?'- இதுவே அவர்கள் முன் விஸ்வரூபம் எடுத்து நின்ற கேள்வி.

"நம்மிடம் உபரியாய் ஆக்ஸிஜன் ஸ்டாக் கிடையாது. இவரது உடல் மிகவும் கனக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இவரைத் தூக்கிக் கொண்டு போவது சாத்தியமில்லாத ஒன்று. அதுமட்டுமின்றி, நாம் இப்போது உச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். இந்தப் பெண்மணியை இங்கேயே விட்டுவிட்டுச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை"- என்று மற்றவர்கள் சொல்ல, 'உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற ஒரு பெண்ணை அப்படியே விட்டுவிட்டுப் போகிறோமே' என்ற உறுத்தலுடன், உச்சியை நோக்கித் தமது மலையேற்றத்தைத் தொடர்ந்தார் காதே, தம் குழுவினருடன்.

வழிநெடுக பீங்கான் தட்டுகளை உடைத்துப் போட்டாற் போலக் கற்கள். சற்று அஜாக்கிரதையாக இருந்தாலும் சரசர வென்று வழுக்கிக் கொண்டு, அதலபாதாளம் போய்ச் சேர வேண்டியதுதான்! உடம்பில் ஒரு எலும்பு தேறாது. காதேவின் கால்கள், சாதனை படைக்க இமயத்தின் உச்சியை நோக்கி கவனமாக முன்னேறிக் கொண்டிருந்தாலும், மனம் என்னவோ, வழியில் விட்டுவிட்டுவந்த பெண்மணியையே சுற்றிச் சுற்றி வந்தது.

"திரும்பிப் போகிறபோது, எப்படியும் அந்தப் பெண்மணியைக் கீழே கொண்டுபோய், மருத்துவ சிகிச்சை அளித்து, பிழைக்க வைக்க முடியுமா என்று முயற்சி செய்து பார்க்க வேண்டும்" என்ற காதேவின் கருத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

வெற்றிகரமாக இமயத்தின் உச்சியை முத்த மிட்டார்கள் காதேவும், அவரது சகாக்களும். ஆனாலும் காதே மனத்துக்குள் எதையோ இழந்துவிட்ட துக்கம்.

உச்சியிலிருந்து கீழிறங்கத் தொடங்கினார்கள். பரபரப்புடன், அந்தப் பெண்மணி கிடந்த இடத்துக்குச் சென்று பார்த்தனர். அவரது உடல் அங்கேயேதான் இருந்தது. ஆனால் உயிர்தான் இல்லை.

**பின்குறிப்பு:** காதே சந்தித்த பெண்மணியின் பெயர் ஃப்ரான். அவர் ஒரு அமெரிக்கப் பெண்மணி. இமயத்தின் உச்சிக்குச் சென்ற முதல் அமெரிக்கப் பெண்மணி என்ற சிறப்புக்குரியவர். இந்தப் பயணத்தின் போதே அவருடன் வந்த அவரது கணவரும் இறந்து விட்டார் என்று பின்னர் தெரிய வந்தது.

நன்றி: **கார்டியன்**

தமிழில்: **மௌலி**



# லிஃப்ட்

சத்யானந்த் அபார்ட்மெண்ட்ஸின் லிஃப்டுக்குள்தான் நான் மாட்டிக்கொண்டது. எல்லாம் ஒரு ஐந்தாயிரம் ரூபாயின் பொருட்டு. அதை என்னிடம் கடன் வாங்கியவன் அந்த அபார்ட்மெண்ட்ஸின் நான்காவது மாடியில் இருந்தான். அருந்ததியின் குடும்ப வகையில் ஏதோ ஒரு தூரத்து உறவு அவன். இருந்தாலும் கொடுத்த பணத்தை வாங்காமல் விட்டுவிடுவதா என்று அவள் விவாதத்தை முன் வைத்துத்தான் இங்கு வந்ததே.

போகும்போது கீழ்த்தளத்தில் ஓரிருவர் லிஃப்ட் பொத்தானை அமுக்கிவிட்டுக் காத்திருக்க, நான் அதை உதாசீனம் செய்துவிட்டுப் படிவழியாகவே ஏறினேன். ஒவ்வொரு தளத்துக்கும் செல்லும் படிகளின் எண்ணிக்கையைச் சற்றுக் கூடுதலாகவே வைத்திருக்கிறார்களோ என்று தோன்றியது பிறகுதான். லேசாய் மூச்சிரைக்கவும், கால் கடுக்கவும் செய்ய, மூன்றாவது தளம் வருவதற்குள்ளாகவே மூன்று நாளாகிவிட்ட மாதிரி ஒரு ஆயாசம்.

நாலாவதில் அந்த ஆள் வீட்டிலேயே இருந்தான். நான் வருவது தெரிந்திருந்தால் பின் சாளரம் வழியாகக் கயிறு கட்டிக் குதித்தோடியிருப்பான். கதவு திறந்து எதிர்பாராமல் என்னைப் பார்த்ததும் அதிர்வுகளையெல்லாம் அழித்து மறைத்துவிட்டு 'வாங்க' என்றான், ரொம்ப நாள் கழித்து வந்த விருந்தினரை வரவேற்பதைப் போல. நிர்பந்தமாய் தன் முகத்தை ஒளிர விட்டுக்கொண்டான். காசு கொடுத்தவன் கொஞ்சி விட்டுப் போக வர மாட்டான் என்று அவனுக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும் இலங்கை வேந்தன் மாதிரி அவன் கலங்கியதாய்த் தெரியவில்லை.

"கலா, காப்பி கொண்டா..." என்றான்.

ஐயோ! ஒரு காபி குடித்ததற்காக இன்னும் ஒரு மூன்று மாதத்துக்கு என்னுடைய பணத்தைத் திரும்பப் பெற அலைய வேண்டியதிருக்கும்.

"காபியெல்லாம் வேண்டாம். காசுதான் வேணும்." கறாரில் முக்கியெடுத்த தடித்த குரல் என்னிடமிருந்து வெளிப்பட்டது. அப்புறம் கேள்விகள், பதில்கள், சமாதானங்கள், சமாளிப்புகள், பணக் கஷ்டம், மனக் கஷ்டம். 'என் மேல் நம்பிக்கையில்லையா?' என்றான். "மூன்று மாதங்களுக்கு முன் இருந்தது" என்றேன்.

சில மன்றாடல்களுக்குப் பிறகு புதன்கிழமை தருவதாக ஒப்புக்கொண்டான். புதன்கிழமை பணம் வராவிட்டால் நான் உன் வீட்டிலேயே வந்து குடியிருக்க நேரிடும் என்று மிரட்டிவிட்டு எழுந்தேன்.

எந்த புதன்கிழமை என்று கேட்காமல் விட்டு விட்டோமே என்று திரும்பும்போது தோன்றியது. அவனுடன் விவாதித்ததில் மிகக் களைப்பாகிவிட்டது. மிக நீண்டு இறங்கும் படிகளை நினைத்ததும் மேலும் களைப்பாகிவிட்டது.

காரிடார் காலியாய் இருந்தது. படிகளைப் புறக்கணிக்க முடிவு செய்து பொத்தானை அமுக்கினேன். ஒரு மகா முனகலுடன் லிஃப்ட் மேலேறி வந்து வாய் பிளந்து நின்றது.

நான் அதனுள் நுழையும்போது எதேச்சையாய் மணி பார்த்தேன். 8.59 P.M. உள்ளே வரிசையாய் இருந்த பொத்தான்களில் எழுத்துக்கள் அழிந்திருந்தன. நான் ஒருவிதமாய் அனுமானித்து 'G' யை அமுக்கினேன். மறுபடி கதவுகள் சாத்திக் கொள்ள ஒரு பிரபஞ்சப் பயணம் மாதிரி 'ம்ம்ம்' என்று அது கீழிறங்கியது. கீழிறங்குகிறதா அல்லது மேலே ஏறுகிறதா என்று ஒருகணம் குழப்பமாயிருந்தது. மேலே மின்னணுத் திரையில் 3 என்று எழுத்து தெரிகிறது. அப்படியெனில் இறங்குமுகம்தான். கவனித்துக் கொண்டிருக்கும்போதே அது 2 ஆக மாற, எதிர்பாராத ஒரு கணத்தில் ஒரு குலுங்கலுடன் லிஃப்ட் நின்றது.



சித்ரன்

தலைக்கு மேலே குண்டு பல்ப் சட்டென்று அணைய, திமர் இருள். திரை மறைந்திருந்தது. மின்விசிறி வேகம் குறைந்து நிற்கப் போவதைக் கடக் கடக் என்று சப்தம் உணர்த்தியது. இது என்ன? மின் தடையா? மின் வெட்டா? நான் எந்தத் தளத்திலிருக்கிறேன்? இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? ஏதேனும் நிகழக் காத்திருப்பதா? உதவிக்கு யாரையாவது விளிப்பதா?

லிஃப்ட் அமைதி காத்தது. ஆட்டமில்லை. அசைவில்லை. பிரபஞ்சப் பேரமைதி. எதிர்பாராத இந்த நிகழ்வில் நான் உடல் பரபரத்து, நின்றிருப்பதை சலனங்களற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது அது. தன் இந்தச் செய்கைக்கு எந்த விளக்கமும் தர அது தயாரில்லாமலிருந்தது.

இறந்தவர்க்கஞ்சலி செய்பவன் மாதிரி ஒரு நிமிடம் மௌன அனுஷ்டிப்பில் நின்றேன். பதற்றப்படாமல் யோசிக்கலாம். இதிலிருந்து வெளியேறுவதற்கான சாத்தியக்கூறுகள் என்னென்ன? அந்தரத்தில் மாட்டிக்கொண்டு விட்டேன் என்று இத்தனை நேரத்தில் நன்றாகப் புரிந்து விட்ட பிறகு வெறுமனே கால் மாற்றி நின்றுகொண்டிருப்பதில் என்ன பயன்? இந்த லிஃப்ட் மறுபடி இதோ இப்போது தரையிறங்கிவிடும் என்ற என் எதிர்பார்ப்பிற்கு நான் நிர்ணயித்திருந்த கால அளவு தீர்ந்து போனபின் இனி நான்தான் எதையாவது முயற்சிக்க வேண்டும் என்று உணர்வு மீண்டது.

கையைத் திருப்பி கடிகாரத்தை உற்றுப் பார்த்தேன். ரேடியம் தொட்ட முட்களின் உபயம். 9.07. கிட்டத்தட்ட எட்டு நிமிடங்கள் ஆகிவிட்டது, நான் இதற்குள் அகப்பட்டுக்கொண்டு.

தடதடவென்று கதவைத் தட்டினேன். 'ஹலோ...ஓ...ஓ...'' என்று மூன்று நான்கு முறை கூவினேன். யாருக்காவது கேட்குமா என்று சந்தேகமாகத்தான் இருந்தது. அதுவும் என் அபயக்குரல்

எட்ட வேண்டிய திசை பற்றித் தீர் மானமில்லாமல் இருந்தது. மீண்டும் மீண்டும் கூப்பிட்டுக்கொண்டேயிருந்தேன்.

நதிமூலம் மாதிரி நெற்றியிலிருந்து வேர்வை கசியத் தொடங்கியது. குப்பென்று அறைக்குள் வெப்பம் தாக்கியது. புகை பிடிக் கலாமா என்று யோசித்தேன். காற்று வரவும் போகவும் வழியில்லாத இதற்குள் அது உசிதமல்ல. மேலும் 'புகை பிடிக்காதீர்கள்' அறிவிப்பை லிஃப்டுக்குள் பார்த்தாகவும் ஞாபகம். அ! என்னிடம் தீப்பெட்டி இருக் கிறது. பாக்கெட்டிலிருந்து அதை எடுத்தேன். ஒரு குச்சி உரசி எழுந்த கந்தக நெடி மூக்கில் நுழைந்து சுவாசத் திணறலை ஏற்படுத்தியது. ஆடி அசைந்த வெளிச்சத்தில் எதற்கும் இருக் கட்டும் என்று எல்லாப் பொத்தான்களையும் ஒருமுறை தட்டிப் பார்த்தேன். உலகம் ஸ்தம்பித்து நின்றிருந்தது. தீக்குச்சி அணைந்து இருள் அவசரமாக அந்த அறை தனது என் பதுபோல் மறுபடியும் நிறைத்துக் கொண் டது.

மின்சாரம் போயிருந்தால் என்ன? ஜெனரேட்டர் இருக்க வேண்டுமே? அது ஏன் இன்னும் இயக்கப்படவில்லை? மறுபடி கதவை 'தட்தட்' என்று தட்டினேன். இந்த முறை பதிலுக்கு ஈனமான குரலொன்று கேட்டது. ஒரு குரல். இரு குரல். பல குரல்கள். நன்றி! நான் இந்தப் பொறிக்குள் ஒரு எலியைப் போல மாட்டிக் கொண்டிருப்பதை சக மனிதர்கள் எப்படியோ அறிந்துகொண்டு விட்டார்கள் என்று உறுதிப்பட்டு விட்டது. நான் நிச்சயம் காப்பாற்றப்பட்டு விடு வேன்.

பொங்கும் வியர்வையைத் துடைத்து ஈரமாகிவிட்டது கர்சீப். அப்படி இப்படியாக ஒரு அரை மணி நேரம் ஓடிவிட்டது. என்ன ஆயிற்று இதற்கு? முழுசாய் இரையை விழுங்கிக்கொண்டு கிடக்கிற மலைப்பாம்பு மாதிரி அசையாமல் கிடக்கிறது. அதன் வயிற் றுக்குள் பாதி இறந்த நான். துருவப் பிரதேசப் பனிபோல என் இயக்கங்கள் உறைய ஆரம் பித்திருந்தன.

எப்படியாவது இதிலிருந்து விடுபடும்வரை ஹென்றி ஷாரியர் மாதிரி இதற்குள் நடந்து கொண்டிருக்கலாம் என்று தோன்றியது. வெறும் ஆறுக்கு நாலு அடி அளவில் இருக் கிற இந்தப் பெட்டிக்குள் இரண்டு எட்டு வைக்கக் கூட இடமில்லை. பிறகு அதை எப்படி நடத்தல் என்று சொல்ல முடியும்? ஆகவே, நான் நகர்ந்தேன். ஒரு நான்கு முறை இப்படியும் அப்படியுமாக. பட்டாம்பூச்சி நாவலில் தனிமைச் சிறையில் அடைக் கப்பட்ட ஹென்றி ஷாரியர் இப்போது ஞாபகத்துக்கு வந்ததும் தவிர்க்க இயலாத எண்ணமாயிருந்தது. இரு வருடங்கள் ஒரு சிறு அறையில் எப்படித் தனித்துக் கழித்தான் என்று ஆச்சரியம் விரிந்து நின்றது. ஒரு நாள் இதற்குள் நான் இருந்தாலே மனச்சிதைவு அடைந்து விடுவேன் என்று தோன்றியது.

எதற்காக இந்த நேரம் பார்த்து இந்த இடத்துக்கு வந்தேன்...? கடன்காரனின் பொருட்டு. சிரமம் பார்க்காமல் வரும்போது படி வழியாகவே இறங்கியிருக்கலாம். இதற் குள் ஏறித் தொலைய நேரிட்டது எதனால்? கடந்து கொண்டிருக்கிற நேரம் கெட்டியாய் பிடித்து வைத்திருக்கிற நம்பிக்கையின் பிடியைத் தளர்த்திக் கொண்டிருந்தது. இன்று நான் கீழிறங்கி வீடு போய்ச் சேர்வேன் என்று தோன்றவில்லை. இத்தனை நேரமாகியும் காணோமே என்று அருந்ததி குழந்தையை மடியில் இருத்திக் கொண்டு வாசற்படி யிலேயே கலவரமாய் காத்துக் கொண்டிருப் பாள். கம்பெனிக்கும் ரமேஷுக்கும் போன் செய்து கேட்டிருப்பாள். 'இங்க வரலையே' அல்லது 'அவர் அப்பவே கிளம்பிட்டாரே' என்ற பதில்களில் அவள் பதற்றம் மேலும் கூடியிருக்கும்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேலான என் வாழ்நாளின் உன்னதப் பொழுதை இந்த லிஃப்ட் களவாடிவிட்டது அநியாயமாகப்பட்டது. இந்த நேரத்தை எப் படி நான் வாழ்ந்ததாய்க் கணக்கில் எடுத்துக் கொள்வது? இவ்வுலகின் கவனங்களிலிருந்து நான் தொலைந்து போய் விட்டேனா? ஒரு

---

**ஒரே கையில் எத்தனை தேங்காய்களைப் பிடித்துக் கொள்ள முடியும் உங்களால்? இங்கே இவர் நாலு தேங்காய்களைக் கையில் வைத்துக் கொண் டிருக்கிறார். அட! இவரது கை என்ன ராட்சஸக் கையா? இல்லை.**



**இவரது கையில் இருக்கிற தேங்காய்கள் மினி சைஸ்! இது காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட தேங்காய் வெரைட்டியாம்! எடை வெறும் பத்து கிராம்!**

**ஆதாரம்: டெக்கான் ஹெரால்டு**

தொல்பொருள் ஆராய்ச்சியாளனின் சிரத்தையோடு என்னை யாராவது கண்டெடுப்பார்களா?

மனத்திலும் உடலிலும் ஒரு போர்வையாகக் கவிந்துகொண்டது சோர்வு. ஏதேதோ எண்ணங்கள் கோர்வையற்றுத் தோன்றி மறைந்தன. நேரமாக ஆக கவலையின் கனம் அதிகரித்துக் கொண்டே போனது. சுற்றிலும் கேட்கும் சிறுசிறு சப்தங்களைக் காது உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது. நிறைய சலசலப்பு கேட்டது. அதல பாதளங்களைத் தாண்டி மனிதர்கள் நடமாடுகிற வெளியில் என் குரல் கேட்டுவிட்டது என்றே நினைக்கிறேன். ஒரு போர்க்கால நடவடிக்கை மாதிரி என்னை உயிருடன் மீட்டெடுக்க ஆயத்தங்கள் நிச்சயம் நடைபெற்றுக் கொண்டிருக்கத்தான் வேண்டும்.

நாளை மறுநாள் ஐஸ்வர்யாவுக்கு ஸ்கூல் அட்மிஷன். எலெக்ட்ரிசிடி பில் இன்னும் கட்டவில்லை. சீனுவுக்கு கலயாண ரிசப்ஷன் 27ஆம் தேதி மாலை. சொத்தைப் பல் பிடுங்க டாக்டர் ராஜ்குமார் அடுத்த வாரம் வரச் சொல்லியிருக்கிறார். நாலாவது மாடி கடனாளியிடமிருந்து ஐந்தாயிரம் வரப் பெற வேண்டும்.

இதற்கெல்லாம் முன்பாக நான் இந்த கனசெவ்வகத்துக்குள் மடிந்து போய் விடுவேனா என்ன?

**த**டக்கென்ற சப்தத்துடன் லிஃப்ட் குலுங்கியது. அதிர்ந்து கண் திறந்தேன். தலைமேல் குண்டு பல்ப் எரிய, மின் விசிறி சுழன்று குளிர்காற்று இறங்கியது. சுதாரித்து எழ ஒரு கணமேனும் தராமல் வயிற்றில் ஒரு சுழற்சியை ஏற்படுத்திவிட்டு ஜிவ்வென்று கீழிறங்கியது லிஃப்ட். மறுபடி ஒளிர்ந்த மின்னணுத் திரையில் இறங்குமுகமாக எண்கள் மாறியது. தரைத்தளம் வந்து லிஃப்ட் நின்று...

''அவ்வளவுதான் வெளியே போ' என்கிற மாதிரி கதவுகள் அகலத் திறந்தன. சட்டை, பனியனுடன் வியர்வையில் உடலோடு ஒட்டியிருந்தது. காதோரம் ஒரு துளி வழிந்து தரை தட்டியது. குளுமைக் காற்று முகம் தாக்கியது.

வெளியே நிறைய தலைகள் தென்பட்டன. 'நல்வரவு' என்றான் எவனோ சிரித்தபடி. மத்திய சிறையிலிருந்து விடுதலையானவன் போல் லிஃப்ட்டுக்குள்ளிருந்து வெளிவரும் என்னை அயல் கிரகவாசியைப் பார்ப்பது போல் பார்த்து, ஒரு அயல்நாட்டுத் தூதுவருக்கான வரவேற்பைக் கொடுத்தார்கள். மணி பார்த்தேன். 11.06 பிரமை பிடித்த மாதிரி இருந்தது. நான் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதை சுற்றியிருப்பவர்கள் எனக்கு அறிவித்தபடி இருந்தார்கள்.

முழுசாய் நூற்றி இருபத்தேழு நிமிடங்கள். இதோ நான் காப்பாற்றப்பட்டு விட்டேன். மின்சாரம் போகவில்லையாம். 'லிஃப்டின் இயக்கக் கோளாறு' என்று யாரோ சொன்னார்கள்.

யார் யாரோ என்னென்னமோ பேசினார்கள். அந்தக் கூட்டத்தில் கடனாளியின் முகமும் தெரிந்தது. என்னைப் பார்த்ததும் எல்லோரையும் விலக்கி முன் வந்தான்.

**இளவரசி டயானா 1996 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தபோது அங்கிருந்த புற்றுநோய் மருத்துவமனைக்குச் (இம்ரான்கான் கட்டியது) சென்றிருந்தபோது எடுத்த புகைப்படம் இது. அஷ்ரப் காதிர் என்ற புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இளம் சிறுவனை அணைத்து ஆறுதல் கூறியபோது க்ளிக்கான இந்தப் புகைப்படம் டயானாவுக்கு மிக மிகப் பிடித்ததென்று அவரே கூறியிருக்கிறார். இப்போது இந்தப் புகைப்படம் மீண்டும் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் இடம் பெற்றிருக்கிறது. காரணம் இந்தச் சிறுவன் சமீபத்தில் இறந்துவிட்டதுதான்.**



**– குல்ஹா**

''நானும் கொஞ்சம் கீழே போய்ட்டு வரலாம்னு லிஃப்ட்டுக்கு வந்தேன் சார். லிஃப்ட் மேல வரலை. அப்றம் லேசா சந்தேகம் வந்துச்சு. எங்கேயோ மாட்டிக்கிச்சுன்னு - இதுக்கு முன்னாடி ஒரு தடவை ஆயிருக்கு இது மாதிரி. ஆனா இப்ப மாட்டிக்கிட்டது நீங்கதான்னு தெரியலை. எப்படியோ கஷ்டப்பட்டு எறக்கிட்டோம். மணி பதினொண்ணே கால் ஆயிடுச்சு. நான் வேணா வீட்ல ட்ராப் பண்ணட்டுங்களா?'' என்றான்.

''இல்ல. வேண்டாங்க. நான் ஆட்டோ புடிச்சுப் போய்க்கறேன். எல்லோருக்கும் ரொம்ப நன்றி...''

நான் விடுவிடுவென்று கொலாப்ஸிபிள் கேட்டைக் கடந்து வெளியே வந்தேன். எனக்கென்னமோ அவன் புதன்கிழமை பணத்தைத் திருப்பித் தருவான் என்று தோன்றவில்லை. ○




சூழலின் சோகம் பாக்டீரியாவை விட வேகமாகப் பெருகிக் கொண்டிருந்தது.

"என்னம்மா ஆச்சு சத்யாவுக்கு? உங்க கூடத்தானே கிளம்பினாங்க. ஏதாவது விபத்திலே..?" ராஜ்குமார் பதற்றத்துடன் அந்தப் பச்சைப் புடைவைக்காரியைக் கேட்டார்.

"அதெல்லாம் இல்லே சார். புயலிலே சிக்கிக்கிட்டவங்களுக்கு வேண்டிய உதவியை செய்துட்டு, நாங்க எல்லோரும் ஒரே நேரத்திலேதான் கிளம்பினோம். ஆனால் சத்யா மேடம் மட்டும் ஹைதராபாத்துக்குப் போயிட்டு வர்றதா சொன்னாங்க"

"எதுக்கு அங்கே போனாங்க? அவங்களுக்கு யாரும் அங்கே உறவோ நண்பர்களோ கிடையாதே?"

மஞ்சள் சேலை அணிந்த பெண்மணியிடம் இதற்கான பதில் இருந்தது.

"புயலிலே ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் தண்டவாளத்திலேயிருந்து இறங்கிடுச்சு இல்லையா? அதிலே பலமா அடிபட்ட ஒருத்தரை மருத்துவமனையிலே சத்யா மேடம்தான் கவனிச்சுக்கிட்டாங்க. ஏதோ ஒரு பார்சலை சத்யா மேடம் கொடுத்துட்டு 'இங்கே இருக்குற எல்லாரையும்விட உங்களை நான் நம்பறேன். எனக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா இந்தப் பார்ஸலின் மேலே குறிப்பிட்டிருக்கிற என் நண்பரிடம், இதை நீங்களே பர்ஸனலாக சேர்த்துட முடியுமா? ப்ளீஸ்'னு கெஞ்சினார்.

"இடுப்புக்குக் கீழே அவருக்கு பலத்த அடிபட்டிருந்தது. அவர் உயிர் பிழைப்பது கஷ்டம்னு டாக்டர்கள் சொல்லியிருந்தாங்க. ஒரு மனிதாபிமான அடிப்படையிலே அதை வாங்கிக்கிட்டாங்க சத்யா. அடுத்த நான்கு மணி நேரத்திலே அவர் இறந்துவிட, கொடுத்த வாக்கைக் காப்பாத்தணுமேன்னு சத்யா மேடம் விசாகபட்டினத்திலேயிருந்து நேரே ஹைதராபாதுக்குப் போயிட்டாங்க. அங்கேயிருந்து ரெண்டு மூணு நாளிலே இங்கே வர்றேன்னு சொன்னாங்க."

ராஜ்குமார் சுவாதிக்கு உற்சாகத்தை ஊட்ட முயன்றார்.

"அப்புறம் என்ன, எப்படியும் இன்னும் ஐந்து நாட்களுக்குள்ளே உங்கம்மா வந்துடப்போறா.. சியர் அப்"

ஐந்து நாட்கள் ஒரு பெரிய விஷயமில்லை என்றாலும் அந்த நொடியே அம்மாவைப் பார்த்துவிடுவோம் என்ற நம்பிக்கை அந்த அளவு தள்ளிப்போன ஏமாற்றத்தை அவளால் முழுவதுமாக ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

"அப்புறம் இன்னொரு விஷயம் சுவாதி. உனக்கு ஒரு சின்னக் கணக்கு. ஒரு மாசத்துக்கு சுமார் நானூறு ரூபான்னு சேமிச்சா பதினெட்டு வருடங்களிலே எவ்வளவு தொகை வரும்?"

கணக்குப் போடும் மூடில் அவளில்லை. அவள் மௌனத்தைப் புரிந்துகொண்ட ராஜ்குமார் விஷயத்தை உடைத்

அருண் சரண்யா

தார். "நான்தான் உங்கம் மாவுக்கு அந்த யோசனை யைக் கொடுத்தேன். 'என் றைக்காவது அந்த சந்துரு உன் மகளைக் கைவிட்டு விட்டாலோ, அல்லது திடீ ரென்று மண்டையைப் போட்டு விட்டாலோ அவளுக்கு ஒரு பொருளா தார பலம் வேண்டாமா? அதனாலே, கிடைக்கும் சம்பளத்திலே மாசம் நானூறு ரூபாயை உன்னுது இல்லேன்னு நினைச்சுக் கிட்டு ஒரு ரெகரிங் டெபாஸிட்டைத் துவங்கு' என்று சொன்னேன். சத்யாவும் ஒத்துக்கிட்டா. அதிலே சேர்ந்த தொகை கிட்டத்தட்ட நாலு லட்சம் இருக்கும். அது உன் பைலட் பயிற்சிக்குப் போதுமில்லே?"

**வீ**ட்டில் போரடித்தது. 'நாமே அந்த ஃப்ளையிங் க்ளப்புக்குப் போய்ப் பார்த் தால்தான் என்ன?'

ரயில் ஏறினாள். வந்து சேர்ந்தாள்.

லௌன்ச்சில் நாலைந்துபேர் உட்கார்ந்திருந் தார்கள். க்ளப்பின் முக்கிய ஊழியர்கள் என்று தான் தோன்றியது. எல்லாருமே நடுத்தர வயதைத் தாண்டியவர்கள். சுவாதி திரும்பிப் பார்த்தாள். "சார்" என்றாள் அங்கிருந்த ஒருவரிடம் மெதுவாக.

"என்ன வேணும்?" என்றார் அவர், கனிவு கண்டிப்பு ஆகிய இரண்டும் இல்லாத ஒரு மொண்ணையான குரலில்.

"நான் விமானம் ஓட்டக் கத்துக்கணும்"

இப்போது அவர்கள் அத்தனை பேர் பார்வையிலும் ஒருவித சுவாரஸ்யம் தெரிந்தது. "என்ன சொன்னே?" என்றார் ஒருவர்.

"எனக்கு பைலட்



**பின்லேடன் வீரப்பன் ஆன கதை!**

ஆப்கனில் மறைந்து வாழும் தீவிரவாதத் தலைவன் ஒசாமா பின்லேடனின் உடல்நிலை மிக மோசமாக இருப்பதாகவும், அவனது இரண்டு சிறுநீரகங்களும் மிகவும் பழுதடைந்து இருப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால்,



ஆகணும்னு ஆசை''

''ஆசை எல்லாருக்கும்தான் இருக்கு. இப்போ எனக்குக்கூட நிறைய ஆசைகள் உண்டு. என் மீசையில் உள்ள நரை முடி எல்லாம் இயற்கையாகவே கருமையாகணும். என்னைப் பார்த்தவுடனேயே உன்னைப் போன்ற இளம் பெண்கள் சொக்கிப் போய் என் காலடியிலே விழணும். எனக்கு வயது ஐம்பதுன்றதை ஒருத்தரும் கண்டுபிடிக்கக்கூடாது. இப்பிடி எனக்கும் தான் நிறைய ஆசைகள்... ஆசை வேறு, கொடுப்பினை வேறு''

சுவாதியின் நாக்கு நுனியில் கேள்விகள் துடித்தன. கடமை தவறிப்போய் இதென்ன ஒழுங்கீனப் பேச்சு? விமானம் ஓட்டும் ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிப்பதுதானே உங்களைப் போன்றவர்களின் வேலை?

ஆனால் கொஞ்சம் யோசித்தாள். 'நம் பின்னணி வேறு. இவர்களின் பின்னணி வேறு. இப்படியெல்லாம் பேசுவது இவர்கள் வட்டத்தில் அசிங்கம் இல்லை. வெறும் நகைச்சுவைதான். ரோமாபுரியில் இருக்கும்போது ஒரு ரோமானியனைப் போலவே நடந்து கொள்வதுதான் உசிதம்.'

"சுமான் சார், உங்க வயது நிச்சயம் நாற்பதைத் தாண்டியிருக்க முடியாது. தவிர இந்த வெள்ளை மீசையேகூட உங்களுக்கு ஒரு கம்பீரத்தைத் தருதே. மீதி பேர் இருக்கட்டும், உங்களை மாதிரி ஒரு காட்ஃபாதர் எனக்குக் கிடைத்தால் அது என் பாக்கியம்''

பேசியவர் வாயடைத்துப் போய் இவளை ரசனையுடன் பார்க்கத் தொடங்க, இன்னொருவர் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். "ஃப்ளையிங் பற்றி உனக்கு என்ன தெரியும்?''

''அதையெல்லாம்தான் நீங்க வகுப்புகளிலே கற்றுக் கொடுக்கப் போறீங்களே?''

''நான் அதைச் சொல்லலே, இதில் சேருவதற்கான தகுதிகள் தெரியுமா?''

"சார், ப்ளஸ் டூவிலே என் சப்ஜெக்ட் சயன்ஸ்தான். தவிர நான் மேஜர். வயதுத் தகுதியும் இருக்கிறது''

"மேஜராயிட்டியா? அப்படின்னா நீ ஏதாவது ராஜகுமாரனைக் கல்யாணம் செய்துகிட்டு புஷ்பக விமானத்திலே பறக்க வேண்டியதுதானே. அதுதானே சுலபமான ரூட்" என்றபடி ஒரு விண்ணப்பத்தையும், கோர்ஸின் விவரங்கள் அடங்கிய சிறு புத்தகம் ஒன்றையும் கொடுத்தார். அதற்கான தொகையையும் குறிப்பிட்டார்.

அவள் கொடுத்த தொகையை வாங்கி அங்கிருந்த பெட்டியில் வைத்துப் பூட்டினார். "இதோ பாரம்மா, ஒரு மணி நேரம் பறப்பதற்கான பயிற்சி எடுத்துக் கொள்ள சுமார் ஆயிரத்தி ஐநூறு ரூபாய் ஆகும் தெரியுமா?" என்றபடியே விண்ணப்பத்தாளை நீட்டினார்.

"நியாயமான எந்தத் தொகையையும் செலுத்தத் தயாராகவே நான் வந்திருக்கிறேன்''

''அதில்லே, நீ காரிலோ, ஏன் ஆட்டோவிலோ கூட வராமல் நடந்து வந்திருக்கேன்றதை நான் கவனிச்சேன்."

"அதனால் என்ன சார். இது ரெண்டிலே ஏதாவது ஒரு வாகனத்திலே வந்து இறங்கினாத்தான் இந்தக் க்ளப்பிலே சேர முடியும்னு ஏதாவது விதி இருக்கா?"

"ஓ.கே. அதைவிடு. உனக்கு கார் ஓட்டத் தெரியுமா?''

"தெரியாது''

"ஸ்கூட்டர் அல்லது மோட்டாராவது ஓட்டுவாயா?''

"இல்லை''

பின்லேடனின் நடவடிக்கைகள் பெருமளவு குறைந்து விட்டன என்றும், அவன் மரணம் வெகு சீக்கிரம் நிகழும் என்றும் அமெரிக்கா உட்பட பன்னாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் பின்லேடன் உடலுக்கு ஒன்றுமில்லை; நலமுடன் இருக்கிறார். தன் உடல்நலம் குறித்துத் தானே வதந்தியைப் பரப்பி, அமெரிக்கா போன்ற நாடுகளை, தப்புக் கணக்கு போட வைக்கிறார்' என்றும் எதிர்தரப்பு செய்திகள் வர ஆரம்பித்திருக்கின்றன. இது இங்கேயே, எப்போதோ கேட்ட கதை மாதிரி இல்லை?

– எம்.

''சின்ன வயசிலே மூணு சக்கர வண்டியாவது ஓட்டியிருக்கியா?''

''......''

''அதுவுமில்லையா? ஆனா விமானம் ஓட்ட வந்துட்டே இல்லையா?''

இதைத் தொடர்ந்து நால்வரும் ஓவென்று சிரிக்க, சுவாதி தான் சிறுமைப் பட்டுப் போனதாக உணர்ந்தாள்.

தலைவலி நிமிடத்திற்கு நிமிடம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அவமானங் கள் தகித்தன. கடகடவென நாலைந்து தம்ளர் தண்ணீர் குடித்தாள். தாகமும், நெருப்பும் அடங்கியதாகத் தெரியவில்லை. மீண்டும் ஒரு தம்ளரை நிரப்பியபோது வாசலில் கதவைத் தட்டும் ஓசை.

''மேடம் எப்பிடியிருக்கிங்க?'' என்றபடி உள்ளே நுழைந்த அந்தப் பெண்மணி சுவாதியைப் பார்த்ததும் திகைத்து நின்றாள்.

''மிஸஸ் சத்யா இல்லையா?'' என்று குழப்பமாய்க் கேட்டாள்.

''வாங்க. நான் சுவாதி. மிஸஸ் சத் யாவின் மகள்தான்'' என்று அவள் கூறிய வுடன் அவள் முகத்தில் மேலும் குழப்ப ரேகைகள்.

''நான் இந்த தெருக்கோடியில் வசிக் கிறேன். மனசு நிம்மதியில்லாம இருக்கு துன்னு கொஞ்ச நாட்களுக்கு முன்னே உங்கம்மாகிட்டே சொன்னப்போ, இந்தப் புத்தகத்தைக் கொடுத்து படிக்கச் சொன் னாங்க. நடுவிலே ஒரு இருபது நாள் பெங் களூர் போக வேண்டியிருந்தது. இதையும் கையோட எடுத்துக்கிட்டுப் போயிட்டேன். நேற்றுதான் வந்தேன். இப்போ இதை திருப்பிக் கொடுக்கலாமேன்னு...''

''அம்மா ஆந்திராவுக்குப் போயிருக் காங்க. புத்தகத்தைக் கொடுங்க'' என்று சுவாதி கூறியபோதும்கூட வந்தவள் கொஞ்சம் சந்தேகமாகப் பார்த்தபடிதான் அந்தப் புத்தகத்தை கொடுத்துவிட்டுப் போனாள். சோர்வுடன் அதை நாற்காலி யின் நுனியில் வைக்க, அது கீழே விழுந் தது. பிரிந்தவாக்கில். எடுத்தாள். 'மனம் நோக மற்றவர் பேசும்போது அதை எப்படி எடுத்துக் கொள்வது?' என்றது தலைப்பு.

ஆர்வம் தோன்ற, அந்தப் பக்கங்களைப் படித்தாள். டேல் கார்னகியின் புத்தகம். ''உங்களை கேலி செய்பவர்களின் நோக்கம் என்ன? உங்களை வருத்தப்பட வைப்பது, புண்படச் செய்வது. அப்படியிருக்க சோகத்தில் மூழ்குவதன் மூலமும், நெஞ்சு ரணமாக அனுமதிப்பதன் மூலமும், உங்கள் எதிரிகளின் நோக்கத்தை நீங்களே நிறைவேற்றி வைக்கிறீர்கள் என்று அர்த் தம். இப்படிச் செய்யலாமா?'' என்று தொடங்கிப் பலவித நடைமுறை யோச னைகளை முன் வைத்திருந்தது.

படித்து முடித்தபோது மனதில் ஒரு தெளிவு கிடைத்திருந்தது. கூடவே நன்றிப் பெருக்கு நெஞ்சில் பந்தாய் எழும்பித் தொண்டையை முட்டிக் கண்ணீரை வரவழைத்தது. அம்மா, கண்ணில் படாம லேயே நீ எப்படியெல்லாமோ எனக்கு உதவிக் கொண்டிருக்கிறாய். நேரிலேயே வந்தால் எவ்வளவு பக்கத்துணையாக இருப்பாய்.

இடையில் ராஜ்குமார் ஒருமுறை வீட்டுக்கு வந்திருந்தார். ''பணம் ஏதாவது தேவையா? தயங்காதே. உங்கம்மா பணம் தான்'' என்றார். தன்னிடமே பணம் இருக் கையில் அதைப் பெற்றுக் கொள்வது அனாவசியம் என்று பட்டது சுவாதிக்கு. அதே சமயம், கையிருப்பு கிட்டத்தட்ட எதுவுமில்லை என்ற நிலை வந்துவிட்ட தால் வங்கியிலிருந்து கொஞ்சம் பணத்தை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானித் தாள்.

(தொடர்ந்து பறக்கும்)

## வி.ஐ.பி விருப்பம் — பி.ஹெச்.பாண்டியன்

# கருகிப்போன பாரிஸ்டர் கனவு!



"என் சொந்தக் கிராமமான கரிசல்பட்டில் ஏழாவது வரை படிக்கும்போதும் சரி; பின்னர் பாளையங்கோட்டையில் எஸ்.எஸ்.எல்.சி வரைப் படித்த போதும் சரி - வழக்கறிஞராக வேண்டும் என்பதே என் லட்சியமாக இருந்தது. கறுப்புக் கோட்டின் மீது அப்படியொரு காதல். அப்புறம் சென்னை பச்சையப்பாவில் பட்டப்படிப்பு படிக்கும்போதுதான், வழக்கறிஞர்களிடையே லண்டனில் சென்று Bar-at-law என்கிற பாரிஸ்டர் படிப்பு முடித்தவர்களுக்கு உயர்ந்த பட்ச கௌரவம் உண்டு என்பது தெரிய வந்தது. கிராமப் பின்னணியிலிருந்த வந்த எனது பெரிய பலவீனம் ஆங்கிலம்தான்.

மத்திய அரசின் சிவில் சர்வீஸ், தமிழ்நாடு அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளெல்லாம் எழுதினேன். சட்டத்தின் மொழி ஆங்கிலமாதலால், அப்போதெல்லாம் உயர்நீதிமன்றங்களில் ஆங்கிலம் கொடி கட்டிப் பறந்துகொண்டிருந்தது. நூஜெண்ட் கிராண்ட், மாக், எர்லி நார்ட்டன், கோவிந்த் ஸ்வாமிநாதன் போன்றோர்களை ரோல் மாடல்களாக எடுத்துக் கொண்டேன். இதற்கிடையில் வீட்டில், 'முதலில் நீ பி.எல் பட்டம் வாங்கி விடு; பின்னர் பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லி விட்டார்கள். சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்துவிட்டேன். அங்கே கிரிமினல் மற்றும் சர்வதேச சட்டங்களைச் சொல்லிக் கொடுத்த ஸ்ரீநிவாசலுவும், சர்மாவும் பாரிஸ்டர்கள். அவர்கள் டிரெஸ் செய்து கொண்டு வருகிற அழகும், ஆங்கில மொழியைக் கையாள்கிற திறமையும் பாரிஸ்டர் ஆர்வத்தை இன்னமும் வளர்த்து விட்டன. பாரிஸ்டர் படித்த வழக்கறிஞர்கள் வழக்குகளை மிகவும் வடிகட்டித்தான் எடுத்துக் கொள்வார்கள். நீதிபதிகளும் அவர்களுடைய வாதங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில்தான் சென்னையில் பாரிஸ்டர்கள் இருந்தார்கள்.

பி.எல் முடித்தவுடன் தொடர்ந்து சென்னையில் இருக்க வேண்டிய கட்டாயம் இருந்ததால் என் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. என் பாரிஸ்டர் கனவு கருகிப் போனதற்குக் காரணம், எனக்குச் சரியான வழிகாட்டுதல் துவக்கத்திலேயே இல்லாமல் போனதுதான். எஸ்.எஸ்.எல்.சி முடித்தவுடன், லண்டனுக்குச் சென்று பட்டப் படிப்பை முடித்து விட்டு, அப்படியே பாரிஸ்டருக்கும் படித்திருக்க வேண்டும். லண்டனில் வேலை செய்து கொண்டேயும் படிக்கலாம். பி.எல் முடித்த பிறகு எம்.ஏ; (கிரிமினல் சட்டம், தடய அறிவியல்), எம்.எல், சட்டத் துறையில் ஆராய்ச்சி என்று படிப்பைத் தொடர்ந்துப் பின்னர் தொழிலிலும் பல கொலை வழக்குகளில் ஆஜராகி வெற்றிகரமாகத் திகழ்ந்தாலும் பாரிஸ்டர் ஆக முடியவில்லையே என்ற ஏக்கம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது!"

— ரமா

படம்: ராஜன்

**கூ**ல் ட்ரிங்க்ஸ் கொதிக்க ஆரம்பித்து விட்டன. புரியவில்லையா? 'பெப்ஸி'யின் லேட்டஸ்ட் விளம்பரத்தைப் பார்க்க வில்லையா?

ஷாருக்கிடம், 'பௌலிங்' விளையாட்டில் தோற்று விட்டு, ஒரு பெண் 'தண்டனை'யாக ஹ்ருத்திக் ரோஷனை முத்தமிடப் போகிறாள். ஏ ஆயே ஆ-ஓ.' ஸ்டைலில் ஹ்ருத்திக் ஆடிக்கொண்டிருக்க, ஷாருக் அவரை நோக்கி 'ஸ்மைல் ப்ளீஸ்' என்பார். ஹ்ருத்திக் பல்லைக் காட்ட, அதில் braces (பல் வெளியே வராமல் இருக்கப் போட்டுக் கொள்ளும் க்ளிப்) தெரியும். உடனே அந்தப் பெண் பின்வாங்கி



• ராகேஷ் ரோஷன்

• ஹ்ருத்திக் ரோஷன்

# கஹோ நா 'வார்'ஹை!


விடுவார். கடைசியில் ஷாருக்கானையே பரிதாபப்பட்டு முத்தமிடுவது க்ளைக்கதை.

இதில் ஷாருக்கான் ஒரிஜினல்; ஹ்ருத்திக் ரோஷன் டூப்ளிகேட்! ஹ்ருத்திக்கை இப்படிக் கிண்டலடித்திருப்பதை அவரோ அவரது குடும்பத்தாரோ 'கூலாக' எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் 'ஹாட்'டான விஷயம்!

தந்தை ராகேஷ் ரோஷனுக்கு மூக்கு மேல் கோபம்! 'என் பிள்ளை முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் ஒரு நட்சத்திரம். அவனை இவ்வளவு கேவலமாகச் சித்திரித்திருப்பது மிகவும் மட்டமான ரசனையைக் காட்டுகிறது. அந்தப் பெண் ஹ்ருத்திக்கை முத்தமிடுவதுபோல் காட்டியிருந்தால் கூடப் போனால் போகிறதென்று விட்டு விடலாம். அவர் முகம் சுளித்துத் திரும்புவது ரொம்ப 'டாமேஜிங்'காக இருக்கிறது. இதில் நகைச்சுவை உணர்வுக்கே இடமில்லை'' எனக் காரசாரமாகக் கண்டித்து, யார் மீது வழக்குப் போடலாம் என



• ஷாருக்கான்



• கோக் விளம்பர ஷூட்டிங்

யோசித்துக் கொண்டிருக்கிறார்!

இத்தனைக்கும் ஷாருக்கை, இவர் மூன்று படங்களில் (கிங் அங்கிள், கரன் அர்ஜுன், கொய்லா) – இயக்கியிருக்கிறார். அப்படியும் அவர், தம் மகனை கேலிக்கூத்தாக்கும் விளம்பரத்தில் நடித்திருப்பது பற்றி லேசாக வருத்தப்படவே செய்கிறார்: "ஒருவேளை இதைப் பெரிய தமாஷாக ஷாருக் நினைத்தாரோ என்னவோ! நான் இன்னும் இது பற்றி அவரிடம் பேசவில்லை; அவர் நல்ல நண்பர்தான்" என்கிறார், பட்டும் படாமலும்.

"ஆனால், இந்த விளம்பரத்தை இயக்கிய ப்ரஹலாத் கக்கர் என்னிடம் மன்னிப்புக் கோரினார். பெப்ஸிக்காரர்கள் அவரை நிர்ப்பந்தித்து, ஹ்ருத்திக்கின் டூப்ளிகேட்டை உபயோகிக்கச் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் பெப்ஸியின் திட்டமிட்டுப் பழி வாங்கும் படலம். கோக், பெப்ஸி இருவருமே என் மகனைத் தங்கள் விளம்பரங்களுக்கென்று அணுகினார்கள். ஹ்ருத்திக் 'கோக்'கைத் தேர்ந்தெடுத்ததால், பெப்ஸிக்காரர்கள் எரிச்சலடைந்து விட்டார்கள்" எனக் குமுறுகிறார் ஸீனியர் ரோஷன்.

'கோக்'கின் 'ஐ வாண்ட் ஹ்ருத்திக்' விளம்பரப் படத்தை எடுத்தது 'சினியுக் எண்டர்டெயின்மெண்ட்'. அவர்களின் முதல் விளம்பரப் படம் இது என்பதால், 'ரிஸ்க்' எடுக்க விரும்பாமல், ஆஸ்திரேலியாவின் மிகச் சிறந்த விளம்பரப் படத் தயாரிப்பாளரான ஜார்ஜ் மஸ்கினையும் காமிராமேன் டேவிட் ஓயிஸையும் பிரத்யேகமாக வரவழைத்து, ஹ்ருத்திக் புராணம் பாடி, அவரது 'கஹோ நா ப்யார் ஹை' படத்தைப் பார்க்க வைத்து, மும்பைத் தெருக்களையும் ஸ்டூடியோக்களையும் வலம் வர வைத்து, மூன்று நாட்களில் படம் பிடித்திருக்கிறார்கள். அது சூப்பர் ஹிட்டானதும், வழக்கம் போல், போட்டி விளம்பரத்தைத் தயாரித்து விட்டார்கள் பெப்ஸிக்காரர்கள்!

இந்தப் போட்டா போட்டி ஒன்றும் இவர்களிடையே புதிதல்ல. முன்புகூட அஜய் ஜடேஜா, அஸாருதீனை வைத்து இசகுபிசகாக (eat cricket, sleep cricket) ஒரு விளம்பரப் படம் தயாரிக்கவில்லையா?

தற்போதைய விளம்பரத்தைத் தயாரித்திருக்கும் பிரஹலாத் கக்கரும் அந்தக் கருத்தைத்தான் வலியுறுத்துகிறார்:

"கோலா வார்ஸ் ஊரறிந்த ரகசியம்: முன்பு, சௌரவ் காங்குலி கோக் விளம்பரத்தில் வந்து கொண்டிருந்தபோது, பெப்ஸிக்காரர்கள் ஷாருக்கை வைத்து ஒரு விளம்பரப் படம் செய்தார்கள். அதில் ஷாருக், சச்சினைப் போல் வேஷம் போட்டு கிரிக்கெட்டர்களின் அறையில் நுழைந்து, ராகுல் திராவிடைப் பார்த்து, 'ஹாய் சௌரவ்' என்பார். ஆனால் அதற்காக சௌரவ் கோபித்துக் கொண்டதில்லை. இதெல்லாம் வேடிக்கை – விளையாட்டு என விட்டு விடுவதுதான் புத்திசாலித்தனம். ஹ்ருத்திக் நல்லவர்; அவர் இந்த விளம்பரத்தைப் பார்க்காமலேயே கோபித்துக் கொண்டிருக்கிறார் போலும். அவர் இன்று, ஜனங்களிடையே மிகவும் பாப்புலரான ஸ்டார். பிரபலங்களை காரிகேச்சர் செய்வது சகஜம் தானே? இதனாலெல்லாம் அவர் புகழ் மங்கி விடப் போகிறதா என்ன? அனாவசியமாக ஷாருக்கையும் வம்புக்கிழுக்கிறார்கள்..அவர் மனமும் மிகவும் சங்கடப்பட்டது" என்பவர், ராகேஷ் ரோஷனிடம் உண்மையிலேயே மன்னிப்புக் கேட்டாரா?

"மன்னிப்பா? ராகேஷ் ரோஷனிடமா? எதற்காக? நான் எந்தக் குற்றமும் செய்யவில்லையே? பெப்ஸி என்னை நிர்ப்பந்திக்கவெல்லாமில்லை! என்னை யாராலும் வலுக்கட்டாயப்படுத்த முடியாது. நான் சுயமாக சிந்தித்துத்தான் இந்த விளம்பரப் படத்தை எடுத்தேன்" என்கிறார் ஆணித்தரமாக.

"இது ஒரு பிரச்னையே அல்ல; மீடியாக்காரர்களின் லீலை!'' என எளிதாக பிரஹலாத் கக்கரால் இதை ஒதுக்கித் தள்ள முடிகிறது. ஆனால் ஹ்ருத்திக்கால் முடியவில்லையே?

பெப்ஸிக்காரர்களுக்கும், ஷாருக்கானுக்கும், பிரஹலாத் கக்கருக்கும் கண்டனக் கடிதங்கள் அனுப்பியுள்ளார் – தன் 'இமேஜை' இந்த விளம்பரம் ரொம்ப பாதிப்பதாக! ஹ்ருத்திக் பாடும் 'கஹோ நா வார் ஹை' பாடலுடன், பாலிவுட்டின் 'ஸ்டார் வார்ஸ்' துவங்கிவிட்டது!

— **ஜெயஸ்ரீ ராஜ்**



''என்னது! வீட்டைத் தலைகீழாக் கட்டிட்டீங்க.''

''இப்படிக் கட்டினால்தான் நல்லதுனு வாஸ்து நிபுணர் சொல்லிட்டாரு.''

-உ. ராஜாஜி

# கந்தா கடம்பா கதிர்-வேலா



**வீ**ட்டை எதிர்த்துக்கொண்டு வடிவேலுவைக் காதல் திருமணம் செய்து கொண்ட பெண், அம்மா லதாவைத் தேடிவர, ''நீ இறந்துவிட்டதாக உன் அண்ணன்மார்களிடம் சொல்லிவிட்டேன்; அவர்களும் நம்பிவிட்டார்கள். ஆகையால் நீ இனிமேல் இங்கே வராதே!'' என்கிறாரே, உள்ளூரிலேயே குடித்தனம் செய்யும் தங்கை இறந்துவிட்டதாக அண்ணன்மார்களை எப்படி நம்ப வைத்திருப்பார் என்று நாம் கொஞ்சம் காமன்ஸென்ஸோடு யோசிக்கும்போது...

தம்மாத்தூண்டு ரோல்களில் ஐயோ பாவமாக பிரபு, எஸ்.வி. சேகர், விவேக் மூவரும் வந்து போவதைப் பார்க்கும் போது...

கையேந்தி பவன் நடத்தும் ரோஜா, 'பினாக்'கில் டிக்கெட் விற்கும் நிரோஷா, திருடிப் பிழைக்கும் கோவைசரளா, தங்கள் வருமானத்திற்கு ஒவ்வாத தரமான உடைகளில் கலக்கும் போது...

காட்சிக்குக் காட்சி எக்ஸ்பர்ட் கமெண்ட்ஸ் கொடுக்கும் வடிவேலுவும் லதாவின் செக்ரட்டரி வெ.ஆ.மூர்த்தியும் கொடுத்த காசிற்கு வஞ்சனை இல்லாமல் படம் பார்க்கும் அனைத்து ஜீவராசிகளையும் அறுத்துத் தள்ளிவிட வேண்டும் என்று உறுதி பூண்டிருப்பதைப் பார்க்கும்போது...

'நான்கு மாடு, ஒரு சிங்கம்' கதையை பினாத்திக்கொண்டிருக்கும் லதா மூன்று மருமகள்களுக்குள் சண்டையை உண்டு பண்ணி அவர்களைப் பிரித்து ஜெயிக்கப் போகிறார் என்று நாம் எதிர்பார்க்க, அவரோ, மருமகள்களை மகன்களிடமிருந்து பிரித்து கச்சா முச்சாவென்று என்னத்தையோ பண்ணுவதைப் பார்க்கும்போது...

பரீட்சையில் 'டைம் ஓவர்' என்று விடைத்தாள்கள் பிடுங்கப்படுவதைப் போல இராம. நாராயணன் கையிலிருந்த ஃபிலிம் ரோலைப் படம் எடுத்த வரை போதும் என்று யாராவது பறித்துவிட்டார்களோ என்கிற அளவிற்குப் படம் மொட்டையாக முடிக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பார்க்கும்போது...

நமக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வருகிறது. ஓ, இதுதான் காமெடி படம் என்பதா?

— கிருஷ்ணா சிதம்பரம்

**ஊள**சி போல உடம்பிருந்தா தேவையில்லை பார்மஸி.

-இப்பாடல் வரியை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

உடம்பை ஒல்லியா வச்சுக்கணும்னு எல்லோருக்கும் ரொம்ப ஆசையாத்தான் இருக்கு. ஆனா இந்த fat (கொழுப்பு) பண்ற வேலை உடம்பை fat ஆக்கிடுதே!

சரி விஷயத்துக்கு வரலாம்.

ஒருத்தர் ஒல்லியாக இருந்தா அதை இங்கிலீஷ்ல சொல்றதுக்கு thin, lean, skinny, slimனு நாலு வார்த்தைங்க இருக்கு.

அவள் ஒல்லியாக இருக்கிறாள் என்பதை 'she is very thin' ன்னு சொல்லலாம்.

lean (லீன்)ன்னாலும் ஒல்லியான்னுதான் அர்த்தம். 'she is lean'- அவள் ஒல்லியாக இருக்கிறாள்.

கொஞ்ச நாளா உடம்பு சரியில்லாம, இளைச்சு துரும்பாப் போயிட்டான்னு சொல்லணும்னாலும் lean என்ற வார்த்தையை யூஸ் பண்ணலாம்.

உடம்பு ரொம்ப இளைச்சு எலும்பும், தோலுமா இருக்கறதை thinன்னு சொல்றதை விட lean ன்னு சொல்றதுதான் பொருத்தமாக இருக்கும்.

ஆனா காதலியை அல்லது மனைவியை வர்ணிக்கும்போது இந்த thin, leanங்கற வார்த்தைகளை யூஸ் பண்றதுக்கு பதிலா 'slim'ங்கற வார்த்தையை use பண்ணுங்க!

"You are very slim"- நீ ரொம்ப அழகா, ஒல்லியா இருக்கேன்னு சொல்லிப் பாருங்க. 'thin'ங்கற சொல் இகழ்; slimனு சொன்னா புகழ்!

போங்க என்னை நீங்க ரொம்பத்தான் புகழறீங்கன்னு வெட்கத்துல தலையைக் குனிஞ்சுப்பாங்க.

ஆனா ரொம்ப குண்டா இருக்கறவங்களைப் பார்த்து 'you are very slim'ன்னு சொல்லிடாதீங்க. என்ன கிண்டலான்னு சண்டைக்கு வந்தாலும் வந்துடுவாங்க.







# ஆங்கிலமே அருகில் வா!




சரி, ரொம்ப ஒல்லியா, ஒட்டடைக்குச்சி மாதிரியிருக்கறவங்களை இங்கிலீஷ்ல எப்படி சொல்லணும் தெரியுமா?

she looks skinny as a rake

(ஷி லுக்ஸ் ஸ்கின்னி ஆஸ் ரே(ய்)க்.)ன்னு சொல்லுங்க. rakeன்றது தோட்டம் கொத்துற ஒருவித கோல்!

'அவள் ஒல்லியாக ஒட்டடைக் குச்சி மாதிரி இருக்கா'ன்னு இதுக்கு அர்த்தம்.

ஒருத்தர் குண்டா இருந்தா he is fat. இல்லேன்னா he is stoutன்னு சொல்லுவோம் இல்லையா?

சரி பொத பொதன்னு ஊளைச் சதை கொண்ட நபர்களை எப்படி வர்ணிப்பது?

he is obese, she is obese என்றெல்லாம் சொல்லலாம். obeseஎன்பது ஆரோக்கியமற்ற பருமன். எல்லாமே சரிதான். சிலபேர் உயரத்திற்கேற்ப நல்ல உடற்கட்டுடன் அதாவது கட்டு மஸ்தான உடல்வாகு கொண்டவர்களாக இருப்பார்கள்.

இது போன்ற நபர்களை வர்ணிக்க 'robust' (ரொபஸ்ட்) என்ற வார்த்தையை use பண்ணலாம்.

He is a robust youngman. அவன் நல்ல உடல்வாகு கொண்ட கட்டுமஸ்தான (திடகாத்திரமான) இளைஞன்.

ஒருத்தர் நல்ல உயரமா இருந்தா 'he is tall'ன்னு சொல்லலாம். குள்ளமா இருந்தா 'he is short'ன்னு சொல்லலாம்.

## கை நிறைய காசு!

ஆண்களின் அழகை வர்ணிக்க 'handsome' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம்.

A handsome youngman (அழகிய இளைஞன்) எனலாம்.

இந்த 'handsome' என்ற வார்த்தைக்கு இன்னொரு அர்த்தமும் உண்டு.

'he gets a handsome salary' என்றால் அவருக்கு நிறைய சம்பளம் கிடைக்கிறது என்பது அர்த்தம்.

சரி, ரொம்ப ரொம்பக் குள்ளமா இருந்தா?

அதாங்க விட்டலாச்சாரியா படத்துல வர்ற சித்திரக் குள்ளன் போல இருந்தா அவர்களை 'dwarf'ன்னு (ட்வார்ப்)சொல்றதுண்டு.

ரொம்ப குள்ளமுமில்லாம, ரொம்ப உயரமுமில்லாம நடுத்தரமான உயரம் கொண்டவர்களை,

'he is of medium height'ன்னு சொல்லலாம்.

இதுவரைக்கும் ஒருத்தரோட தோற்றத்தை வர்ணிப்பது எப்படின்னு பார்த்தோம்.

மனுஷங்களோட குணத்தைப் பத்தி எப்படி வர்ணிக்கணும்னு அடுத்த வாரம் பார்க்கலாமா?

(தொடரும்)

**வி. ராஜகோபாலன்**



# கீகுகோச் வாசுடபுநாடிபே!



• கிகோ

**க**டந்த வாரம் மியூசிக் அகாடமி மினி ஹாலில் சலங்கை ஒலி என்ற அமைப்பின் சார்பில் ஒரு குச்சிபுடி நடன நிகழ்ச்சி. அரங்கம் அமைதியாக ரசித்த அந்த மேடையில் தோன்றி நடனமாடியவர் கிகோ வாடநாபே என்கிற ஜப்பானியப் பெண்.

கடந்த ஐந்து வருடங்களாக கிகோ, குச்சுபுடி கற்றுக் கொள்கிறார். இவரது குரு சத்தியப் பிரியா ரமணா. சென்னையில் நர்த்தன சாலா என்ற குச்சிபுடி நாட்டியப் பள்ளியை நடத்தி வருகிறார். கிகோ, இந்தியாவில் ஆறு மாதம் தங்கி குருவிடம் நடனம் கற்றுக் கொள்கிறார். ஆறு மாதம் ஜப்பானிலேயே பயிற்சி செய்கிறார்.

"உங்களுக்குக் குச்சுபுடி கற்றுக் கொள்ளும் ஆர்வம் எப்போது ஏற்பட்டது?"

"நான் ஜப்பானில் டோக்கியோ நகரில் ஒரு இந்திய கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் வேலை பார்த்து வந்தேன். அப்போது அடிக்கடி இந்தியா வந்து போக வாய்ப்புக் கிடைத்தது. இங்கே பரத நாட்டிய நிகழ்ச்சிகளைக் காண்பதற்குச் செல்வேன். அதன் காரணமாக, பரதநாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

"ஜப்பானிலேயே யூகியோ என்ற பரத நாட்டியக் கலைஞரிடம் சிஷ்யை ஆனேன். யூகியோ இந்தியா வந்து, பிரபல பரதக் கலைஞர் லீலா சாம்சனிடம் பரதம் பயின்றவர். ஐந்து வருடங்கள் பரதநாட்டியம் கற்றுக் கொண்டேன். தனியாக நடன நிகழ்ச்சிகள் தந்தது இல்லையென்றாலும், மற்ற மாணவிகளுடன் சேர்ந்து பங்கேற்றிருக்கிறேன்.

"ஒரு தடவை இந்தியா வந்திருந்த சமயம் மகாபலிபுரத்தில் நடைபெற்ற நாட்டிய விழாவுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று நான் பார்த்தது ஒரு குச்சிபுடி நடன நிகழ்ச்சி. பாதி நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த சமயம், மழை பிடித்துக் கொண்டது. அது ஒரு திறந்தவெளி அரங்கம் என்பதால், மழைக்குப் பயந்து, பார்வையாளர்கள் எல்லோரும் அங்கிருந்து நகர்ந்து விட்டனர். ஆனால், நடன மாடியவர்கள் நிறுத்தாமல் தொடர்ந்து ஆடிக் கொண்டிருந்தனர். நானும் மழையில் நனைந்த படியே அவர்கள் நடனத்தை ரசித்தேன். ''அந்த நிகழ்ச்சியை நினைக்கிறபோதெல்லாம் நான் ரொம்ப எமோஷனலாகி விடுகிறேன்" என்கிறார்.

**அ**ன்றுதான் இவருக்கு குச்சிபுடி மீது காதல் மலர்ந்தது. பரதநாட்டியத்தை நிறுத்தி விட்டு, குச்சிபுடிக்குத் தாவினார்.

"கிகோவுக்கு பரதம் தெரிந்திருந்ததால், குச்சிபுடி கற்றுக் கொள்வது எளிதாக இருந்தது. அவருக்கு அபார ஆர்வம்; எதையும் சட்டென்று கிரகித்துக் கொள்ளும் திறமை உண்டு. எனவே, கிகோவுக்கு, குச்சிபுடி கற்றுக் கொடுப்பதில் சிரமமே இல்லை" என்று சர்டிபிகேட் கொடுத்தார் குரு சத்தியப்பிரியா ரமணா.

"ஜப்பானில் இருக்கும் ஆறு மாத காலத்தில் எப்படிப் பயிற்சி செய்வீர்கள்?"

"வீடுகளில் நடனப் பயிற்சி செய்ய போதிய இடவசதி இருக்காது. எனவே, ஸ்டுடியோக்களில் நேரம் வாங்கி, பயிற்சி செய்வேன். கண்ணாடி முன் நின்று அபிநயம் பிடித்தால், தவறு என்ன, எங்கே என்று தெரிந்து விடும். உடனே திருத்திக் கொள்வேன். சில சமயம் என் நடனத்தை வீடியோ எடுத்து போட்டுப் பார்த்து, தவறுகளைத் திருத்திக் கொள்வதும் உண்டு" என்கிறார் கிகோ.

சந்திப்பு : **மானஸா**

TASTE & FEEL THE DIFFERENCE

TASTE & FEEL THE DIFFERENCE

TASTE & FEEL THE DIFFERENCE

# M.S. Product

MSP

(SSI Unit)

MSP

(Specialist in Ready Mix Puliyotharai bath)

Manufacturers of:

## ஐயங்கார் புளியோதரை பொடி


| | |
|---|---|
| * ரசப்பொடி | Rasam Powder |
| * சாம்பார் பொடி | Sambar Powder |
| * இட்லி மிளகாய் பொடி | Idly Chilli Powder |
| * பருப்பு பொடி | Dhall Powder |
| * வேர்க்கடலை பொடி | Groundnut Powder |
| * ஆரோக்யா (சத்து மாவு) | Arogya (Sathu Mavu) |
| * காஞ்சி இட்லி மிக்ஸ் | Kanchi Idly Mix |
| * பஜ்ஜி மிக்ஸ் | Bajji Mix |
| * கரிவேப்பிலை பொடி | Karuvepillai Powder |

கிடைக்குமிடம்:

**Vaishnavi Home Needs**

No. 20, 26th Street, Thillai Ganga Nagar,
Chennai 600 061. Tel: (044) 2312740/2331971

TASTE & FEEL THE DIFFERENCE



## வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 457 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 171 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம்.

| தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு<br>திட்ட விபரங்கள் | ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time) | நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund' |
|---|---|---|
| ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை) | Rs. 500 | Rs. 5000 |
| ஸுமங்கலி ப்ரார்த்தனை : ஸுமங்கலி ப்ரார்த்தனைக்கு ரூ.1000/- | | |
| வித்யார்த்தி ஸமாராதனைக்கு ரூ.500/- | Rs. 1,500 | Rs.15,000 |
| அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஸமாராதனைக்கு | Rs. 1,500 | Rs.15,000 |
| பௌர்ணமி ஆயுஷ்ய ஹோமம் | Rs. 1,000 | Rs.10,000 |
| ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/- | Rs. 12,000 P.A | Rs. 1 Lakh |

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

● அவ்வை கே. சஞ்சீவி பாரதி, அவ்வையார்பாளையம்.

? 'ஜெயலலிதா என்ற பாம்பை அடிக்க ரகுபதி, கருப்பசாமி பாண்டியன் என்ற கல்லை தி.மு.க.வினர் எடுத்துள்ளனர். நான் தடியை எடுப்பேன்' என்கிறாரே சேடப்பட்டி முத்தையா?

! தடி எடுத்தாலும் அவரால் வலுவான அடி கொடுக்க முடியாது! காரணம், அவரே பாம்பாக நெளிந்தவர்தானே?

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு.❒

? அ.தி.மு.க.வின் பயன்படாத சொத்துக்களை விற்பதற்கு அதன் தலைவி ஜெயலலிதாவுக்கு அக்கட்சியினர் அதிகாரம் வழங்கினாலும்கூட, சபையர் தியேட்டர் இடத்தை சசிகலா குடும்பத்துக்குத்தான் விற்க வேண்டும் என்று என்ன கட்டாயம்?

! என்ன விலைக்கு என்ன நிபந்தனைகளின் பேரில் விற்கப்படுகிறது என்ற விவரங்கள் முழுமையாகத் தெரிய வந்தால் தான் இது விற்பனையா அல்லது கட்சி சொத்துக்கு வடிகால் அமைக்கப்படுகிறதா என்பது தெளிவாகும்.

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை – 84.

? 'பொதுமக்கள் புகார் பெட்டி' என்னும் புது சேவையை, சென்னை மாநகரக் காவல் துறை அறிமுகப்படுத்தி உள்ளதே, பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு எப்படி உள்ளது?

! நன்றாகத்தான் இருக்கிறது. ஒரு சில காவல் நிலையப் புகார் பெட்டிகளில் ஏர் மெயில், இன்லண்ட் கவர்களும் போஸ்ட் பண்ணப் படுகிறதாம்!

● பா. ஜெயக்குமார், வந்தவாசி.

? சுத்தமான காற்றைச் சென்னையில் பார்லர் அமைத்து, காசு கொடுத்து சுவாசிப்பது தேவையா?

! அதிகாலையில் மொட்டை மாடியில் ஐந்து முதல் பத்து நிமிஷம் வரை பிராணாயாமம் செய்தால் போதும். காசு செலவின்றி நுரையீரல்களும் ரத்தமும் சுத்தமடைந்து புத்துணர்ச்சி ஏற்படும். ஆனால் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்க சோம்பல்பட்டு மினரல்வாட்டர் அருந்தும் சென்னைவாசிகள் பார்லரையும் ஆதரிப்பார்கள்!

● கவிதா, பூனாம்பாளையம்.

? தமிழ்நாட்டில் மிகவும் எளிதாகக் கிடைப்பது என்ன?

! சொற்பொழிவுகள்.

● க. கந்தவேல், ராதாநல்லூர்

? கலைஞர் 21-ஆம் நூற்றாண்டின் மகாத்மா என்று ஆலடி அருணா குறிப்பிடுவது பற்றி?

! டூ மச். கலைஞரே முகம் சுளிப்பார்.


● வசீகரன், சென்னை – 18. ✱

? தமிழ்த்தாய் என்கிறோம். ஆனால் அறிவியலில் தமிழ் இன்னும் குழந்தையாகத் தானே இருக்கிறது?

! ஆங்கிலத்திலுள்ள பல விஞ்ஞானப் பதங்கள் பிற மொழிகளிலிருந்து வந்து சேர்ந்தவைதாம். காலப்போக்கில் அவை ஆங்கிலமாகவே மாறி விட்டன. இதே ரீதியில் நாம் ஆங்கில விஞ்ஞானச் சொற்களைத் தமிழுக்குள் தாராளமாக அனுமதிப்பதுதான் அறிவுடைமை. இதை இப்போது ஹிந்தி ஏற்றுக்கொண்டு வெகு வேகமாக வளர்கிறது. நாம் தூய தமிழ் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மொழி பெயர்த்து மாளாது. தமிழ் வளர்ச்சியில் நவீனயுகத்துக்குத் தேவைப்படும் வேகமும் இராது.



• டூ மச்!



• நம்மாளு!



• நெளிந்தவர்

கலைஞர்

● என். பாலகிருஷ்ணன், மதுரை.

? '100 கோடி' – இந்தியாவுக்குப் பெருமையா?

! பெருமையல்ல; எச்சரிக்கைதான் என்பது ஒருபுறமிருக்க, 100வது கோடி குழந்தையாகக் கருதப்படுகிற

❒ ரூ. 50 முதல் பரிசு

எஸ். கதிரேசன்,
157. எம்.ஜி.ஆர். நகர், வி.கே. சாலை,
பேரணாம்பட்டு – 635 810

✱ ரூ. 25 இரண்டாம் பரிசு

வசீகரன்
117, எல்டாம்ஸ் சாலை
சென்னை – 18



• பெருமை?

அந்தச் சிலையை பத்திரிகை, டீவி காமிராக்கள் படாதபாடு படுத்தியது வருத்தம்.

● பி. நடராஜன், அன்னூர்.

*? லாரா தத்தா உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பற்றி?*

! வரிசையாகப் பல இந்தியப் பெண்கள் உலக அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் மட்டுமே நாம் பெருமைப்படுவதற்கில்லை; இதே சமயத்தில் இலக்கியம், நிர்வாகம், கலைகள், ராணுவம் போன்ற பல துறைகளில் இந்தியப் பெண்கள் உலகப் புகழ் பெறுவது காரணமாக

# மகாத்மாவாமே?

நமது உலக அழகிகளும் கவனத்துக்குள்ளாகி, பாராட்டுப் பெறுகிறார்கள்.

● அ. ஆரோக்கியராஜ், குண்டூர்.

*? சன் டீ.வி.யின் புதிய சன் நியூஸ் சேனல் எப்படி?*

! சராசரியான ஆரம்பம். மதிப்பெண் போடுவதற்கு முன்னால் இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுத்துப் பார்க்கலாம்.

● ஆர். மோகனகிருஷ்ணன், மயிலாடுதுறை.

*? அகில இந்திய அளவில் புகழ் பெற்ற நடிகைகள், தற்போதைய கலெக்ஷன் ஹீரோ, என்று ஒரு அருமையான டீமை வைத்துக் கொண்டு எளிமையாக, இனிமையாக அமைந்திருந்த ராஜீவ்மேனனின் திறமையான இயக்கம் நம் இயக்குனர்களிடம் இல்லையே?*

! ராஜீவ்மேனன் என்ன ஹாலிவுட்டிலிருந்து வந்தவரா? நம்ம நாட்டவர்தானே ஐயா! வஞ்சனை இல்லாமல் சந்தோஷப்படுங்கள்.

● கதி. அருணாசலம், ஈரோடு.

*? 'சந்திரனில் கல்லறை' – சாத்தியமா?*

! சாத்தியம்தான் என்று அமெரிக்க நிறுவனம் ஒன்று கூறுகிறது. 'கல்லறை என்ன, சந்திரனில் அணுகுண்டு வெடிக்கவே திட்டம் இருந்தது' என்று அமெரிக்க ராணுவம் சொல்கிறது. ஆனால் சாத்தியமானது எல்லாம் சரியானது என்று கூறிவிட முடியாது!



• எச்சரிக்கை!

● ராமகிருஷ்ணன், காயக்காடு.

*? ஜெயலலிதா எடுக்கும் முடிவை எதிர்த்து நீதிமன்றம் சென்றால் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி பறி போய்விடும் என்ற அ.தி.மு.க. சட்டத் திருத்தத்தைப் பார்த்தீர்களா?*

! நீதிமன்றம் செல்ல அவசியமின்றி உட்கட்சி ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுத்தால் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றும் அவசியமே இருக்காதே!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

*? சமீப கதைகளில் யாருடைய சொற்பிரயோகம் உங்களை அசத்தியிருந்தது?*

! க.சீ. சிவகுமார். மிக நுண்ணிய விஷயங்களை ரொம்ப எளிமையாகவும் அழகாகவும் வார்த்தைகளில் கொண்டு வருகிறார். உள்ளத்தில் கவிதையும் பேனாவில் உரைநடையும் கொண்ட எழுத்தாளர்.

● கே.வி. ராமன், சென்னை – 73.

*? 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' – என்று உரைத்தவன் பேதை அல்ல; நிச்சயமாகப் பேதைதான் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்' என்று கூறும் கல்கி 14.5.2000 இதழ், 'ஆங்கிலமே அருகில் வா' என்று அதே இதழில் அழைப்பதேனோ?*

! அதே கட்டுரையில் ஆங்கிலத்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருப்பதை நீங்கள் படிக்கவில்லையா, ராமன்?

# நாலெழுத்துக்கு மயங்காதீர்!

**நச்!**

✉ பத்மா ரவிசங்கரின் 'அம்மாவின் கதை' வரட்டு ஜம்ப அப்பாக்களுக்கு நச்... அடி!

திருச்சி-14, ராஜி ராதா.




**மாயை**

✉ மெல்லத் தமிழ் இனிச் சாகும்?கட்டுரை படித்தேன். எதற்குமே முதலில் எதிர்ப்பு வரத்தான் செய்யும். பின்பு உண்மை உணர்ந்து மக்கள் ஏற்றுக்கொண்டு விடுவார்கள். ஆங்கிலத்தில் படித்தால் மட்டுமே அறிவு வளரும் என்ற மாயை மக்களிடம் நீங்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பே இத்திட்டத்தைச் செயல்படுத்தி இருந்தால் இந்நேரம் பலன் கிடைத்திருக்கும்.

மங்கைநல்லூர், எல். துர்காதேவி.

**பொறுப்பு**

✉ ஜேப்பியாரின் பேட்டியில் அவர், தம் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மேல் வைத்துள்ள அக்கறையும் மாணாக்கர்களை தந்தை ஸ்தானத்தில் இருந்து பாதுகாக்கும் பொறுப்புணர்வும் வெளிப்பட்டது.

சென்னை – 84, ஜோ. பன்னீர்செல்வம்.

**மயங்காதே!**

✉ 'வாள் பிடித்த அனுராதா' படித்தேன். ஏராளமான திறமைகளை உள்ளடக்கி வெற்றி பெற்று போலீஸ் துறைக்கு வரும் இந்த மங்கையர்களை 'லஞ்சம்' என்ற நான்கெழுத்து மயக்காமல் இருந்தால் தேவலை!

திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்.

**ஜில்**

✉ கொளுத்தும் அக்னி நட்சத்திர வெப்பத்திலிருந்து தப்ப மூலிகை மணி வேங்கடேசன் வழங்கிய எளிய டிப்ஸ் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

போடிநாயக்கனூர், எம். பாலசுப்ரமணியன்.

**சரி**

✉ ப்ளஸ் டூ படிக்கும்போது அவரவருக்குப் பிடித்த தொழிற் கல்வியையும் கற்றுக் கொடுத்தால், சுய வேலை வாய்ப்புக்கு உதவியாயிருக்கும் என சுப்பு லட்சுமி ஜெகதீசன் கூறுவது சரியான யோசனை.

சென்னை – 97, கே.வி. ராமன்.

**இயற்கையே கதி!**

✉ வறட்சியிலும் கைவரிசை காட்டும் வறண்ட இதயங்களைத் தலையங்கத்தில் நன்றாகச் சாடியிருந்தீர்கள். இந்தக் கல்மனம் படைத்தவர்களிடம் இருந்து சுபிட்சம் பெறுவது அரிது. இயற்கை மனது வைத்து தனது ஓரவஞ்சத்தை ஒதுக்கி வைத்தால் மட்டுமே நல்லது நடக்கும்!

நெல்லையப்பபுரம், டி.செல்வன்.

**குறை தீர்த்தார்**

✉ வாகவின் பேட்டி படித்தேன். கமல் போன்ற நடிகர்கள் டைரக்டராக ஆகும்போது வாசு போன்ற டைரக்டர்கள் நடிகராவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. எம்.ஆர். ராதா, நம்பியார், அசோகன் போன்ற வில்லன் நடிகர்களுக்குப் பிறகு ஒரு நல்ல வில்லன் நடிகர் தமிழ்த் திரையுலகுக்கு இல்லாத குறையை வாசு தீர்த்து வைப்பார் என நம்பி, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம்!

இலால்குடி, எம். இராஜேந்திரன்.

**நியாயமான கத்தல்**

✉ காச்மூச் • பகுதியில் ஷர்மிளாவின் கத்தல், நியாயம்தான். எந்த மனிதரும் தனியார் மருத்துவமனைக்குக் கொடுக்கும் மதிப்பை அரசு மருத்துவமனைக்குத் தருவதில்லை.

தஞ்சாவூர், க. பாக்யமலர்.



## "கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

QUALITY SPEAKS
TASTE TESTIFIES

## SRIDEVI'S

## APPALAMS VADAMS

AVAILABLE AT ALL LEADING
SUPER MARKETS,
ALL NILGIRI'S OUTLETS

MARKETED BY :
**ANNAPOORNA ENTERPRISES**
45/119, 5th MAIN ROAD,
CHAMARAJPET, BANGALORE-18
PHONE : 6675201

சிறுவர், சிறுமிகள், பெண்களுக்கு தேவையான
அழகிய ரெடிமேட் மாளிகை!



சுரிதார், மிடி, பிராக், பாபாசூட்,
நைட்டீஸ், ஸ்கர்ட், டாப்ஸ், சரார்ா,
சோளி, லாச்சா, வெஸ்டர்ன்
டிசைன்ஸ் ஆடைகளின் சங்கமம்!

புதுமை! என்றென்றும் புதுமையான
ரெடிமேடு ஆடைகளுக்கு!

## கதம்ப மாளிகை

ரெடிமேட்

36, பாண்டி பஜார், தி.நகர்,
சென்னை-17. ☎ 4338418

சமீபத்தில் விலைவாசியை எதிர்த்து தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டு, கவர்னரிடம் மனுவும் கொடுக்கப்பட்டது. இதில் என்ன ஆச்சர்யம் என்றால், த.நா. காங்கிரஸின் எல்லா கோஷ்டிகளும் இதில் கலந்து கொண்டது தான்!

இந்த அதிசயம் எப்படி நடந்தது? இதற்கொரு ஃபிளாஷ் பேக் இருக்கிறது!

சில நாட்களுக்கு முன்னால் தில்லியில் டேராபோட்ட மூப்பதுக்கும் மேற்பட்டவர்கள் அடுத்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் அலுவலகத்தில் தமிழகத் தலைவர்களின் தலைகள் தான் எப்போதும் தென்பட்டன. இதனைக் கண்டு எரிச்சலைந்த சோனியாகாந்தி, தன்னைச் சந்தித்த பிரமுகர்களிடம் ''எதாவது போராட்டம், மறியல், உண்ணாவிரதம் என்றால் அங்கும் உங்கள் கோஷ்டிப் பூசல் பிரதிபலிக்கிறது. குலாம்நபி ஆசாத் கலந்து கொண்ட ஒரு மறியலில் கூட உங்களில்

• மனுகொடுத்தபோது...



• எண்ணிப் பாருங்கள், எத்தனை தலைவர்கள்!



# வாண்டுகள் ராஜ்ஜியம்!

மியூசிக் அகடமி அரங்கம் முழுக்க அம்மாக்கள், அப்பாக்கள், குழந்தைகள். எல்லோரது முகத்திலும் ஏகப்பட்ட எதிர்பார்ப்பு. அதுவும் இரண்டு வயதிலிருந்து பன்னிரண்டு வயதிற்குட்பட்ட மழலைப் பாடகர்களும், நடனக் கலைஞர்களும் ஒரு 'கிராண்ட் காலா' இசை நிகழ்ச்சி நடத்தப் போகிறார்கள் என்றால்?

இதே மியூசிக் அகடமியில் 1976–ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி (!) காதில் வைத்துக் கொள்ள பஞ்சும், தலை வலிக்குப் போட்டுக் கொள்ள மாத்திரையும் கொடுத்து, 'அபஸ்வரம்' என்ற இசைக் குழுவைத் தொடங்கிய ராம்ஜியின் கண்டுபிடிப்புதான் இந்த 'இசை மழலை' இசைக்குழு!

நிகழ்ச்சியைத் தனது தந்தை கமல்ஹாசன் சகிதம் வந்து தொடங்கி வைத்தவர் அக்ஷராஹாசன்.

முதல் பாடலாக 'ரகுபதிராகவ ராஜாராம்'– கேதார்நாத் தனது குழுவுடன், துளி பாவம் குறையாமல் பாடப்பாட, அரங்கத்தில் பலத்த கை தட்டல்!

அடுத்து 'சினேகிதனே' பாடலை உருகி உருகி ஐஸ்க்ரீம் மொழியில்





• ராம்ஜி



• கமல்

பாடிய மதுமிதாவுக்கு அதிகபட்சமாகப் பத்து வயது இருக்கலாம். 'மார்கழித் திங்கள் அல்லவா' என எஸ். ஜானகியின் நகலாகப் பாடிய ஜூனியர் மதுமிதா, 'ஏதோ ஒரு பாட்டு' என ஞாபகச் சிறகடிக்க வைத்த சஞ்சனா ஸ்ருதி ஆகிய மூன்று பேரும் ஒரு வயலின் உயரமே இருந்த இரண்டரை வயதுக் குழந்தைகள்!

சப்தஸ்வரங்கள், ராகம் சங்கீதம் போன்ற பல டி.வி இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இந்தக் குழந்தைகள் பாடி அசத்தின போது, இது போன்ற குழந்தைகளைத் தேடிப் பிடித்து ஏன் ஓர் இசைக் குழு அமைக்கக் கூடாதுன்னு தோணிச்சு. உடனே காரியத்தில் இறங்கிட்டேன்.

"கிட்டத்திட்ட ஐந்நூறு பிள்ளைகளை இன்டர்வியூ செய்து இருபத்தேழு பேரைத் தேர்ந்தெடுத்தேன். தேர்ந்தெடுத்த பிள்ளைகளுக்கு மூணு மாதம் ரிகர்சல் கொடுத்தோம்" என்றார் ராம்ஜி.

"இந்தக் குழந்தைகளைப் பார்க்கிறபோது சந்தோஷத்தில் அழலாம் போல இருக்கு! இந்தக் குழந்தைகள் இத்தனை திறமையோடு உருவாகக் காரணமா இருந்த, அவங்க குரு, பெற்றோர்களுக்கு இந்த ஒருகணம் போதும். பல பெற்றோர்களை இந்த நிகழ்ச்சி சிந்திக்க வைக்கும்னு நான் நம்புகிறேன்" என்றார் கமலஹாசன்.

இந்த வாண்டு படை உலகம் முழுக்க அழைத்துச் சென்று இசை நிகழ்ச்சி நடத்தவிருப்பதாகச் சொன்னார் ராம்ஜி.

— ஜெயன்

படங்கள்: வெங்கடேஷ்

# சோனியா விட்ட டோஸ்!

சிலர் கலந்து கொள்ளவில்லை. இந்த நிலை நீடித்தால் நான் சும்மா இருக்க மாட்டேன். கூண்டோடு நீக்கி விடுவேன். எனவே உங்கள் ஒற்றுமையைக் காட்டும் விதமாக அடுத்தப் போராட்ட நடவடிக்கையில் செயல்படுங்கள்; அதன் பிறகே தலைமை மாற்றம்'' என்று கட் அண்ட் ரைட்டாகச் சொல்லி விட்டாராம். அந்த டோஸால் ஏற்பட்ட ஒற்றுமையுணர்வு தான் இப்போதைய போராட்டத்தில் காண்பிக்கப்பட்டதாம்!

– கௌசி

படங்கள்: ராஜன்

# நஷ்டஈடு வழ.

## கல்கியிடம் வைகோ கேட்கிறார்!

**கல்கி, 07.05.2000 இதழில் ''வைகோவின் வார்த்தைத் தாக்குதல்'' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள தலையங்கத்துக்கு ஆட்சேபணை தெரிவித்தும் ரூ. 50 லட்சம் நஷ்டஈடு கோரியும் வைகோவின் வழக்கறிஞர் திரு. ராதாகிருஷ்ணன் நமக்குக் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தின் சாரமான பகுதி பின்வருமாறு:**

எனது கட்சிக்காரர் (வைகோ) அதிர்ச்சியும் ஆச்சர்யமும் அடையும் வகையில் அவரது ஜெனிவா பேச்சு சில நாளிதழ்களில் உண்மைக்குப் புறம்பாகத் திரித்து வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து எனது கட்சிக்காரர் மறுப்பு அறிக்கை வெளியிட, அது நாளிதழ்களில் ஏப்ரல் 25ம் தேதி பிரசுரமாகியுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, நீங்கள் 07.05.2000 கல்கி இதழில் ''வைகோவின் வார்த்தைத் தாக்குதல்'' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியுள்ளீர்கள். எமது கட்சிக்காரர் தமது நிலையை விளக்கி மறுப்பு அறிக்கை விட்ட பிறகும் அவரது பேச்சுக்கு நீங்கள் கொடுத்திருக்கும் விமர்சனம் தவறானது, விஷமத்தனமானது. இதனால் எமது கட்சிக்காரரின் கௌரவமும் நற்பெயரும் மாண்பும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அவரது அரசியல்மேன்மைக்கு பங்கம் உண்டாகி, மனவேதனை ஏற்பட்டுள்ளது.

எனவே கல்கி பத்திரிகையின் ஆசிரியரும் பதிப்பாளரும் இதற்கு நிபந்தனை அற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காத பட்சத்தில் உங்கள் மீது ரூ. 50 லட்சத்துக்கு நஷ்டஈடு வழக்கு தொடரப்படும்.

இப்படிக்கு
கே.எஸ். ராதாகிருஷ்ணன்
சென்னை - 1



**மேற்படி கடிதத்துடன் திரு வைகோ ஏப்ரல் 24ம் தேதி நாளிதழ்களுக்கு அனுப்பிய மறுப்பு அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பின்வருமாறு:**

ஜெனிவாவில் ஏப்ரல் மூன்றாம் தேதி மனித உரிமை கமிஷன் அதிகாரிகளைச் சந்தித்து மனித உரிமை மீறல்களால் ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களை எடுத்துக் கூறினேன். அதன் பின் சர்வதேசத் தமிழர்களின் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற பேரணியில் நான் பேசியது குறித்து உண்மைக்கு மாறான அ ப் ப ட் ட

# 50 லட்சம்!

மான பொய்களைச் சொல்லி, நான் பேசியதை திரித்துக் கூறி திட்டமிட்டே தீய நோக்கத்தோடு என்னைக் களங்கப்படுத்தவும் என் மதிப்பை சீர்குலைக்கவும் இலங்கை அரசு அபாண்டமாகப் பழி சுமத்தியுள்ளது. இலங்கை அதிபர் குறித்து நான் கற்பனைகூட செய்துபார்க்க முடியாத ஒன்றை நான் பேசியதாக இலங்கை வெளி விவகார அமைச்சர் கதிர்காமர் குற்றம் சாட்டி, இந்திய அரசுக்கு எழுதியிருப்பதாக இலங்கையில் நேற்றும், இன்று இந்தியாவிலும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

ஒரு காலத்தில் பயங்கரவாதத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத்தோடு இஸ்ரேலும் அயர்லாந்து குடியரசு இராணுவம் (IRA) என்ற அமைப்போடு இங்கிலாந்தும், இனப் பிரச்னைக்குத் தீர்வுகாணப் பேச்சுவார்த்தை நடத்துவதை என் பேச்சில் மேற்கோள் காட்டினேன். 1985ஆம் ஆண்டு இங்கிலாந்து பிரதமர் மார்கரெட் தாட்சரை IRA அமைப்பினர் குண்டு வைத்துக் கொல்ல முயன்றபோது இங்கிலாந்து பிரதமர் தப்பிவிட்டார். அதன்பின் அவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் பிரதமர் இல்லத்துக்குத் தொடர்பு கொண்டு "நாங்கள்தான் குண்டு வைத்தோம். அதிர்ஷ்டவசமாக உங்கள் பிரதமர் தப்பிவிட்டார். ஒவ்வொருமுறையும் அவருக்கு அதிர்ஷ்டம் தேவை. எங்களுக்கு ஒருமுறை அதிர்ஷ்டம் இருந்தால் போதும்" என்று தெரிவித்தனர். அப்படிப்பட்ட அமைப்பின் அரசியல் பிரிவோடு இங்கிலாந்து பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துகிறார். எனவே இலங்கையிலும் சிங்கள அரசு ராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து ராணுவத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு திம்பு பேச்சுவார்த்தையில் தமிழர்கள் தரப்பில் சொல்லப்பட்ட கருத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்று பேசினேன். என் பேச்சில் இலங்கை அதிபரின் பெயரையோ, அல்லது இலங்கை அதிபர் என்ற சொல்லையோ எந்தக் கட்டத்திலும் பிரயோகிக்கவில்லை. இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்கு உரிய விளக்கத்தை இந்திய வெளி விவகாரத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்குக்குத் தெரிவித்துள்ளேன். என்னைக் களங்கப்படுத்தும் வகையில் பொய்யாகக் குற்றம் சாட்டியுள்ள இலங்கை அரசின் நடவடிக்கை கண்டனத்துக்கும் ஆட்சேபனைக்கும் உரியது.

– வைகோ

24.4.2000



• கருணாகரன்

மேற்கு வங்காளத்தில், கம்யூனிஸ்ட் அரசை எப்படியும் வீழ்த்துவது என்று மகா கூட்டணி முயற்சியில் மம்தா பானர்ஜி ஈடுபட்டிருப்பதைப் போல், கேரளாவிலும் கம்யூனிஸ்ட் அரசை வீழ்த்த ஒரு முயற்சியைத் துவக்கியுள்ளார் காங்கிரஸ் தலைவரான கருணாகரன். இதற்கு, காங்கிரஸ் மேலிடத்தில் அர்ஜுன்சிங், ஜிதேந்திரப் பிரசாத், குலாம் நபி ஆசாத், அகமது படேல், பிரணாப் முகர்ஜி எல்லோரையும் சந்தித்துப் பேசி வருகிறார். இவரது உண்மையான நோக்கம் கம்யூனிஸ்ட் கூட்டணியை வீழ்த்துவது இல்லை; ஏ.கே. அந்தோணியை வீழ்த்துவது தான் என்கிறது காங்கிரஸ் உள் வட்டாரம்!

– எம்.

• அந்தோணி





# லல்லலாரா!

● மிஸ் யூனிவர்ஸ் பட்டம் வென்றதும் லாராவிடம் கேட்கப்பட்ட கேள்வி: "நீங்கள் முதன் முதலாக என்ன செய்ய விரும்புகிறீர்கள்?" அவர் அளித்த பதில்: "நிறைய சாப்பிட விரும்புகிறேன்!" சொன்னவாறே, ஹோட்டல் அறைக்குச் சென்று கதவைத் தாழ் போட்டு, ஃபோனை 'டு நாட் டிஸ்டர்ப்'பில் வைத்து விட்டு, மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டது... மஷ்ரூம் ஆம்லெட்டை!

● பங்கு பெற்ற பெண்களின் அம்மாக்கள் பலர் முன்னாள் அழகிகளாம். லாராவின் அம்மாவே அந்தக்கால மிஸ் மெட்ராஸ்! மிஸ் அருபியாவின் அம்மாவே பார்ப்பதற்கு மாடலழகி போல் அவ்வளவு 'பளிச்'சாக இருந்தாராம்.

● லாராவிடம் தன் மகுடத்தைத் துறந்த மிஸ் யூனிவர்ஸ் 1999, லாராவுக்குக் கொடுத்த வார்னிங் - "ஜாக்ரதை! சில சமயம் ஐயோ, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று நொந்து விடுவாய்! ஆனால் நீ இதற்காகத்தான் இவ்வளவு பாடுபட்டு உழைத்தாய் என்பதை என்றும் மறவாதே."

● ரிகர்சலின்போது ஜெய் அலெக்சாண்டர் என்ற ஆப்பிரிக்க அமெரிக்கர் இவர்களுக்கு நடை பயிற்றுவித்தாராம்! அப்போது அந்த நெடிதுயர்ந்த மனிதர் உண்மையிலேயே ஒரு பெண் உடையைப் போட்டுக்கொண்டு கையில் ஒரு பர்ஸையும் வைத்துக்கொண்டு பெண்ணைப் போலவே நடந்து காட்டினாராம்!

● வென்றவுடன் தனது ட்ரெஸ் டிசைனர் ஹேமந்த் த்ரிவேதியுடன் தொலைபேச முயன்றிருக்கிறார் லாரா. பலமுறை முயன்றும் பயனில்லாமல் போகவே, நொந்து விட்டார்! நிகழ்ச்சி முடிந்த பிறகுதான் த்ரிவேதி ஆக்ஸிடெண்டாகி, லீலாவதி ஹாஸ்பிடலில் கோமாவில் கிடந்து, மிக மெதுவாகத் தேறி வரும் விஷயத்தை அவரிடம் மெல்லத் தெரிவித்தார்கள். "ஐயோ... நான்தான் அவரின் முதல் மிஸ் யூனிவர்ஸ். நான் அவரை ரொம்பவும் நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை யாராவது அவரிடம் சொல்லுங்களேன்" என்றாராம் லாரா, வேதனையுடன்.

டைம்ஸின் பிரசிடெண்ட் பிரதீப் குஹா, திரிவேதியிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்ததும் அவர் மெல்லச் சிரித்து, 'வெற்றி' முத்திரையைக் காட்டினாராம்!

● "இம்முறை போட்டிக்கு அதி அற்புத சுந்தரிகள் வந்திருந்தனர். ஆனால் வாயைத் திறந்ததும், பாதி பேர் காலி! லாராவுக்கு ஆங்கில அறிவும் உச்சரிப்பும் குரல் ஏற்றத் தாழ்வும் அலாதியாக இருந்தன. அவர் வென்று வருவார் என்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டது" என்கிறார்கள் நிகழ்ச்சியைக் கண்ணாரக் கண்டவர்கள்.

● லாராவின் பெற்றோருடன், அவரது பாய் ஃப்ரண்ட் கெல்லி டோர்ஜியும் சைப்ரஸுக்குப் பயணித்திருந்தார். அவரும் ஒரு சூப்பர் மாடல். டெலிவிஷன் அறிவிப்பாளர். "லாராவின் உள்ளும் புறமும் இரண்டுமே அழகுதான்; நான் அவளுக்கேற்ற ராஜாவாக நிறைய உழைக்க வேண்டும்" என்கிறார் கெல்லி!

— ஜேயார்






# பெரிய மீனுக்குக் காத்திருக்கேன்!

**மே**ற்கு சைதாப்பேட்டையில் ஒரு மூலையில் இருக்கிற அன்னை வேளாங்கண்ணி பார்மசி கல்லூரி, தாற்காலிகமாக 'எக்ஸலன்ட் டுடோரியல் காலேஜ்' என்று புதுப்பெயர் சூட்டிக்கொண்டிருந்தது. டுடோரியல் கல்லூரியின் பிரின்ஸ்பாலாக டி.வி நியூஸ் வரதராஜன். அங்கே பாத்திமா பாபுவுக்கு புரொபசர் வேலை.

இதெல்லாம் எதற்காக?

சன் டி.வி.யில் ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கும் 'சீனியர் ஜூனியர்' தொடர் படப்பிடிப்புக்காகத்தான். ராம்ஜி, டெல்லி கணேஷ், அடடே மனோகர், வரதராஜன், வத்சலா ராஜகோபால், பாத்திமா பாபு ஆகியோருக்குப் பிரதான பாத்திரங்கள். வசனம் கோபு - பாபு; டைரக்‌ஷன் ராஜா.

கல்லூரிக் கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள பிரின்ஸ்பால் அறையிலிருந்து, கோட்டைக் கழற்றிக் கையில் போட்டுக்கொண்டு, கழுத்து 'டை'யை லூசாக்கிக் கொண்டு கேஷுவலாக வெளியில் வரும் வரதராஜனிடம், 'சார்' என்று கூப்பிட்டபடியே ஒருவர் வந்து ஏதோ பேச, ஓர் உதவி இயக்குனர், சைகை செய்தவுடன் 'நீங்க அப்புறம் வந்து என்னைப் பாருங்கள்' என்று சொல்லிவிட்டு, நடக்க ஆரம்பிக்கிறார் வரதராஜன்.

அதேசமயம் கேமிரா முதல் மாடியை நோக்கித் திரும்புகிறது. வகுப்புக்குள்ளிருந்து அவசரம் அவசரமாய் வெளியே வரும் பாத்திமா பாபு, மாணவர்களிடம் 'எக்ஸ்கியூஸ் மீ' என்றபடி அவர்களை விலக்கிக்கொண்டு வேகமாக ஓடி வருகிறார்.

கீழே படியிறங்கி வரவும், வரதராஜன் காரைத் திறந்துகொண்டு, உள்ளே உட்காரப் போகவும் சரியாக இருக்கிறது.

"சார்! சார்!" - மூச்சு இறைக்க வரதராஜனை அழைக்கிறார் பாத்திமா.

"என்ன இவ்வளவு பதற்றமா ஓடி வரீங்க?"

"ஒண்ணுமில்லை! ஒரு சின்ன ஆப்ளிகேஷன். தயவு செய்து மறுககாம நீங்க செய்யணும்."

"என்ன ஆப்ளிகேஷன்? உரிமையோடு, நீங்க இதைச் செய்து கொடுங்க என்று கேட்க வேண்டியதுதானே!"

டைரக்டர் கட் சொல்லவும், மொத்த யூனிட்டும் உணவு இடை வேளைக்காக பிரேக் ஆகிறது.



• ராஜா

**சா**ப்பிட்டபடியே டைரக்டர் ராஜா பேசினார்: "நான் சினிமா விலிருந்து, டீ.வி.க்கு வந்தவன். ஏ.வி.எம். எடுத்த நாலு படங்களை நான் இயக்கியிருக்கிறேன். டீ.வி.யில் நான் இயக்கிய முதல் தொடரே மெகா தொடர்தான். எனக்கு மட்டுமில்லை; தமிழ் தொலைக்காட்சி வரலாற்றிலேயே முதல் மெகா தொடர் அது. பெயர் - ரகுவம்சம்"

இப்போது, இவரது இரண்டு சீரியல்களும் வெகு பிரபலம். ('இப்படிக்குத் தென்றல்', 'சீனியர்- ஜூனியர்.')

"ஒரு சீரியல் என்றால் கதைதான் முக்கியம். அதை இஷ்டத்துக்கு இழுக்க முடியாது. அதனால்தான் நான் எந்தத் தொடர் ஆனாலும், முப்பது அல்லது நாற்பது வாரங்களில் முடித்து விடுகிறேன்" என்கிறார் ராஜா.

பாத்திமா பாபு, டீ.வி செய்தி வாசிப்பவராக அறிமுகமானவர் என்றாலும் இன்று டீ.வி. சீரியல்களிலும், சினிமாவிலும் நடித்துக் கலக்குகிறார்.

"செய்தி வாசிப்பதைவிட, நடிப்பதில்தான் சுவாரசியம். பலப்பல கேரக்டர்கள். வெவ்வேறு லொகேஷன்கள். புதுப்புது சக நடிக, நடிகையர். வெவ்வேறு இயக்குனர்கள் என்பதே இதற்குக் காரணம்" என்கிறார் பாத்திமா.

மீசையில் ஒட்டாமல் கூழையும் குடிக்கத் தெரிந்திருக்கிறது இவருக்கு.

காலையில் மட்டுமே செய்தி வாசிக்க ஒப்புக்கொள்கிறார். பிறகு நடிப்பு.

"உங்கள் வயதுக்கு மீறி அம்மா வேடங்களிலேயே நடிக்கிறீர்களே, இதில் வருத்தமில்லையா?" என்று கேட்டால், "இளம் வயதில், முதிய கேரக்டர்களில் நடிப்பது, வயதான பின் சின்ன வயது கேரக்டர்களில் நடித்து, பார்ப்பவர்களின் இன்டலுக்கு ஆளாவதைவிட பெட்டர் இல்லையா?" என்று கேட்டுவிட்டு ஒரு லாஜிக்கும் சொன்னார்.

"மீன் பிடிக்கப் போகிற போது, பெரிய மீன் சிக்க வேண்டும் என்பதுதான் ஆசை. அதுவரை சின்ன மீன்கள் தூண்டிலில் விழுந்தால் பொறுமை காப்பது தானே சரி! அது போலத் தான் சினிமாவில் என்றாவது ஒரு நாள் பெரிய மீனாய் வாய்ப்பு வரும் என்று நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது!"

**வ**ரதராஜன் நாடகங்களில் நடிக்கிறார்; சன் டீ.வி.யில் செய்தி படிக்கிறார்; வணக்கம் தமிழகத்தில் வருகிறார். பல டீ.வி தொடர்களிலும் நடிக்கிறார். சினிமாவும் உண்டு.

இவர் இத்தனையும் பண்ணிக் கொண்டிருப்பது அதிசயமில்லை. இன்னமும் தாம் பார்க்கும் வங்கி வேலையை விடாமல் இருக்கிறார் என்பதுதான் நியூஸ்!

இந்தச் சீரியலில் மெயின் ரோலில் நடிப்பவர் ராம்ஜி. சுமார் முன்னூறு படங்களில் உதவி நடன இயக்குனராகப் பணியாற்றியவர். இன்று சினிமாவில் டான்ஸ் ஆடக் கூப்பிடுகிறார்கள்; சின்ன ரோல்கள்தான் தருகிறார்கள். ஆனால் சின்னத் திரைக்காரர்கள் இவருக்கு பல அழுத்தமான கேரக்டர்களைத் தயங்காமல் கொடுக்கிறார்கள். இவரும் நன்றாகவே நடிக்கிறார். 'கையளவு மனசு', 'மர்மதேசம்' 'இப்படிக்குத் தென்றல்' போன்றவை இவர் நடித்த முக்கியமான சீரியல்கள்!

**சீ**னியர், ஜூனியர் கதை என்ன?

கட்டுப் பெட்டித்தனமாய் தன் ஒரே பிள்ளையை வளர்க்கும் அப்பா. அப்பாவின் கட்டுப்பாடுகளை வெறுக்கும் மகன். ஒரு கட்டத்தில் அப்பாவிடம் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விடுகிறான். சொந்தக் காலில் நிற்பதாகச் சவால் விட்டவன் என்னவாகிறான், தந்தை - மகன் இணைவது எப்படி என்பதை காமெடி கலந்து சொல்கிறது கதை!

ஸ்கிரிப்ட்: **கௌதம் ராம்**
கேமரா: **வெங்கடேஷ்**

● **சென்னைத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர்களுக்கான செலக்ஷன் நடைபெற்றது. ஏகப்பட்ட விண்ணப்பங்கள் வந்தாலும், கடைசியில் ஐந்தாறு பேர் கூடத் தேறவில்லையாம்.**

● **தலைப்பில் தமிழ் வார்த்தையே இல்லை என்று சன் டீ.வி நிர்வாகம் ஆட்சேபித்ததன் பேரில் கடைசியாய் ஒரு தமிழ் வார்த்தை (!) சேர்க்கப்பட்ட டீ.வி சீரியல் - 'பூம் பூம் ஷக்கலக்க அப்பு!'**



அருள்மிகு செல்வ விநாயகர் துணை

**27-A, 2–ஆவது மெயின் ரோடு,**
**கலைமகள் நகர், ஈக்காடுதாங்கல்,**
**சென்னை – 600 097.**

# அருள்மிகு செல்வ விநாயகர் நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்

விநாயகர் துதி

பிடியதனுரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலமுறை யிறையே - சம்பந்தர்

எந்நாட்டிலுமுயர் தென்னாடாம் செந்தமிழ் நாட்டின் தலைநகரமான தர்மமிகு சென்னையில், கலைமகள் நகர், 2ஆம் பிரதான சாலையில், அருள்மிகு செல்வ விநாயகப் பெருமானுக்கு மிகப் பெரிய செலவில் கர்பக்கிருஹம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் இவற்றுடன் கூடிய ஆலயம் அமைத்து, அதோடு அருள்மிகு சிவபெருமான் பார்வதி, முருகப் பெருமான், ஆஞ்சநேயர், துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, லக்ஷ்மிநரசிம்மர், சக்கரத்தாழ்வார், தட்சணாமூர்த்தி, நவக்கிரஹங்கள் ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனியாகவும், புதிய ஆலயங்கள் அமைத்து அழகுற வர்ணகலாபங்கள் செய்து ஐங்கரன் துணைகொண்டு நிகழும் ஸ்ரீ விக்ரமவருஷம் வைகாசி மாதம் 23 ஆம் தேதி (05–06–2000) திங்கட் கிழமை புனர்பூசம் நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 5:30க்கு மேல் 6:30க்குள் ரிஷப லக்னத்தில் நூதன ஆலய அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்ற படியால் பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்து அருள்மிகு செல்வ விநாயகர் மற்றும் அனைத்துத் தெய்வங்களின் அருள் பெற்று உய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். அன்பர்கள் அனைவரும் தம்மால் முடிந்த அளவு நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்து திருக்கோயில் பணி களைச் செவ்வனே செய்ய உதவுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

கோயில் திருப்பணிக்கு நன்கொடை வழங்க விரும்பும் அன்பர்கள் காசோலையாக '**கலைமகள் நகர் செல்வ விநாயகர் திருக்கோயில் டிரஸ்ட்**' என்ற பெயரில் எடுத்து மேற்கண்ட முகவரிக்கு அனுப்பியுதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
கலைமகள் நகர் செல்வ விநாயகர்
திருக்கோயில் நிர்மாணக் குழு.

# துணையொன்று

துர்வாசர் சபித்ததில் கிளம்பிய பூதம் அம்பரீஷனை நோக்கி வந்த போதும் அசையாது நின்றான் அவன். இப்படிப்பட்ட மகானிடத்தில் நான் அபசாரப்படும்படியாக ஆகிவிட்டதே என்று வருத்தத்துடன் நின்றான்.

பகவான் பார்த்தான்... அம்பரீஷனின் உயர்ந்த பக்திக்கு மெச்சி, அவன் கேட்காமலேயே ஒன்று கொடுத்து வைத்திருந்தான் பகவான்.

பக்தி என்றால் பிரகடனமாக இருக்கக் கூடாது. பல பேர் மெச்சிக் கொள்ளும்படியாக இருக்கக் கூடாது. ஏகாந்த பக்தியே பக்தியாகும். அப்படிப்பட்ட ஏகாந்த பக்தி கொண்டிருந்தான் அம்பரீஷன். அதனால்தான் பகவான் அம்பரீஷன் கேட்காமலே உதவிக்கு வந்தான். அம்பரீஷனிடத்தில் அவன் யாரை அனுப்பினான் என்று கேட்டால், தன்னுடைய பராக்கிரமத்தை எடுத்துக்காட்டக்கூடியவனான சுதர்சனனை அனுப்பினான்.

சு - தர்ஸனன் என்றாலே நல்ல மார்க்கத்தைக் காட்டக்கூடியவன் என்றுதான் பொருள்.

நல்ல மார்க்கம் எது...? விஷ்ணு மார்க்கமே நல்ல மார்க்கம்.

'அஞ்ஞான இருளில் நான் இருக்கிறேன். அதை மாற்றி எனக்கு கோடி சூர்ய சமப்ரபா - கோடி சூர்ய ஒளி பொருந்தியவனே, நீ வழிகாட்டு! எத்தனையோ ஜ்வாலா மாலைகளை அணிந்தவனே!' என்று ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்.

அப்படிப்பட்ட சுதர்ஸன ஆழ்வார், அம்பரீஷனின் உயர்ந்த ஆராதனைக் கிரமத்திலேயும் இருந்து கொண்டிருக்கிறான். அந்த சுதர்ஸனன் நேரே வந்து, அந்த பூதத்தை அப்படியே பொசுக்கி விட்டான்!

துர்வாசர் பார்த்துக் கொண்டேயிருக்கிறபோது, அப்படியே விட்டில் பூச்சி எப்படி விளக்கில் விழுந்து பஸ்பமாகுமோ அந்த மாதிரி பஸ்மமாகி விட்டது பூதம்.

துர்வாசரால் பிரயோகிக்கப்பட்ட பூதம் மாண்டு போய் விட்டது; பஸ்மமாய்ப் போய்விட்டது! அம்பரீஷன் கைகூப்பிக் கொண்டு நிற்கிறான். அந்த சுதர்ஸனர் என்ன பண்ணினார்...? துர்வாசர் பக்கமாகத் திரும்பினார்... நடுநடுங்கிப் போய் விட்டார் துர்வாசர். பூதத்துக்கு ஆன கதை நமக்கும் ஆகிவிடப் போகிறதே என்று ஓட ஆரம்பித்து விட்டார் அங்கேயிருந்து.

ஓடுகிறார், ஓடுகிறார், அப்படி ஒரு ஓட்டம்! எங்கே ஓடினாலும் சுதர்ஸனன் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறான்.

பிரும்ம லோகம் போனார் துர்வாசர். பிரும்மா பார்த்தார். 'என்னால் ஒன்றும் பண்ண முடியாது!' என்று சொல்லி விட்டார்.

அங்கேயிருந்து கைலாசம் - பரமசிவனிடத்திலே போனார். அவரும் ஒன்றும் பண்ண முடியாது என்று சொல்லி விட்டார். அங்கேயிருந்து வைகுண்டத்துக்குப் போனார். நாராயணன் - விஷ்ணுவிடத்தில் போய் நின்றார்... அவரும் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்!

அதற்கு மேலே எங்கே போவது? மூன்று பேருமல்லவா ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள்!


அப்போது பகவான் நாராயணன் வைகுண்டத்திலே பேசுகிறான் : "இப்படி அபசாரப்பட்டு வந்து நிற்கிறீர்களே... என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? எனக்கு சுவாதந்த்ரியம் கிடையாதே! நான் பக்தர்களுக்குப் பராதீனன். அவர்கள் எட்டி இரண்டு கை நீட்டினால் என்னைக் கட்டிப் போட்டு விடுகிறார்கள். அதிலிருந்து என்னால் மீள முடியாது. உமக்கு ஓர் உபாயம் சொல்கிறேன் கேட்கிறீரா...?"

"என்ன உபாயம்?" என்றார் துர்வாசர்.

"அம்பரீஷ பதமேவ!" என்றான் பகவான்!

"அந்த அம்பரீஷனுடைய திருவடியையே போய்ப்

**முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்ய**



பிடித்துக் கொள்; உனக்கு க்ஷேமம் ஏற்படும்" என்றான்.

அதற்கு மேல் துர்வாசர் சொன்னார் : "அப்படியே நாராயணா! நான் போய் அவன் திருவடியைப் பிடித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த சுதர்ஸனன் ஹிம்சை பண்ணுகிறது. துரத்திக் கொண்டே வருகிறது. அதைக் கொஞ்சம் நீ உன் கையிலே வாங்கிக் கொண்டுவிடேன். நான் புறப்பட்டுப் போய் விடுகிறேன்..."

உடனே பகவான் என்ன சொல்கிறான்... "அந்த சுதர்ஸனனை ஏற்கெனவே நான் அம்பரீஷனுக்குக் கொடுத்து விட்டேன். ஆதலால் அவன் சொன்னால்தான் அது கேட்கும். நான் சொன்னால் கேட்காது..." என்றான்.

ஆதலால் வேறு வழியில்லாமல், நேரே போய் அம்பரீஷனின் திருவடியிலே விழுந்தார் துர்வாசர்!

அவர் ஊரெல்லாம் சுற்றி விட்டு அங்கே போய்ச் சேர ஒரு வருஷ காலம் ஆகி விட்டது. அந்த ஒரு வருஷ காலமும் அவன் - அம்பரீஷன் - சாப்பிடவேயில்லை! வெறும் தீர்த்தத்தை மாத்திரம் பிராசனம் பண்ணிக் கொண்டு இருந்து விட்டான். இப்படி துவாதசி அன்றைக்கு ஒரு மகான் வந்து அபசாரப் படும்படி ஆகி விட்டதே என்று ரொம்ப வருத்தம் அடைந்து கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறான்.

அப்போது துர்வாசர் வந்து திருவடியிலே விழுகிறார்! அம்பரீஷனுக்கு ரொம்ப வெட்கமாகி விட்டது. நடுநடுங்கிப் போய் விட்டான். சுதர்ஸனரைப் பார்த்து, "ஹே சுதர்ஸனா! இந்த பிராம்மணோத்தமருக்கு நீ மங்களத்தை உண்டு பண்ண வேண்டும்" என்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டான். அப்புறம்தான் சுதர்ஸனன் சாம்யமானான்.

இந்தச் சரித்திரத்தை நாம் பார்த்தோமானால், பாகவத

அபசாரப்பட்டார் துர்வாசர். அவர் த்ரிமூர்த்திகளிடத்திலேயே போன போதும் அவருக்கு மன்னிப்புக் கிடைக்க வில்லையே! யாரிடத்திலே அவர் அபசாரப்பட்டாரோ, அங்கே வந்து ஆச்ரயித்த பிற்பாடுதான் அவருக்கு விமுக்தி ஏற்பட்டது.

ஆகையினாலே, பகவத் அபசாரப்பட் டாலும் ஒரு நாளும் பாகவத அபசாரப் படக்கூடாது. பாகவதோத்தமர்கள் பகவானைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் ஆனதனாலே, பகவானையே தாங்கக் கூடியவர்கள் ஆனதனாலே, அவர்களே உயர்ந்தவர்கள்.

இதை சுவாமி தேசிகன் இன்னொரு இடத்திலேயும் சொல்கிறார். பாதுகா சஹஸ்ரம் என்ற கிரந்தம் ஒரே ராத்திரி யில் அவர் இயற்றியது. அதிலே சொல் கிறார் – 32 பத்ததிகளைச் சொல்கிறார்.

பத்ததி என்றால் 'அடி வைப்பு' என்று அர்த்தம். ஒவ்வொரு பத்ததியிலேயும் ஒரு பிரும்ம வித்யையை விவரிக்கிறார். இப்படி 32 பிரும்ம வித்யையும் பாதுகா சஹஸ்ரத்திலே வருகின்றன. 1008 சுலோ கங்களில் அவை சொல்லப்பட்டிருக் கின்றன. அவ்வளவும் ஆச்சர்யமாக ஒரு ராத்திரியிலே, ஒரு யாமத்திலே – மூன்று மணி காலத்திலே எழுதியிருக்கிறார் அவர்.

அதிலே என்ன சொல்கிறார்... எல்லா வற்றையும் பகவான்தான் தாங்குகிறான் என்கிறார். சமஸ்தத்தையும் தன்னுடைய உதர பந்தத்திலே அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறான் பரமாத்மா. அப் படிப்பட்ட பரமாத்மா எம்பெருமான் எங்கே நின்று கொண்டிருக்கிறான்? எதன் மீது நிற்கிறான்...?

பாதுகைகள் மீது நிற்கிறான்.

பகவான் எல்லாவற்றையும் தாங்கு கிறான். அந்த பகவானையே பாதுகைகள் தாங்குகின்றன!

'விசித்ர ஜகதாதாரன்' என்று அவனைச் சொல்கிறார் சுவாமி தேசிகன். – விசித்திரமான ஜகத்துக்கு ஆதாரம் அவன் என்கிறார்.

ஆதாரன் என்று சொன்னால் போதாதா...? விசித்திரன் என்று ஏன் சொல்ல வேண்டும்? என்று கேட்டால், அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது.

அது என்ன காரணம்...?

## அருள்வாக்கு


பழைய காலத்தில் தர்மசாஸனங்களெல்லாம் கோயிற் சுவர்களில் கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றன. தர்மங்களைப் பதிவு செய்யும் ஸப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் பழைய நாளில் கோயில்தான். திருவாங்கூர் ஸம்ஸ்தானத்து ராஜ்யாதிகாரிகளுள், திருமந்திர ஓலை என்பவன் ஓர் உத்தியோகஸ்தன். ஸமீப காலம் வரையில் அந்த ராஜ்யத்தில் இந்த உத்யோகம் இருந்தது. பூர்வத்தில் தமிழ்நாட்டில் எல்லா அரசர்களிடமும் இப்படியொரு அதிகாரி இருந்தான். இந்தக் காலத்தில், 'பிரைவேட் ஸெகரட்ரீ' என்று சொல்கிறார்களே, அந்த மாதிரி, அவன், அரசன் எது சொன்னாலும் அதை எழுதிக் கொள்ள வேண்டும். பின்பு அதை யார் யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அந்தக் காலத்தில் யார் எந்தத் தர்மம் பண்ணினாலும்,

*ஆல மாமரத்தின் இலை மேல் ஒரு பாலகனாய்*
*ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான*
*கோலமா மணி – ஆரமும் முத்துத்*
*தாமமும் முடிவு இல்லாது ஓர்எழில்*
*நீலமேனி ஐயோ! நிறைகொண்டது என் நெஞ்சினையே*

'வடபத்ர சாயி' என்று பகவானுக்குப் பெயர். ஆல இளந் தளிரிலே பிரளய பயோதியிலே – பிரளய காலத்திலே, ஜலத்திலே ஓர் இளந்தளிரிலே பகவான் படுத்துக் கொண்டிருக்கிறான். விசித்ர ஜகதாதாரன் என்பது இப்போதுதான் தெரிகிறது.

அவன் ஆலிலையிலே படுத்திருக்கிற காட்சியை மார்க்கண்டேய மஹரிஷி பார்க்கிறார். பார்த்து, சேவித்துப் பல சுலோகங்களால் தியானம் பண்ணுகிறார்.

ஆலமாமரத்தின் தளிரிலே எப்படிப் பட்டவன் படுத்துக் கொண்டிருக் கிறான்...? சமஸ்தத்தையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கிற ஒரு சின்ன குழந்தை படுத்துக் கொண்டிருக்கிறது.



அதை மஹாராஜாவுக்குத் தெரிவிக்க வேண்டும். அவன் அதை ஒத்துக்கொண்டு ஆக்ஞை பண்ணுவான். அந்த ஆக்ஞையைத் திருமந்திர ஓலைக்காரன் எழுதி அனுப்புவான். அப்படி எழுதிக் கடைசியில், 'கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவதாகவும்' என்று எழுதுவான். அந்த ஆக்ஞை எந்த ஊரில் தர்மம் செய்யப்படுகிறதோ அந்த ஊர் ஸபையாருக்கு அனுப்பப்படும். அவர்கள் அதைக் கோயிற் சுவரில் வெட்டச் செய்வார்கள். இதுதான் 'கல்லில் வெட்டிக் கொள்வது' என்பது. அநேகக் கோயில்களிலுள்ள சிலா சாஸனங்கள் இவைதான்.

'செம்பில் வெட்டிக் கொள்வது' என்பது தாமிர சாஸனமாக செப்பேடுகளில் எழுதி, ஒரு ஏட்டுக்கு மேல் போனால் ஓட்டை பண்ணி வளையம் போட்டுக் கோத்து வைப்பதாகும். இதற்கும் உள்ளூர் ஸபையார் அங்கீகாரம் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட செப்பேடுகளும் கோவில்களிலேயே பூமிக்கு அடியிலுள்ள ''க்ஷேமம்'' என்கிற (க்ஷேமம் என்றால் பாதுகாப்பு என்றுதானே அர்த்தம்?) இடத்தில் வைக்கப்படும். தேச வாழ்வே ஈச்வரன் கையில் ஒப்பிக்கப்பட்டு, ஆலயம் என்பதே ஒரு நாட்டின் உயிர் நிலையாகக் கருதப்பட்டு வந்ததால், இப்படி அதுவே ரிஜிஸ்திரார் ஆபீஸ், எபிக்ராஃபி ஆபீஸ் எல்லாமாக இருந்தது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

பாலம் முகுந்தம்!

இங்கே ஆதாரம் யார்...? பகவான். சமஸ்தத்தையும் தாங்கக்கூடியவன் அவன். அவன் தன்னை எப்படிக் காட்டிக் கொண்டிருக்கிறான்...? இளம் தளிரிலே படுத்துக் கொண்டிருப்பவனாக.

'பகவானை இளம் தளிர் தாங்குகிறதா? இளம் தளிரை பகவான் தாங்குகிறானா...?' என்று இதைப் பார்த்து மார்க்கண்டேயர் வியக்கிறார். அந்த இளந்தளிரையும் தாங்கக்கூடியவன் அவன்தான். இவ்வளவு பளுவுடையவனான எம்பெருமானை ஓர் இளந்தளிர் தாங்க முடியுமா? ஆகையினால் அதையும் தாங்கிக்கொண்டு, 'சர்வத்துக்கும் ஆதார பூதனாய் இருக்கிறேன்' என்பதைக் காட்டித் தருகிறான் பரமாத்மா.

அதனால்தான், விசித்ர ஜகதோத்தாரனான பரமாத்மா விஷ்ணுவானவன் பாதுகைகளின் மேல் நிற்கிறான். இந்தப் பாதுகைகள் பகவானைக் காட்டிலும் உயர்ந்தவை.

அவனைக் காட்டிலும் உயர்ந்தது அவன் திருவடி. அவன் திருவடியைக் காட்டிலும் உயர்ந்தது அவன் திருவடி மூடிய பாதுகைகள்.

அதனால், ராமாவதாரத்திலே யாருக்கு முதலில் பட்டாபிஷேகம் பண்ணி வைத்தான் பாருங்கள்... தன் திருவடியைத் தாங்கக் கூடியதான பாதுகைகளுக்குத்தான் பட்டா பிஷேகம் பண்ணி வைத்தான். அதுதான் முதன் முதலில் நடந்தது.

தன் பட்டாபிஷேகத்துக்கு ஒரு தடை விதித்துக்கொண்டு தன் திருவடியையே ஆச்ரயிக்கும்படியான பாதுகைக் கல்லவோ பட்டாபிஷேகத்தைப் பண்ணி வைத்தான்! அப்புறம் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கெல்லாம், அடிபணிந்தவர்களுக்கெல்லாம் பட்டாபிஷேகம் - சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் - விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம். அதற்கப்புறம் கடைசியிலேதான் தான் பண்ணிக் கொண்டான்.

ஆகையினால், தன் திருவடியை ஆச்ரயிப்பவர்களுக்கு உயர்ந்த நிலையை அவன் உண்டுபண்ணுகிறான் என்பது பிரமாணமாகிறதல்லவா!

(தொடரும்)

# இங்கே படித்தால் வேலை நிச்சயம்!

"இந்த கோர்ஸ் முடிச்சதும் உடனே வேலை கிடைக்குது. ஆனால் நிறைய பேர் படிக்க வர்றதில்லே! டிகிரி டிப்ளோமான்னு வருஷத்தை வீணாக்கிட்டு, வேலை கிடைக்கலேன்னா எப்படி?" என்கிறார், சென்னை கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஏடிடிசி (அப்பேரல் டிரைனிங் அண்ட் டிசைன் சென்டர்) பயிற்சி மையத்தின் இணை இயக்குனரான நாகராஜன்.

வேலை இல்லாத் திண்டாட்டம் இந்தியாவில் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு, டங்கு டங்கு என்று ஆடுவதாக அல்லவா எல்லோரும் கேள்விப்படுகிறோம்? படித்து முடித்த கையோடு வேலை என்றால்...! ஆச்சர்யத்தில் யாருக்குதான் துள்ளிக் குதிக்கத் தோன்றாது?

"மனிதனின் அடிப்படைத் தேவைகளில், உணவுக்கும் உடைக்கும்தான் முதலிடம். இப்போதெல்லாம் டைலரிடம் கொடுத்து தைத்துப் போடும் கலாசாரம் கட்டெறும்பு போலத் தேய்ந்து போய்விட்டது. ரெடிமேட் ஆடைகள் தான் நிலையாக ஆட்சி நடத்துகின்றன. உள்நாட்டுத் தேவை ஒருபுறம் என்றால், தாராளமய பொருளாதாரக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்ட பிறகு ஜவுளி ஏற்றுமதி மூலம் பதினான்கு சதவீத அந்நியச் செலாவணி இந்தியாவுக்குக் கிடைக்கிறது. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால், கடந்த ஆண்டு இந்தியா ஏற்றுமதி செய்த ஜவுளிகளின் மதிப்பு நாற்பத்தையாயிரம் கோடி ரூபாய்! இதில் ரெடிமேட் ஆடைகள் மட்டும் இருபதாயிரத்து எண்ணூற்று முப்பத்துநாலு கோடி ரூபாய். ஜவுளி ஏற்றுமதியில் பாதியிடத்தை ஆடைகள் பிடித்துக் கொண்டு விட்டன" என்ற காஸ்ட்லி தகவல் தந்தவரிடம், 'இந்த அளவுக்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி பெருக அடிப்படைக் காரணம் தாராளமயம் மட்டும்தானா?' என்றோம்.

"காட் (GATT) ஒப்பந்தப்படி, உலகச் சந்தையில் ஜவுளி மற்றும் ஆடைகள் ஏற்றுமதி, மல்டி ஃபைபர் அரேஞ்ச்மெண்ட் (MFA) என்ற முறையால் கட்டுப்படுத்தப்படுகிறது. அதாவது அமெரிக்கா, கனடா, நார்வே, ஆஸ்திரியா மற்றும் பின்லாந்து போன்ற பணம் படைத்த முதல் உலக நாடுகளோடு இந்தியா இருதரப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு நாட்டுக்கு ஒரு குறிப்பிட்ட ஆடையை எந்த அளவு ஏற்றுமதி செய்யலாம் என்று முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுகிறது. இதை 'கோட்டாமுறை' என்று சொல்லுகிறோம். இந்தக் கட்டுப்பாடுகளின் கீழ் வராத ஆயத்த ஆடைகளை, எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி, வெளிநாட்டுக் கொள்முதல் நிறுவனங்களிடம் தேவைக்கு ஏற்ப எவ்வளவு வேண்டுமானாலும் அனுப்பலாம்.

இந்த முறை வந்த பிறகு, இந்தியாவில் ஆயத்த ஆடை தயாரிப்பு உள்நாட்டு விலைவாசி மாதிரி ரெக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்து விட்டது. 'காட்' ஒப்பந்தப்படி கோட்டா முறை வரும் 2005-ல் முழுவதுமாக விலக்கப்பட்டு விடும். அப்போது எந்த நாட்டுக்கும், எந்தத் தயாரிப்பாளரும், எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்யலாம். அப்போது எந்த நாட்டு உடைகளில் தரம் அதிகமாகவும், விலை குறைவாகவும் உள்ளதோ அவர்களுக்குக் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டோகொட்டென்று கொட்டப் போவது உறுதி! மற்ற நாடுகளின் ஆடைகளுடன் நமது ஆடைகளை ஒப்பிடும்போது தரம் உயர்வாக இருக்க வேண்டும். உலகத் தரத்துடன் அவர்கள் கேட்கும் காலத்திற்குள் ஏற்றுமதி செய்வதற்கு ஒரே வழி... ஆயத்த ஆடைகள் தயாரிப்பில் நவீன இயந்திரங்களைப் புகுத்தி, நவீன



பயிற்சியளித்து பணியாளர்களை உருவாக்க வேண்டும். இதை மனத்தில் கொண்டு, மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில், இந்தியாவில் எட்டு முக்கிய நகரங்களில் 'தி அப்பேரல் டிரைனிங் அண்ட் டிசைன் சென்டர்' என்ற அதிநவீனப் பயிற்சி மையங்களை நிறுவியுள்ளது. உலகத் தரமான பிராக்டிக்கல் பயிற்சியை வழங்கி மாணவர்களுக்கு வேலை பெற்றுத் தரும் சேவையில் ஏ.டி.டி.சி ஈடுபட்டுள்ளது'' என்கிறார்.


• பாலசுப்ரமணியன்


• நாகராஜன்

"சென்னை மையத்தில் டிப்ளமோ இன் அப்பேரல் மேனுபேக்சரிங் டெக்னாலஜி, டிப்ளமா இன் ஃபேஷன் கோஆர்டிநேஷன் அண்டு சேம்பிளிங், ஆகிய இரண்டும் ஒரு வருட கோர்ஸ்கள். இதற்குப் பயிற்சிக் கட்டணம் ரூபாய் பதினைந்தாயிரம். மட்டுமே. இந்த இரண்டு கோர்ஸ்களையும் இங்கு படித்துவிட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சொந்தமாக கார்மெண்ட் யூனிட்களைத் தொடங்கி தொழிலதிபர்களாகியிருக்கிறார்கள். கேம்பஸ் இண்டர்வியூ மூலம் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் பல நிறுவனங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். புரொடக்ஷன் சூப்ரவைசர் அண்ட் குவாலிட்டி கண்ட்ரோலர், பேட்டன் கட்டிங் மாஸ்டர் ஆகிய ஆறுமாத கோர்ஸ்களும் உண்டு. உலக வரைபடத்தில் உள்ள அத்தனை நாடுகளின் கலாசார ஆடைகள், தற்போது பிரபலமாகி உள்ள ஆடைகள் ஆகியவற்றைப் பற்றிப் பாடங்கள் நடத்துகிறோம். ஒவ்வொரு வருடமும் பாடத்திட்டம் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருப்பது முக்கியமான அம்சம். நவீன இயந்திரங்கள், பயிற்சிக் கருவிகள் மூலம் பயிற்சி அளிப்பதோடு, மாஸ் புரொடக்ஷன் எனப்படும் அதிக அளவில் ஆடைகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் தொழிற்சாலைகளிலேயே செயல்முறை பயிற்சி அளிக்கிறோம். பயிற்சிக்குத் தேவையான பொருட்களை நாங்களே தருகிறோம். அரசு மானிய அடிப்படையில் ஒவ்வொரு மாணவருக்கும் எட்டாயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை அரசே செலவு செய்கிறது. தமிழ், ஆங்கிலம் இரண்டையும் பயிற்சி மொழியாகப் பயன்படுத்தும் எங்கள் மையத்தில் எல்லா கோர்ஸ்களையும் பகுதி நேரமாகப் படிக்கவும் வசதி செய்திருக்கிறோம். வரும் ஜூன் மாதம் ஐந்தாவது ஆண்டு மாணவர் சேர்க்கை தொடங்குகிறது'' என்றார் நிறுவனத்தின் இணைப் பதிவாளர் பாலசுப்ரமண்யம்.

— லியோ

படங்கள்: வெங்கடேஷ்


• பயிற்சி வகுப்பில்...

"எங்க ஊர்லே கோவில் திருவிழா, கூத்து, கரகாட்டம்னு எதுவும் கொண்டாடறதில்லை. நாங்க கொண்டாடற ஒரே திருவிழா, எங்க ஊரு பள்ளிக்கூடத்து ஆண்டு விழாதான்! கல்வித் திருவிழா..." என்று விகம்பூர் கிராமத்துக்காரர் ராமச்சந்திரன் சொன்னபோது ஆச்சர்யமாக இருந்தது.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானைக்குத் தெற்கே பத்து கி.மீ. தொலைவில் உள்ளது விகம்பூர். வானம் பார்த்த பூமியில் வயல்வெளிகளில் வாழை மரங்கள் கூட்டம் கூட்டமாக நின்று ஒருபுறம் வரவேற்க, மறுபுறம் வைக்கோல் படப்புகள் கோட்டைச் சுவர்களாக அரண் அமைத்திருந்தன.

எப்போதாவது ஊரின் எல்லையைத் தொட்டுச் செல்லும் இரண்டொரு பேருந்துகள். சுமார் 1200 மக்கள் வசிக்கும் ஊரின் நடுவே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. ஐந்து ஆசிரியர்கள், 213 பள்ளிக் குழந்தைகள்.

''நான் 1963ஆம் ஆண்டு இந்தப் பள்ளிக்குத் தலைமையாசிரியராக வந்தேன். இந்த ஊர்லே வேலை பார்த்தா அடுத்த ஊர்ல வேலை பார்க்க யாருக்கும் மனசு வராது! 1963ல் நூறு ரூபாய் சம்பளம். அப்பவே இந்தக் கிராமத்து மக்கள் என் குடும்பத்துக்குத் தேவையான அரிசி, பருப்பு, மிளகாய் கொடுத்திடுவாங்க... வாங்குற சம்பளத்துக்கு செலவே இருக்காது!'' என்றார் தலைமையாசிரியர் மாடசாமி.

இப்போதும் இவ்வழக்கம் நடைமுறையில் இருக்கிறதா என்று ஆவலுடன் கேட்டபோது 'இல்லை' என்று தெரிவித்தார்.

# கல்வித் திருவிழா


• விழாக் கோலத்தில் விகம்பூர்!


• ஊருக்கு ஒரே சமைய


• ராமச்சந்திரன் • திருநாவுக்கரசு

அதற்கு கிராமத்தைச் சேர்ந்தவர்கள், ''ஆசிரியர்கள் எங்கள் ஊரிலேயே தங்கினா செய்து கொடுப்போம். ஆனால் இப்போ யாரும் தங்குறதில்லை''என்று காரணம் தெரிவித்தார்கள்.

"மாதத்தில் ஏதாவது ஒரு சனிக்கிழமை ஊர்க்கூட்டம் போடுவாங்க. எங்களையும் கூப்பிடுவாங்க. பிள்ளைங்க எப்படிப் படிக்கிறாங்க, பள்ளிக்கு என்ன

தேவைன்னு கேட்பாங்க. சின்னச் சின்ன தேவைகளை அடுத்தக் கூட்டத்துக்குள்ளேயே நிறைவேத்திடுவாங்க.

"கோவில் திருவிழா கொண்டாட மாட்டாங்க. ஆண்டின் கடைசியில் நாங்க ஒருநாள் சொல்லுவோம். அந்தத் தேதியில் கல்வித் திருவிழா நடத்த ஊர்க் கூட்டம் போட்டு, நன்கொடைகள் வசூல் செய்து விழா எடுப்பாங்க! அன்று மட்டும் ஊருக்கே சாப்பாடு பள்ளியிலே தயாராகும்!'' என்றார் மாடசாமி.

"எங்க ஊர்லே உள்ள அத்தனை குடும்பங்களும் சைவம்தான்! இப்ப உள்ள தலைமுறையிலே ஒன்றிரண்டு பேரு அசைவம் சாப்பிடுறவங்க, ஊருக்கு வெளியிலே போயி சமைச்சு சாப்பிட்டு விட்டு அப்புறம் ஊருக்குள்ளே வருவாங்க. இதற்காகவே எங்க ஊர்லே கோழி, ஆடு வளர்க்கறதில்லை. விவசாயத்துக்காக மாடு மட்டும்தான் வளர்க்கிறோம்'' என்றார் திருநாவுக்கரசு என்கிற கிராமவாசி.

"அரசியல் கட்சிக்கரை வேட்டி கட்டுறதில்லை. அரசியல் கட்சி கொடிக் கம்பங்களும் கிடையாது. இங்கே பறக்கிற ஒரே கொடி தேசியக் கொடி மட்டும்தான்! தேர்தல் நேரத்திலே ஒரு பத்து நாளைக்கு அதுவும் ஒரு சடங்கு மாதிரி அரசியலில் பங்கேற்றுக் கொண்டு அவரவருக்குப் பிடித்தவருக்கு வோட்டுப் போடுவோம். அப்புறம் அடுத்தத் தேர்தலின் போதுதான் அரசியல்'' என்று ராமச்சந்திரன் சொன்னபோது வியப்பாக இருந்தது.

"நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற நான் முயற்சி எடுத்திருக்கிறேன். 250 பிள்ளைகள் இருந்தால்தான் உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி கிடைக்கும்னு அரசாங்கத்திலே சொல்றாங்க. 213 பிள்ளைங்க படிக்கிறாங்க. இந்த வருஷம் பிள்ளைகளைக் கூடுதலாகச் சேர்க்க முயற்சி எடுக்கணும்....'' என்று சாதிக்கத் துடிக்கும் பஞ்சாயத்தின் தலைவர் பி. ஜெயராணி உயர்நிலைப் பள்ளியாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார்.



• மாடசாமி





• விகம்பூர் பள்ளி



• ஜெயராணி

"கல்வித் திருவிழா'' அன்று பள்ளியின் புதிய கூடுதல் கட்டடத்தைத் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ராமசந்திரன் வந்து போனது தங்கள் ஊருக்கு ஜனாதிபதியே வந்து விட்டுப் போன மகிழ்ச்சி மக்களுக்கு!

பதினோரு ஆண்டுகளாக நடக்கும் இவ்விழாவில் திருவாடானை தொகுதி எம்.எல்.ஏ. இல்லாமல் விழா நடந்ததில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக எம்.எல்.ஏ. கே.ஆர். ராமசாமி கலந்து கொள்ள விருப்பமில்லாமல் தட்டிக் கழித்ததுதான் தாங்க முடியாத வருத்தம், விகம்பூர் மக்களுக்கு!

**— கி. சிங்காரவடிவேல்**

## தங்கச்சங்கிலி பரிசு!

**இத் தொடர்கதையை வாரம் ஒரு எழுத்தாளர் என்று பத்து எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். கவனமாகப் படித்து வாருங்கள். கடைசி வாரத்தில் ஒரு கேள்வி உங்களுக்காகவே தயாராக இருக்கிறது. சரியாக பதிலளிப்பவருக்குப் பரிசாகக் காத்திருக்கிறது தங்கச் சங்கிலி! பலர் சரியாக எழுதியிருந்தால் குலுக்கலில் ஒருவர்! பரிசளிப்பு விஷயத்தில் ஆசிரியர் தீர்ப்பே இறுதி.**

"கோவிந்து... நீயா... எப்படிரா இப்படி மாறிட்டே?"

அசோக் கட்டிலை விட்டுக் கீழிறங்காமல் பிரமிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மரியாதைக்குரிய 'ஜி' இன்று அசோக்கிற்கு அவமரியாதை செய்து கொண்டிருந்தது.

முண்டா பனியனில் 'G' என்று எம்ப்ராய்டரி செய்தது பளிச்சென்று தெரிய, கோவிந்து டூத் பிரஷ்ஷில் பெப்ஸொடெண்ட் - ஜி பேஸ்ட் வைத்தபடி வேறு திசை பார்த்துக் கொண்டிருந்தான்.

கட்டில் விரிப்பில், தலையணை உறையில், புத்தக அட்டையில், சுவரின் ஒரு பகுதியில்... அறையைப் பாதியாய்ப் பிரித்த 'G'.

எப்போ, எப்போ என்று இதயம் லப்டப்பியது.

லைன் ஆஃப் கண்ட்ரோல் போல கோவிந்து அறையைப் பங்கிடு செய்திருந்த விதம் அசோக்கை மிரட்டியது.

இன்னொரு உசுரு இருந்தா உனக்குத் தரேன்னு சொன்னவனா இப்படி மாறிப் போனான்?

# 7

ஏழு ஸ்வரங்களில் ஆரோஹணம் மட்டும் வைத்துப் பாடுவது கிடக்கட்டும். 'அன்புச் செல்வி' என்கிற ஒரே ஸ்வரத்தில் இத்தனை நாள் மனக ஆரோகணித்துக் கிடந்ததில் அறையும், கோவிந்தும் பதியாமல் போனதா!

இருட்டிய பிறகு அறைக்குத் திரும்பி விளக்கணைத்த பின்னும் மனசுக்குள் பிரகாசிக்கிற அன்புச் செல்வி.

போர்த்திக் கொண்டால்... அன்பு.
புக்கைப் பிரித்தால்... அன்பு.
மாமரக் குயில் கூவினால்... அன்பு.
வார்டன் கூப்பிட்டாலும்... அன்பு.

இல்லை. இந்தத் தடவை வார்டன் குரலில் அன்பு இல்லை.

'வாப்பா' என்று வாய் நிறைய அழைக்கிற மனுஷன் 'வா' என்று இறுக்கிய பற்களுக்கிடையே ஏன் உறுமுகிறார்?

"ஸார்..."

அறைக் கதவை மூடி ரெட்டைத் தாழ்ப்பாள் போட்டவர் பிரசவ வார்டு முன் கணவன் நடப்பது போல எதற்கு நடக்கிறார்?

"எ..என்ன ஸார். ஏதாச்சும் பிராப்ளம்?"

"நீதான் பிராப்ளம்."

ஹா.... அசோக்கின் மனசில் வேண்டாத கவலை, பயம், எல்லா கடவுளரையும் வேண்டுகிற அளவு வந்து விட்டது.

"எ... என்ன ஸார்?"

"நீ காதலிக்கிறியா?"


"உங்களையா... ஹி... ஹி.. ஆமாம் ஸார். பாசத்துக்கும் லவ்வுன்னுதானே பேரு?"

# ஜிகி.

"முட்டாள்... விளையாடாதே. ஆர் யூ இன் லவ் வித் எ கேர்ள்?"

எப்படித் தெரிந்தது? இது என்ன ஆசிரமத்தில் போலிச் சாமியார் சமாசாரம் போல, குழிவெட்ட எலும்புக்கூடு கிளம்புகிறது?

"ஸே... யெஸ் ஆர் நோ!" என்று அப்ஜெக்டிவ் டைப் கொஸ்சின் பேப்பர் போல மீண்டும் உறுமினார்.


பா. ராகவன்

"யெஸ் ஸார்... நோ ஸார்."

வார்டன் குளோஸ் அப்பில் வந்து அவன் மூக்கிற்கும் அவர் மூக்கிற்கும் மூச்சு முட்டுகிற தூரத்தில் நின்று பார்வை பதறுகிற மாதிரி பார்த்தார்.

"அன்புச்செல்வியை நீ லவ் பண்றியா?"

"ஸா...ர்" அசோக் திடீர் ஜுரம் வந்தவன் போல நடுங்கினான்.

"உன்னால நம்ம காலேஜுக்குப் புகழ் வரும்னு நம்பிக்கிட்டிருந்தேன். இந்தக் காதல்... கடாரங்காய் இதுல நீ மாட்ட மாட்டேன்னு!" (வார்டனுக்கு கத்தரிக்காய் அலர்ஜி.)

"இல்லே ஸார். அந்த மாதிரி எதுவும்..."

அசோக் சட்டென்று சக்திமான் போல சர்வ சக்திகளையும் திரட்டிக் குரலில் கொண்டு வந்து அழுத்தமான டெசிபலில் சொல்ல, வார்டன் பிரகாசமானார்.

"யூ ஆர் மை பாய். எனக்கு நல்லாத் தெரியும். அதனாலதான் அழிச்சுட்டேன்" என்றார் கள்ளச் சாராய பேரலை அழித்த குரலில்.

அழிச்சுட்டாரா! யாரை? அன்பையா! அய்யோ, அன்புச்செல்வி!

"மிரளாதே. உன்னையும் அன்புச்செல்வியையும் சம்பந்தப்படுத்தி பாத்ரூம் சுவத்துல எழுதியிருந்துச்சு. நல்ல நேரம். நான் பார்த்துட்டேன். டபுள் கோட்டிங் கொடுத்து அழிச்சுட்டேன்."

தோளில் இரும்புக் கரத்தால் தட்டினார்.

"போ. படிப்புத்தான் முக்கியம். காதல் - கீதல் பண்ணாதே."

வார்டனுக்குத் தன் காதல் ஏமாற்றம் ஆனதில் வருத்தம். அதுவும் அவருடையது ஒருதலைக் காதல். கடைசி வரை இவர் காதலித்ததை அந்தப் பெண் அறியவே இல்லை. குமரிமுத்து போல இவர் காதல் பார்வை வீசிய போதெல்லாம், வேறு திசை பார்த்ததாய்ப் புரிந்து கொண்டு, வேறு நபரைத் தேர்ந்தெடுத்து விட்டாள்.

அன்று தீர்மானித்தது. எவனுக்கும் காதல் கூடாது.

**ப**ழைய நினைவுகளிலிருந்து வார்டன் விடுபட்டு வேண்ட் ஆகிற வரை அசோக் அவர் 'முகவரி'களைப் பார்த்துக் கொண்டிருந்தான். நெற்றியில் எப்போதும் இருக்கிற மூன்று கோடுகள் வந்ததும் அவர் கை பற்றி பிராமிஸ் செய்தான்.

"படிப்புத்தான் ஸார். உங்க நம்பிக்கைக்குப் பெரிய சைஸ் பாத்திரமா நானிருப்பேன் ஸார்."

இந்தக் காதிலிருந்து அந்தக் காது வரை சிரித்து அறைக் கதவைத் திறந்து ஒரு உறுமலோடு வெளியே விரட்டினார்.

**மு**கம் ஜிவ்வென்று சிவந்து போனது. அன்புச்செல்வியைப் பார்த்த பின்புங்கூடத் தணியவில்லை.

சந்தேகம் வந்து அன்பு ஸ்ட்ராவை விட்டு உதட்டை விலக்கினாள்.

"நீங்க குடிக்கவே இல்லியா?"

அசோக் அப்படியே எக்ஸ்பிரஷன் இல்லாமல் ஆர்ட் பிலிம் ஆசாமி போல அமர்ந்திருந்தான்.

"அ... சோக்" என்று அவள் கத்தியதில் கடைடியூப் லைட்டின் சோக் ரிப்பேர் ஆனது.

"அன்பு... வசமா மாட்டிக்கிட்டேன்."



**அ**ண்மையில், ராஜ்ய சபையில் தூர்தர்ஷனுக்குச் செலுத்த வேண்டிய பணத்தை ஒழுங்காகச் செலுத்தாமல், ஏராளமாய் பாக்கி வைத்திருப்பவர்களின் பட்டியலை வெளியிட்டது மத்திய அரசு. பட்டியலின்படி மூணரை கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கும் ஒருவர், இப்போது சிவசேனைக் கட்சி ஆதரவுடன் எம்.பி.யாக ராஜ்ய சபையிலேயே அமர்ந்திருக்கிறார். அவர் பிரபல பத்திரிகையாளர் பிரிதிஷ் நந்தி!

— எம்



**இரண்டு பேரும் மத்திய அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் போலவே (தாடி கூட அச்சாக அப்படியே!) இருக்கிறார்களே என்று ஆச்சரியப்படுகிறீர்களா? இதில் கேமிரா டிரிக் ஏதுமில்லை. மைக் முன் பேசுவது ராம்விலாஸ் பாஸ்வான்! பக்கத்தில் இருப்பவர் அவரது தம்பி சந்திர பாஸ்வான்!**

**— சி.எம்**

''என்ன... இன்னொருத்திக்குக் கடலை போடறீங்களா?''

''ச்சீ... வார்டன் கிட்டே மாட்டிக்கிட்டேன் அன்பு.''

டெலி சீரியல் போல வார்டன் மிரட்டியது மீண்டும் முழுமையாய் ஒலி, ஒளி பரப்பாகியது.

நற... நற... நற... நற என்று இருவரும் பல்லைக் கடித்தும் ஆத்திரம் அடங்கவில்லை.

''யாரு... சுவத்துல எல்லாம் எழுதறது அசோக்?''

அசோக் விழித்தான்.

''எனக்குத் தெரிஞ்சா அவனைச் சும்மா விடுவேனா!''

''அப்ப மொட்டைக் கடுதாசி. இப்ப சுவத்துல. யார் நம்ம காதலுக்கு வில்லன்?''

அசோக் கோவிந்துவையும், அன்பு மங்களநாயகியையும் நினைத்து மீண்டும் பல்லைக் கடித்தார்கள்.

''அவன் ஒண்ணாம் நம்பர் ஃப்ராடு. என்னை நண்பன்னு சொல்லிக்கிட்டே மனசுக்குள்ளே சகுனி மாதிரி திட்டம் போட்டிருக்கான். கூட இருந்து குழி பறிச்சிருக்கான்.''

பதிலுக்கு அன்பு குமுறினாள்.

''எவ்வளவு ஃப்ரெண்ட்லியா இருந்தேன். என்னோடது எல்லாம் அவளோடதுன்னு பங்கு போட்டிருக்கேன். என் காதலுக்கு மங்களம் பாடற நினைப்புல அவ இருந்திருக்கா!''

அசோக் அன்புவை உற்றுப்பார்த்தான்.

''நிச்சயமா உனக்கு மங்களத்து மேலதான் சந்தேகமா?''

''உங்களுக்கு கோவிந்து மேலதானா?''

அசோக் புலம்பினான்.

''தெரியலையே. அவனா இருப்பானோன்னு.''

''எனக்கும் புரியலையே. அவளா இருப்பாளோன்னு.''

''அடப் பாவிங்களா. இப்படித் தனியா மண்டை காய வுட்டுட்டாங்களே!''

குடைச்சலில் இருவரும் திகைத்து திக்பிரமித்து அமர்ந்திருந்தார்கள். தினசரி சந்திப்பில் வழக்கமாய்ப் பேசுகிற காதல் வசனங்களுக்கு இடமின்றி, 'யாரோ... யாரோடி உன்னோட வில்லன்?' என்று சந்தேகப் பேய் தலைவிரித்து ஆடியது.

ஒருபுறம் பார்த்தால் கோவிந்து.

மறுபுறம் பார்த்தால் மங்களம். இந்த அபூர்வ ராகத்திற்கு என்ன விடை?

''விட மாட்டேன்!''

அசோக் திடீரென உறுமினான்.

''இப்பவே போய் அவனைக் கிழிக்கறேன். உண்டு, இல்லைன்னு ஆக்கிடறேன். அவன் உண்மையைச் சொல்றவரைக்கும் விட மாட்டேன்.''

திரும்பி அன்புச் செல்வியைப் பார்த்தான், 'நீயும் பொங்கி எழு' என்கிற பாவனையில்.

தாவணியில் இருந்தவள் எழுந்து லாவணி பாடினாள்.

''நானும் விடப் போறதில்லே.''

குடிக்கப்படாமல் இருந்த கூல்ட்ரிங்கை விட்டு இருவரும் விலகி நடந்தார்கள் படபடப்புடன்.

அறைக்குள் இருந்த அவரவர் ரூம் மேட்டுகளுக்கு வலது, இடது கண்கள் துடிக்க ஆரம்பித்தன.

(தொடரும்)

காச்மூச்

ஆர்.எம். வீரப்பன்



# என் கோபம் பொல்லாதது!

நான் எதிலேயும் பர்ஃபெக்ஷனை எதிர்பார்ப்பவன். எம்.ஜி.ஆரோடு முப்பத்து நான்கு வருடங்கள் இருந்து அவரது நாடக, சினிமா விவகாரங்களைக் கவனித்து வந்தபோது 'இதைச் செய்.... அதைச் செய்' என்று அவர் ஒரு நாளும் என்னைச் சொன்னதில்லை. அப்படிச் சொல்லும்படி நான் வைத்துக்கொண்டதில்லை. அவர் என்ன எதிர்பார்க்கிறார் என்று எனக்குத் தெரியும். அவருடன் பழகியதில் புரிந்து கொண்டது அது. எனவே அவர் சொல்லுமுன்பே அதைச் செய்து விடுவேன்.

இன்று நன்றி, விசுவாசம், கடமையுணர்வு எல்லாமே நமக்குக் கீழ் வேலை செய்பவர்களிடமிருந்து எங்கோ ஓடி ஒளிந்து கொள்கிறது.

சம்பளம் வாங்குகிறவர்கள் தங்கள் கடமையைச் செய்வதில்லை. அட, 'நான் சொல்லாமலேயே நீ செய்ய வேண்டும் என்று கூட நான் எதிர்பார்க்கவில்லை. சொல்வதை ஒழுங்காய்ச் செய் போதும்' – ஆனால் அதில் கூட என் உதவியாளர்கள் தவறி விடும்போது எனக்குக் கோபம் பொங்கி விடும். கத்தி விடுவேன். அப்போது வார்த்தைகள்' கொஞ்சம் தாறுமாறாக வந்து விழும். எனக்கே அது தெரியும். இப்போது கொஞ்ச நாளாகக் கோபம் வரும்போது, 'குரல் எடுத்துப் பேசக் கூடாது' என்பதைப் பயிற்சி செய்து வருகிறேன்.

எதிலேயும் சுயநலம், லாபநோக்கு. என்னிடம் சம்பளம் பெற்றுக் கொண்டே சரியாக வேலை செய்யாதவர்கள், அதற்கு சால்ஜாப்பு சொல்பவர்களிடம் எனக்கு முதல் கோபம்.

என்னைச் சாராத, ஆனால் வெளியில் நடக்கும் சில அயோக்கியத்தனங்களைப் பார்க்கும் போதும் கோபம் வருகிறது. குறிப்பாக அரசியல் லாப நோக்கு ஒன்றை மட்டுமே பிரதானமாகக் கொண்டு அதற்காக எங்கும் யாரோடும் எப்படியும் சேரலாம் என்று முடிவெடுத்து அந்த முடிவுக்கு நியாயம் கற்பிக்கும் போது கோபம் வருவதைத் தடுக்க முடியவில்லை.

சந்திப்பு : **ராணிமைந்தன்**


படம் : **வெங்கடேஷ்**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

அருமையான உங்கள் வீடுகளுக்கு
அழகும் உறுதியும் நிறைந்த

# மாயூரம் டிம்பர்

## கதவுகள்



- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
- ★ ஈரப்பதம் குறைக்கப்பட்டது.
- ★ ரசாயன கலவை பாதுகாப்பு
- ★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு

**MADE TO ORDER BY:**

# MAYURAM TIMBER

**& General Trading Corpn.**

Showroom: 13, Rameswaram Road, T. Nagar, Chennai - 600 017.
Phone: 4345207

H.O.: 83, G.S.T. Road, Tambaram, Chennai - 600 045, Tel: 2368297

# 1-2-3

# ஈஸ்டர்ன் ஊறுகாய் பொடி

சுலபமான

இதோ! மிக எளிமையான முறையில் ஈஸ்டர்ன் ஊறுகாய்ப் பொடியைப் பயன்ப் படுத்தி உங்களுக்கு விருப்பமான ஊறுகாயைத் தயாரிக்கலாம், அதுவும் மூன்றே மூன்று நிலைகளில்




**நல்ல ஊறுகாய் தயாரிக்க ஈஸ்டர்ன் வழங்கும் டிப்ஸ் :**

ஈஸ்டர்ன் ஊறுகாய்ப் பொடியைப் பயன்படுத்தி எலுமிச்சை, பாகற்காய், வெள்ளைப் பூண்டு, நார்த்தை மற்றும் நீங்கள் விரும்பும் எதையும் ஊறுகாய்க்காகக பயன்படுத்தலாம். ●கொதிக்கும் நல்லெண்ணெய்யை பயன்படுத்தக்கூடாது. கொதித்து ஆறிய எண்ணெய் மற்றுமே பயன் படுத்தப்பட வேண்டும். ●எலுமிச்சையைப் பயன்படுத்தும் போது நல்லெண்ணெய் விட்டு எலுமிச்சையை ஒரு மூன்று நிமிடங்களுக்கு வதக்க வேண்டும். பிறகு அதனை ஈரம்போகத் துடைக்க வேண்டும் . பிறகே துண்டாக்க வேண்டும். ●உப்பில் ஊறவைத்த எலுமிச்சையைப் பயன் படுத்தினால் இந்த ஊறுகாயை உடனடியாகப் பயன்படுத்தலாம்.

"எனது சொந்த ஊறுகாய்"



**1**

இரண்டு கிலோ மாங்காயை சிறு துண்டுகளாக்கவும்.

**2**

ஒரு பாக்கட் ஈஸ்டர்ன் ஊறுகாய்க் பவுடரைச் சேர்க்கவும்.

**3**

அரைகப் நல்லெண்ணெய் சேர்க்கவும் ஈஸ்டர்ன் ஊறுகாய் தயார்.

EASTERN FOODS, Adimali - 685 561, Kerala, India

Team One/EF/0155